உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 27 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 11 ஞாயிற்றுக்கிழமை (27.11.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 001



இணைப்பு

சூ-01

'அந்த நாள்' ஞாபகம்



இணைப்பு

சூ-02

ஒரு தாயின் தேடல்



03

ஆட்டம் சமநிலையில்

## மாவீரர் தின நிகழ்வுகள் இன்று பல நாடுகளில்

லண்டன், நவ. 27

ஈழத் தமிழர் தாயகத்தில் இரண்டு தசாப்த காலமாக மிக உணர்ச்சிபூர்வமாகக் கடைப் பிடிக்கப்பட்டு வந்த மாவீரர்தினம் இம்முறை தாயகம் தவிர்ந்த ஏனைய நாடுகளில் பெருமெடுப் பில் கொண்டாடப்படுகிறது. தமிழகம் மற்றும் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் இதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட் டுள்ளன.

சென்னையில் விடுதலைச்சிறுத்தை கள்கட்சி மற்றும்திராவிடர்

பக். 15

# காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வீடு மீது அதிகாலையில் குண்டு வீச்சு

யாழ்ப்பாணம்,நவ.27

மாவீரர் தினத்தையொட்டி ஆல யங்களில் மணி ஓசை எழுப்ப இரா ணுவம் தடை விதித்த விடயத்தை பகிரங்கப்படுத்திய காரைநகர் பிர தேசசபைத் தலைவரின் திருநெல் வேலியில் அமைந்துள்ள வீட்டில் இனம்தெரியாத நபர்கள் பெற்றோல் குண்டுவீசி நேற்றுத் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

எனினும் பிரதேச சபைத் தலை வர் எதுவித ஆபத்துமின்றி தெய் வாதீனமாகத் தப்பியுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது:

காரைநகர் பிரதேசத்தில் மாவீரர் வாரத்தையொட்டி ஆலயங்களில் மணி ஒலி எழுப்ப இராணுவத்தினர் தடை விதித்திருந்தனர். இந்தச் செயலை காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே.ஆனைமுகன் 'உதயன்' மூலம் வெளிப்படுத்தியிருந்தார்.

அத்தோடு மக்களின் வழிபாட் டுக்கு இடையூறு விளைவிக்கும் இராணுவத்தின் இத்தகைய அடா வடித்தனத்தையும் அவர் கண்டித் திருந்தார். இந்தநிலையில் நேற்று அதிகாலை 1.30 மணியளவில் திரு நெல்வேலியிலுள்ள வீட்டில் அவர் உறங்கிக் கொண்டிருந்தபோது இனம்தெரியாத நபர்கள் அடுத் தடுத்து ஆறு பெற்றோல் குண்டு களை வீசித் தாக்குதல் நடத்தினர். பெரும் சத்தத்துடன் வீட்டு வளாகத்துக்குள் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன. இதனால்

பக். 15

# ராணுவ மிரட்டல், அச்சுறுத்தல்களால் மக்களை அடிபணிய வைக்க முடியாது

## பகையுணர்வுதான் தீவிரமாகும் என்கிறது கூட்டமைப்பு

யாழ்ப்பாணம், நவம்பர் 27

"இராணுவத்தினர் மிரட்டுவதாலும் அச்சுறுத் துவதாலும் பெற்றோல் குண்டுகளை விசுவதா லும் மக்களை அடிபணிய வைக்க முடியாது. இவற்றையெல்லாம் செய்வதால் பகைமை யுணர்வுதான் தீவிரமாகுமே தவிர, நல்லிணக்கம் ஒருபோதும் ஏற்படாது" என்று தெரிவித்துள்ளது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு.

மாவீரர் தினத்தையொட்டி நாடாளுமன்ற உறுப்பினரும் கூட்டமைப்பின் பேச்சாளருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் இதனைத் தெரிவித்தார்.

மாவீரர் வாரம் மற்றும் மாவீரர் தினத்தை யொட்டி வடபகுதியில் இராணுவத்தினரின் கெடுபிடிகள் அதிகரித்திருக்கின்றன. ஆலயங் களில் மணியோசை எழுப்பக்கூடாது, நவம்பர் 27ஆம் திகதி சுட்டி விளக்குகளோ நினைவேந் தல்களோ எரிக்கக்கூடாது போன்ற உத்தர வுகளை இராணுவத்தினர் பிறப்பித்துள்ளனர்.

காரைநகரில் இத்தகைய உத்தரவுகளை இராணுவத்தினர் பிறப்பித்தனர் என்று கூறிய பிரதேச சபைத் தலைவர் ஆனைமுகனின் திருநெல்வேலி வீட்டின் மீது நேற்று பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டன.

அதேவேளை, இராணுவத்தினர் இரவு நேரங்களில் தமது ரோந்து மற்றும் சோதனை நடவடிக்கைகளை அதிகரித்துள்ளனர். பல இடங்களில் இராணுவத்தினர் திடீர் சோதனை களிலும் ஈடுபட்டனர். இதனால் கடந்த சில நாள்களாக வடபகுதியில் சற்றுப் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது.

இத்தகைய மிரட்டல்களும் எச்சரிக்கைகளும் மக்கள் விரோதச் செயல்களும் தமிழ் மக்களை ஒருபோதும் அடிபணிய வைக்கப் போவ தில்லை என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார். பதிலாக வெறுப்பையும் கோபங்களையும் இவை கிளறும் என்றும் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பக். 15

27 ஆவது அகவையில் உங்கள் உதயன்

(28 பக்கச் சிறப்பிதழ் உள்ளே)

## போரில் இறந்தோரை நினைவு கூருவதை எவரும் தடுக்க முடியாது

-சரவணபவன் எம்.பி.

யாழ்ப்பாணம்,நவ.27

போரில் உயிரிழந்தவர்களுக்கு அஞ் சலி செலுத்துவது ஒவ்வொரு மனிதர் களுக்குமுள்ள தனிப்பட்ட உரிமை. இந்த உரிமையை எவரும் தடுக்கவோ, மறுக்கவோ முடியாது. உண்மைகளை வெளிக்கொணர முற்பட்ட காரைநகர் பிர தேச சபைத் தலைவர் மீது அடாவடித் தனமாக நிகழ்த்தப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதல் ஜனநாய கத்துக்கு விடுக்கப்பட்ட எச் சரிக்கையாகும். போர் முடிந்த பின்னும் இங்கு இயல்பு வாழ்வு

பக். 15

## பொன்சேகாவின் வழக்கு ஒத்திவைப்பு

கொழும்பு, நவ.27

நாடாளுமன்ற அமர்வுகள் மற்றும் நாடாளுமன்ற வாக்க ளிப்பு என்பவற்றில் பங்குபற்று வதற்கு தன்னை அனுமதிக்க வேண்டும் என்று கோரி முன் னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தாக்கல்செய்த மனு மீதானவிசாரணை டிசெம் பர் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன் றில் நீதிபதி ஆர்.எல். ரஞ்சித்சில்வா முன்னிலை யில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இவ்

பக். 15

# நிலையான அரசியல் தீர்வு ஒன்றே தமிழ் மக்களின் உடனடி எதிர்பார்ப்பு

## ஐரோப்பிய எம்.பியிடம் யாழ். ஆயர் வலியுறுத்து



யாழ்ப்பாணம்,நவ.27

யுத்தம் முடிவுற்ற நிலையில் இன் னும் இலங்கை அரசு இனப்பிரச்சி னைக்கு அரசியல் தீர்வு ஒன்றை முன் வைக்கவில்லை. தமிழ் மக்களின் ஒரே எதிர்பார்ப்பு சுயநிர்ணய உரிமை களுடன் கூடிய அரசியல் தீர்வே.

யுத்தத்துக்குப்பின்னர் வடக்கில் அபிவிருத்தித் திட்டங்கள் நடைபெற்று வரு கின்ற போதும் தமிழ் மக்களின் நெஞ்சங் களில் சந்தோஷம், திருப்தி ஏதும் இல்லை.

யாழ். ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண் டகை நேற்று தம்மைச் சந்தித்த ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பி னர் ஜியோப்ரேபான் ஓர்டனிடம் தெரிவித்தார்.

வடக்கின் குறிப்பாக யாழ். குடா நாட்டின் இன்றைய நிலைமை, தமிழ் மக்களின் அரசியல் எதிர்பார்ப்பு மற்றும் அபிவிருத்தி நிலைமைகள் குறித்தெல்லாம் ஐரோப்பிய நாடாளு மன்ற உறுப்பினரிடம் ஆயர் விலா வாரியாக விவரித்துக் கூறினார்.

ஆயரின் கருத்துக்களை நாடாளு

பக். 04

## வளிமண்டலவியல் திணைக்களம் மீது விசாரணை

கொழும்பு, நவ.27

நாட்டின் பல பகுதிகளிலும் நேற்று முன்தினம் ஏற்பட்ட இயற்கை அனர்த் தங்கள் குறித்து முன்கூட்டியே அபாய எச்சரிக்கை அறிவிப்பு விடுக்க வளிமண் டலவியல் திணைக்களம் தவறியுள்ளது.

இதனாலேயே இழப்புகள் அதிகரித் துள்ளன. எனவே இது தொடர்பில் விசேட விசாரணை நடத்தப்பட உள்ளது என்று அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரி வித்தவை வருமாறு:

இலங்கையில் பல பாகங்களிலும் கடந்த சில தினங்களாக நிலவிய சீரற்ற காலநிலையால் உயிர் , உடைமை இழப்புகள் ஏற்பட்டுள் ளன. குறிப்பாக தென்னிலங்கை

பக். 15

## நேற்று பிரபாகரனின் பிறந்தநாள் பல பகுதிகளில் கொண்டாட்டம்

யாழ்ப்பாணம்,நவ.27

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிர பாகரனின் 57 ஆவது பிறந்த நாள் கொண்டாட்டங்கள் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் அமைதி யான முறையில் இடம்பெற் றுள்ளன.

வட பகுதியில் கடும் பாது காப்புக்கு மத்தியிலும் பிரபாக ரனின் பிறந்த நாளுக்கு வாழ்த்துக் கூறும் சுவரொட்டி கள் சில பகுதிகளில் ஒட்டப் பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது.

மட்டக்களப்பில் வீதிகளில் சென்றோ ருக்கு இனிப்பு வழங்

பக். 15

## மின்சார இணைப்பில் தில்லுமுல்லு; யாழ். நகரில் 'பெருந்தலைகள்' சிக்கினர்!

### அதிரடிச் சோதனையில் 28 பேர் கைது!!

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ். நகர்ப்பகுதியில் மின்சார இணைப்புப் பெற்றவர்கள் சட்டவிரோதமான முறையில் - மின்மானி செயற்படாத வகை யில் - 'தில்லு முல்லு' நடவடிக்கையில் ஈடுபட்டு வந்த 28 பேர் நேற்றுக் கைது செய்யப்பட்டனர்.

கொழும்பிலிருந்து வந்திருந்த மின்சாரசபையின் விசேட விசாரணைப் பிரிவைச் சேர்ந்தவர்களுடன் யாழ். பொலிஸாரும் இணைந்து இந்த அதிரடிச் சோதனையை

பக். 16

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் மழைக்கான சாத்தியம் உள்ளது.

# கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கு அகில இலங்கை ரீதியில் 2ஆம் இடம்

## ஜனாதிபதி நினைவுச் சின்னம் வழங்கினார்

கொழும்பு, நவ. 27

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்ட முகாமைத்துவப் போட்டியில், முதன்முறையாக யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த கரவெட்டி பிரதேச செயலகம் இரண்டாம் இடத்தைப் பெற்றது.

யாழ். மாவட்டத்தில் சிறந்த பிரதேச செயலகமாகத் தெரிவு செய்யப்பட்ட கரவெட்டிப் பிரதேச செயலகமே தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைத் தனதாக்கிக் கொண்டது.

பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் தேசிய மட்டத்தில் வருடந்தோறும் முகாமைத்துவப் போட்டி நடத்தப்படுகிறது. மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெறும் பிரதேச செயலகங்களே இறுதிப் போட்டியில் கலந்து கொள்ளும்.

இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் கரவெட்டி பிரதேச செயலகம் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. அத்துடன் அது தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. முதலாம் இடத்தை அம்பாந்தோட்டை பிரதேச செயலகம் தட்டிச் சென்றது.

இவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு சனிக்கிழமை நேற்று காலை 10.30 மணியளவில் அலரி மாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் இரண்டாம் இடம்பெற்ற கரவெட்டிப் பிரதேச செயலகத்துக்கான நினைவுச் சின்னத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனிடம் கையளித்தார்.

கடந்த வருடம் தெல்லிப்பழை பிரதேச செயலகம் தேசிய மட்டத்தில் 13 ஆவது இடத்தையும், அதற்கு முன்னைய வருடம் ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனை 10 ஆவது இடத்தையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-15)

# மாணவனுக்கு அபராதம்

தென்மராட்சி, நவ. 27

பதிவு செய்யப்படாத வாகனம் செலுத்திய மாணவன் சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் செலுத்தினார்.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

வழக்கினை விசாரித்த நீதிவான் மா.கணேசராசா பாடசாலை மாணவன் என்பதால் ஆயிரம் ரூபா அபராதம் விதித்தார். இந்த வழக்கில் சட்டத்தரணி ச.சிவரூபன் ஆஜரானார்.

இதேவேளை - பதிவு செய்யப்படாத 49 சி.சி. மோட்டார் சைக்கிளை சாரதி அனுமதிப் பத்திரமின்றி செலுத்திய நபருக்கு 3 ஆயிரத்து 500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. (த-207)

# அதிவேகப் பாதையை இன்று ஜனாதிபதி திறந்து வைப்பார்

## யாழ். திணைக்களத் தலைவர்களுக்கும் அழைப்பு

கொழும்பு, நவ. 27

கொழும்பு - மாத்தளை இடையேயான அதிவேகப் பாதை இன்று ஞாயிற்றுக்கிழமை திறந்துவைக்கப்படுகின்றது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று காலை 9.27 மணிக்குப் பாதையை வைபவ ரீதியாகத் திறந்து வைக்கிறார்.

இந்தத் திறப்பு விழாவில் ஜப்பானின் விசேட தூதுவர் யசூசி ஆகாசியும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார்.

95.2 கிலோ மீற்றர் நீளமான இந்த அதிவேகப் பாதைத் திறப்பு விழாவில் வெளிநாட்டுத் தூதுவர்களும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த அதிவேகப் பாதைத் திறப்பு விழாவில் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்டத்தில் உள்ள அரச திணைக்களங்களுக்கும் அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன.

வீதி அபிவிருத்தி அதிகார சபை ஊடாக இந்தத் திறப்பு விழா அழைப்புகள் அனுப்பப்பட்டுள்ளன. இந்தத் திறப்பு விழாவில் கலந்துகொள்ள யாழ். அரச திணைக்களங்களின் தலைவர்கள் பலர் அங்கு செல்ல உள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது. (த-26)

## மணி அடிக்கக் கூடாது என்ற அறிவிப்புடன்

# ஆலயங்கள், அர்ச்சகர்களின் விவரம் மானிப்பாய் பகுதியில் நேற்று சேகரிப்பு

மானிப்பாய் பகுதியிலுள்ள கோயில்களில் இன்றும், நாளையும் (26,27 ஆம் திகதிகளில்) மணி அடிக்கக் கூடாது என்று நேற்று இராணுவத்தினர் அறிவித்திருக்கின்றனர்.

அதேசமயம் மானிப்பாய் பொலிஸார் ஆலயங்களின் விவரப்பட்டியலுடன் நேற்று சுதுமலைப் பகுதியிலுள்ள கோயில்களுக்குச் சென்று ஏதும் பிரச்சினைகள் இருந்தால் எமக்கு அறிவியுங்கள் என்று கூறியுள்ளனர். நேற்று கோயிலுக்குச் சென்ற பொலிஸார் கோயில்களின் பெயர், விவரம், அர்ச்சகர்கள் மற்றும் பூசை செய்பவர்களின் பெயர் விவரங்களையும் பதிவு செய்து எடுத்துச் சென்றனர்.

இராணுவத்தினர் மணி அடிக்கக் கூடாது என்கின்றனர். பொலிஸார் உயிருக்கு ஏதும் பிரச்சினை என்றால் எமக்கு அறிவியுங்கள் என்கின்றனர். நாங்கள் என்ன செய்வது என்று தெரியவில்லை'' என்று புலம்புகின்றனர் அர்ச்சகர்கள்.

''வருஷா வருஷம் இந்த மாவீரர் நாள்களில் இப்படியொரு தலையிடி; நாங்கள் என்ன செய்வது என்று தெரிவில்லை... இறைவா...'' என்று தங்களின் பரிதாப நிலையை வெளிப்படுத்தினார் மற்றொரு குருக்கள். (ஒ-115)

# சாவகச்சேரி நீதிமன்றில் டிசெம்பர் முதல் சமுதாய சீர்திருத்தப் பிரிவின் அலுவலகம்

தென்மராட்சி, நவ.27

சிறைச்சாலைகள் மற்றும் புனர்வாழ்வு அமைச்சின் சமுதாய சீர்திருத்தப் பிரிவின் அலுவலகம் வட மாகாணத்தில் முதல் தடவையாக சாவகச்சேரி நீதிமன்றில் டிசெம்பர் முதலாம் திகதி தொடக்கம் இயங்கவுள்ளது.

பொலிஸாரால் நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்படும் சட்ட விரோத சிறு குற்றச் செயல்களுக்கு நீதிமன்றினால் விதிக்கப்படும் அபராதத் தொகையினைச் செலுத்தப் பணபலம் இல்லாத நிலையில் சிறை செல்ல வேண்டிய நிலையில் உள்ளவர்களை இந்தப் பிரிவு பொறுப்பெடுத்து அவர்களைச் சிறைக்கு அனுப்பாமல் அவர்களின் உடல் உழைப்பின் மூலம் அபராதத் தொகைக்குரிய வேலைத் திட்டங்களை மேற்கொண்ட பின்னர் நீதிமன்ற அனுமதியுடன் அவர்களைவிடுதலை செய்ய ஏற்பாடுகள் மேற்கொள்ளும்.

இந்தப் பிரிவின் செயற்பாட்டினால் ஒவ்வொரு பிரஜையின் கௌரவம் பாதுகாக்கப்படுவதுடன் சிறு குற்றங்களுக்காகச் சிறை செல்வது தடுக்கப்பட்டு சிறைச்சாலைகளில் ஏற்படும் இடநெருக்கடியும் தவிர்க்கப்படுகிறது.

சிறு குற்றங்களுக்காக குறுகிய கால சிறைத்தண்டனை பெற்றுச் சிறைச் சாலைகளுக்குச் செல்வோர் அங்குள்ளவர்களின் தவறான வழிகாட்டலால் நிரந்தரமாகச் சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிக்கும் நிலை ஏற்படுகிறது.

சிறு குற்றங்கள் புரிவோர் சமுதாயத்தில் கௌரவமாக வாழ சமுதாய சீர்திருத்தப்பிரிவு பெரிதும் உதவக்கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

சாவகச்சேரி நீதிமன்றில் சமுதாயச் சீர்திருத்தப் பிரிவு இயங்கத் தொடங்கியதும் யாழ். மாவட்டத்தில் மட்டுமல்ல வட மாகாணத்திலேயே சிறு குற்றங்களுக்காக சிறை செல்வோரின் எண்ணிக்கை பெருமளவில் குறைந்து விடுமென எதிர்பார்க்கப்படுகிறது.

வட மாகாணத்திற்கான சமுதாயச் சீர்திருத்தப் பிரிவினை சாவகச்சேரி நீதிமன்றில் ஆரம்பிக்க மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா மேற்கொண்ட முயற்சி பாராட்டப்பட்டுள்ளது.

இவரது சேவைக் காலத்தில் சாவகச்சேரி நீதிமன்றில் சட்ட உதவி ஆணைக்குழுவின் அலுவலகம் அமைக்கப்பட்டு இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (த-207)

# ஆலயங்களில் மணி ஒலிக்கத் தடைவிதிப்பு அடிப்படை மனித உரிமை மீறலாகும்

## விஜயகலா எம்.பி கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்.குடாநாட்டில் ஆலயங்களில் மாலை 6 மணிக்குப் பின்னர் மணி ஒலிக்கக்கூடாது என்றும் தீவட்டி கொளுத்தக்கூடாது எனவும் விடுக்கப்பட்டுள்ள உத்தரவானது அடிப்படை மனித உரிமை மீறலாகும். இந்த நடைமுறை உடனடியாக நீக்கப்பட வேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில்:

கடந்த சில தினங்களுக்கு முன்னர் யாழ்.குடாநாட்டிலுள்ள ஆலயங்களுக்குச் சென்ற சீருடை அணிந்தவர்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் மணி ஒலிக்கக் கூடாது என்றும் தீவட்டி கொளுத்தக்கூடாது எனவும் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

இத்தகைய அறிவித்தலானது அடிப்படை மனித உரிமை மீறலாகும். குடாநாட்டில் பெருமளவான படையினரும், பொலிஸாரும் பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டுள்ளனர். யுத்தம் முடிந்து இரண்டரை வருடங்கள் கடந்து விட்ட நிலையில் குடாநாட்டில் அமைதி நிலவிவருகின்றது. இந்த நிலையில் இத்தகைய அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளமை தமிழ்மக்களின் குறிப்பாக இந்துக்களின் மனங்களைப் புண்படுத்தும் செயலாகும்.

மாவீரர் வாரத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளதாகத் தெரிகின்றது. எத்தகைய காரணமாக இருந்தாலும் ஆலயங்களில் மணி ஒலிக்க வேண்டாம் என்று அறிவிப்பது முறையற்ற நடவடிக்கையாகும். இத்தகைய செயற்பாடு மிகவும் கண்டிக்கதக்கது என்றுள்ளது. (ஒ)

# நிகழ்வுகள் இன்று

**நெற் செய்கையாளர் கூட்டம்**

தென்மராட்சி தெற்கு தனங்கிளப்புப் பிரதேச நெற்செய்கையாளர்களுக்கான கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு தனங்கிளப்பு சந்தியில் இடம்பெறவுள்ளது. கமக்கார அமைப்பின் தலைவர் சதானந்தன் தலைமையில் நடைபெறும் இந்தக் கூட்டத்தில் கட்டாக்காலி மாடுகளைக் கட்டுப்படுத்தல் தொடர்பான தீர்மானங்களும் எடுக்கப்படவுள்ளன. (த-207)

**மருத்துவ முகாம்**

சர்வதேச சமயங்களுடனான சமாதானப் பேரவையின் யாழ்.மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் இலவச மருத்துவ முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை புங்குடுதீவில் இடம்பெறவுள்ளது. யாழ்.போதனா வைத்திய சாலை விசேட வைத்திய நிபுணர்களால் இந்த மருத்துவ முகாம் நடத்தப்படவுள்ளது. இன்று காலை புங்குடுதீவு மகா வித்தியால யத்திலும், பிற்பகல் புங்குடுதீவு கமலாம்பிகை வித்தி யாலயத்திலும் இந்த நடமாடும் மருத்துவ சேவை இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-14)

**பயிற்சி வகுப்பு**

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் நிஸ்கோ பிரிவினால் யாழ்.மாவட்டப் பயனாளிகளுக்கான பயிற்சி வகுப்பின் இறுதிநாள் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு காங்கேசன்துறை வீதி, கோண்டாவில் அமைந்துள்ள வேதபாராயணம் சனசமூக நிலையக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது. (த-313)

**நூல் அறிமுக விழா**

காரைநகர் கார்த்திகேயப் புலவர் இயற்றிய ''திண்ணபுர அந்தாதி'' எனும் நூலின் அறிமுகவிழா இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொழும்பு தமிழ்ச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (த-313)

**செயலமர்வு**

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஜி.சி.ஈ. சாதாரண தர கணித விஞ்ஞான பாடங் களுக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியிலும் கைதடி முத்துக் குமாரசுவாமி வித்தியாலயத்திலும் கொடிகாமம் திருநாவுக்கரசு வித்தியாலயத்திலும் இடம்பெறவுள்ளன. (த-313)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் மீளக்குடியமர்ந்த மக்களை நேரில் சந்தித்தார் இத்தாலித் தூதுவர்

யாழ்ப்பாணம்,நவ.27

யுத்தத்தின் பின்னர் மீளக் குடியமர்ந்துள்ள வடபகுதி மக்கள் சந்தித்து வரும் முக்கிய பிரச்சினைகளை நேரில் சென்று அறிந்துள்ளார் இத்தாலித் தூதுவர் பபிறிசியோ ஒபியா ஆர்பியா.

இத்தாலியத் தூதுவர், கரிதாஸ் நிறுவனத்தின் இத்தாலிக்கான பிரதிநிதி விபி பேர்டன் சகிதம் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்தார்.

அன்றைய தினமே யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்கும் அவர் விஜயம் செய்து மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தில் வலிகாமம் வடக்கு மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளுக்குச் சென்ற இத்தாலித் தூதுவர் அங்குள்ள பொதுமக்களைச் சந்தித்து உரையாடினார். அத்துடன் தெரிவு செய்யப்பட்ட சிறுவர் இல்லங்களுக்கும் அவர் சென்றுள்ளார்.

யாழ்.ஆயர் இல்லத்தில் யாழ். ஆயரைச் சந்தித்த அவர் மீளக்குடியமர்ந் துள்ள மக்களது பிரச்சினைகள் தொடர்பாகக் கேட்டறிந்துள்ளார். ஆயருடனான சந்திப்பின் போது கரிதாஸ் - கியூடெக் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட் திரு ஜே.எக்ஸ்.பேர்னாட் றெக்னோ கலந்து கொண்டார். (த-14)

# பொங்கல் விழாக் கூட்டத்துக்கு எதிர்க்கட்சிக்கு அழைப்பில்லை

## மாநகர சபை உறுப்பினர் விந்தன் கண்டனம்

யாழ்ப்பாணம், நவ.27

யாழ்.நாவலர் மண்டபத்தில் கடந்த 23 ஆம் திகதி பொங்கல் விழா தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் எதிர்க்கட்சியினருக்கு அழைப்பு அனுப்பப்படவில்லை.

இது மாநகர சபை உறுப்பினர்களின் சிறப்புரிமையை மீறும் செயலாகும் என்று யாழ். மாநகர சபையின் எதிரணி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் கண்டனம் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டு ஜனவரி பொங்கல் விழாவை யாழ்ப்பாணத் திருவிழாவாகக் கொண்டாடுவது தொடர்பான கூட்டம் மாநகர சபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராஜா தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் மாநகர சபையின் ஆளும்தரப்பு பிரதிநிதிகள், ஆணையாளர், உத்தியோகத்தர்கள், அனுசரணையாளர்கள் கலந்துகொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் மாநகர சபையின் எதிரணியினர் அழைக்கப்படவில்லை.

இது தொடர்பாக விந்தன் மேலும் கூறுகையில்:

இது முதல்வரின் தன்னிச்சையான ஒரு செயல். மாநகர சபை உறுப்பினர்கள் கூடி எடுத்த முடிவல்ல. கடந்த காலங்களில் எடுக்கப்பட்ட விழாக்கள் ஒரு அரசியல் மயப்படுத்தப்பட்டதாகவே இருந்துள்ளது. அதனால் எதிரணியினர் அவற்றையும் புறக்கணிக்க வேண்டியிருந்தது.

அதற்காக இனிவரும் காலங்களில் நடக்கும் விழாக்களையும் புறக்கணிக்க வேண்டும் என்பதல்ல.

அரசியல் சாயம் பூசப்படாத விழாக்களைப் புறக்கணிக்க வேண்டியதேவை இல்லை. எமக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும். அதை ஏற்பதும் மறுப்பதும் கட்சி சம்பந்தப்பட்ட விடயம்.- என்றார். (த-7)



இரணைமடுக்குளத்துக்கு நீர் வரத்து அதிகரித்ததை அடுத்து அதன் பத்து வான் கதவுகளும் திறந்து விடப்பட்டன. இதனால் குளத்திலிருந்து வெளியேறும் மேலதிக நீர் வீதிகளை ஊடறுத்துப் பாய்கிறது. இதனால் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர்கொள்கின்றனர். (த-6)

# பரபரப்பான ஆட்டம் சமநிலையில்

இந்திய அணிக்கும், மேற்கிந்தியத்தீவுகள் அணிக்குமிடையிலான மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் பரப்பான சூழ்நிலையில் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இரு அணிகளும் ஏட்டிக்குப் போட்டியாக இலக்குகளை இழக்க ஆட்டம் சமநிலையில் நிறைவடைந்தது. நேற்றைய தினத்தில் மாத்திரம் 17 இலக்குகள் வீழ்த்தப்பட்டன.

இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் செய்து மேற்கிந்தியத்தீவு கள் அணி விளையாடிவருகின்றது. முதலில் இடம்பெற்ற 2 டெஸ்ட் ஆட்டங்களிலும் இந்திய அணி மேற்கிந்தியத்தீவுகள் அணியை வீழ்த்தியது. இந்த நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட் ஆட்டம் மும்பையில் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித் தது.

டரன் பிராவோவின் அதிரடி ஆட்டத்தின் உதவியுடன் மேற்கிந்தியத்தீவுகள் அணி முதல் இன்னிங்ஸில் 590 ஓட்டங்களைக் குவித்தது. அந்த அணி சார்பில் துடுப்பாட்டத்தில் டரன் பிராவோ 166, கிரிக் எட்வேட்ஸ் 86, கிரன் பவல் 81, பிறத்வெயிட் 68, பரத் 62, சாமுவேல்ஸ் 61 ஓட்டங்களைக் குவித்தனர். பந்து வீச்சில் இந்திய அணி சார்பில் அஸ்வின் 5 இலக்குகளை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி அஸ்வினின் சதத்தின் உதவியுடன் சகல இலக்குகளையும் இழந்து 482 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. அஸ்வின் 103, சச்சின் 94, டிராவிட் 82 , கம்பீர் 55, ஹோக்லி 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக ராம்போல், சாமுவேல்ஸ் தலா [illegible] இலக்குகளை வீழ்த்தினர்.

108 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய மேற்கிந்தியத்தீவு கள் அணி நேற்று முன்தினம் ஆட்ட நேர முடிவில் 2 இலக்குகள் நட்டத்துக்கு 81 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்த நிலையில் நேற்றைய இறுதிநாள் ஆட்டம் ஆரம்பமானது. ஆட்டம் ஆரம்பமான சிறிது நேரத்திலேயே இந்திய சுழற் பந்து வீச்சாளர்கள் மேற்கிந்தியத்தீவுகள் அணியை புரட்டி எடுத்தனர். பிறத்வெயிட் 35 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஆட்டத்தின் சரிவை தொடக்கி வைத்தார். டரன் பிராவோ 48, பவல் 11, சமி 10 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்ப மேற்கிந்தியத்தீவுகள் அணி 134 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. மேற்கிந்தியத்தீவுகளின் இறுதி எட்டு இலக்குகளும் நேற்றையதினம் மதியபோசன இடைவேளைக்கு முன்பதாக வீழ்த்தப்பட்டது. 43 ஓட்டங்களை மட்டுமே மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்றைய தினம் சேர்த்தது. பத்து இலக்குகளையும் இந்திய அணியின் இரு சுழற்பந்து வீச்சாளர்களும் கொய்து எடுத்தனர். ஓஜா 6, அஸ்வின் 4 இலக்குகளை வீழ்த்தினர்.

பதிலுக்கு 243 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடத் தொடங்கியது இந்திய அணி. மேற்கிந் தியத்தீவுகளின் பந்து வீச்சில் இந்திய அணியின் துடுப்பாட்ட வரிசையும் ஆட்டம் கண்டது. கம்பீர் 12 ஓட்டங்களுடன் வெளியேறினார். இதன் பின்னர் இணைந்த சேவாக், டிராவிட் ஜோடி வேகமாக ஓட்டங்களைக் குவித்தது. சேவாக் சிறப்பாக ஆடி தனது அரைச் சதத்தை பூர்த்தி செய்தார். இந்திய அணி 101 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் சேவாக் 60 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து டிரா[illegible], சச்சின் 3 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்திய அணி 113 ஓட்டங்களுக்கு 4 இலக்கு களை இழந்து தடுமாறியது.

இதன் பின்னர் இணைந்த லக்ஸ்மன், ஹோக்லி ஜோடி பொறுப்பாக ஆடியது. ஐந்தாவது இலக்குக்காக 52 ஓட்டங்கள் பகிரப்பட்டபோது லக்ஸ்மன் 31 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ஹோக்லி 63, டோனி 13, சர்மா 10 ஓட்டங்களுடனும் வெளியேற 239 ஓட்டங்களுக்கு 8 இலக்குகளை இழந்து தடுமாறியது இந்தியா.

வெற்றிக்கு 4 ஓட்டங்கள் தேவை, கைவசம் இரு இலக்கு, ஆட்டம் முடிவடைவதற்கு 2 பந்து பரிமாற்றங்கள் என்ற நிலையில், வெற்றி யார் பக்கமும் சாயலாம் என்ற பரபரப்பான சூழ்நிலையில் அஸ்வின், ஆரோன் துடுப்பெடுத்தாடினார். ஆட்டத்தின் இறுதிப் பந்தில் இரண்டு ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் அஸ்வின், பிடல் எட்வேட்ஸ் பந்தை எதிர்கொண்டார். ஒரு ஓட்டத்தை பெற்று விட்டு வெற்றிக்கு தேவையான இரண்டாவது ஓட்டத்தை ஓட முயற்சிக்கையில் 'ரன் அவுட்டானார்'. இதன் மூலம் பரபரப்பான ஆட்டம் சமநிலையானது. இந்திய அணி இரண்டாவது இன்னிங்ஸில் 242 ஓட்டங்களை மட்டுமே பெற்று ஆட்டத்தை சமநிலை செய்தது. மேற்கிந்தியத் தீவுகளின் சார்பில் பந்து வீச்சில் ராம்போல் 3, சாமுவேல்ஸ், பிஷூ தலா 2 இலக்குகளை வீழ்த்தினர். இதன் மூலம் இந்திய அணி 2-0 என்ற கணக்கில் தொடரைக் கைப் பற்றியது. (15)



அஸ்வின்

சச்சின்

### புது மாப்பிளையின் யோகமும் சச்சினின் சோகமும்

- தமிழகத்தைச் சேர்ந்த அஸ்வின் அண்மையில் திருமணம் முடித்திருந் தார். திருமணத்துக்கு அடுத்த நாளே டெஸ்ட் ஆட்டத்தில் கலந்து கொண்டார். இதன் பின்னர் இடம் பெற்ற இரண்டு டெஸ்ட் ஆட்டங்களில் கலக்கியதோடு தனது கன்னிச் சதத்தையும் அடித்திருந்தார். இதன் மூலம் ஆட்டநாயகன் மற்றும் தொடர் நாயகன் விருதையும் தனதாக்கிக் கொண்டுள்ளார். மறுபுறம் சச்சின் தொடர்ந்து நேற்றைய தினம் கிடைத்த வாய்ப்பையும் வீணடித்து சொந்த மண்ணில் ஏமாற்றினார்.

# சாவகச்சேரியில் கட்டாக்காலிகளை பிடிக்கும் நடவடிக்கை ஆரம்பம்

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் கட்டாக்காலியாக அலையும் ஆடு, மாடுகளை பிடிக்கும் பணியை நகர சபையினர் நேற்றுமுன்தினம் ஆரம்பித்துள்ளனர். மழை காலத்தில் கட்டாக்காலி ஆடு, மாடுகள் வீதிகளில் படுத்திருப்பதால் சிரமங்களை எதிர்நோக்குவதாக வாகன உரிமையாளர்களும், கட்டாக்காலி ஆடு, மாடுகள் இரவு வேளைகளில் வர்த்தக நிலையங்களில் தங்கி அசிங்கப்படுத்துவதாக வர்த்தகர்களும் நகரசபையில் முறையிட்டதையடுத்து இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கட்டாக்காலிக் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு கடந்த வாரம் ஒலிபெருக்கி மூலம் அனைத்து வட்டாரங்களிலும் அறிவிக்கப்பட்ட பின்னர் கட்டாக்காலியாக அலையும் ஆடு, மாடுகள் பிடிக்கப்பட்டு வருகின்றன. (த-7)

# நெடுந்தீவு இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு

யாழ்ப்பாணம்,நவ.27

நெடுந்தீவைச் சேர்ந்த இளைஞர்களுக்குக் கொழும்புத் துறைமுகத்தில் வேலை வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நெடுந்தீவுக் கடற்படை அதிகாரி கப்டன் சி.றூனா ரணசிங்க எடுத்த நடவடிக்கையை அடுத்து திருமணமாகாத நாற்பது இளைஞர்கள் கடந்த வெள்ளிக்கிழமை கொழும்புக்குச் செல்வதற்கென நெடுந்தீவில் இருந்து விசேட படகு மூலம் குறிகாட்டுவானுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். (த-7)

# கழிவுகளை அகற்றாத 14 பேருக்கு நீதிமன்றம் தண்டம்

நுளம்பு பெருகும் வகையில் சூழலில் கழிவுப் பொருள் அகற்றாமல் வைத்திருந்த குற்றத்துக்காக 14 பேரை 18 ஆயிரத்து 800 ரூபா தண்டப்பணம் செலுத்துமாறு மாவட்ட நீதிபதி அ.பிறேம்சங்கர் உத்தரவிட்டுள்ளார். யாழ்.மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் நுளம்பு பெருகும் வகையில் இளநீர் கோம்பை, பழைய ரயர், பிளாஸ்ரிக் பொருள்கள் ஆகியவற்றை அகற்றாமல் வைத்திருந்த குற்றத்துக்காகவே இவர்களுக்கு இவ்வாறு தண்டப் பணம் அறிவிடப்பட்டது. (த-14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
27 நவம்பர் 2011 ஞாயிற்றுக்கிழமை

## நிலையான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மன்ற உறுப்பினர் ஜியோப்ரேபான் ஒர்டன் கரிசனையுடன் கேட்டறிந்து கொண்டார்.இவர் தமது பாரியாருடன் யாழ். ஆயர் இல்லத்துக்குச் சென்றிருந்தார். அங்கு ஆயருடன் கலந்துயாடிய விடயங்கள் வருமாறு:-

யுத்தத்தின் பின்னர் அபிவிருத்தித் திட்டப் பணிகள் ஓரளவுக்கு திருப்தியளிப்பதாக உள்ளன. எனினும் இனப்பிரச்சினைக்கான நிரந்தர அரசியல் தீர்வை அரசு இன்னமும் முன்வைக்கவில்லை. அரசியல் தீர்வு விடயத்தில் அரசு இழுத்தடிப்புப் போக்கையே கொண்டுள்ளது. இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

இன்றைய அரசியல் நிலைமை, அரசின் போக்கு, அவர்களின் மன நிலையைப் பார்க்கும் போது தீர்வு கிட்டுவது சற்று கடினமாகவே தெரிகிறது. அரசியல் தீர்வுக்கு சர்வதேசத்தின் கரிசனை, இலங்கை அரசு மீதான அழுத்தம் அவசியம்.

அரசியல் தீர்வு முன்வைக்கப்பட்டால் நாட்டில் நீடித்த அமைதி ஏற்படும். நாட்டு மக்கள் நிம்மதியுடன் வாழ முடியும் - என்றார் ஆயர்.

இலங்கை வாழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதான நியாயமான - திருப்தியான அரசியல் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து இலங்கை அரசின் உயர் மட்ட அரசியல் பிரமுகர்களுக்கு நாங்கள் வலியுறுத்தி வருகிறோம் என்று அப்போது நாடாளுமன்ற உறுப்பினர் சுட்டிக்காட்டினார்.

நாட்டிலுள்ள சிறுபான்மை இன மக்கள் சரிசமமாக நடத்தப்பட வில்லை. பெரும்பான்மை இன மக்களின் நலனே அரசினால் முதன்மைப்படுத்தப்படுகிறது. இதனால் தமிழ் மக்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என யாழ். ஆயர் மேலும் எடுத்துரைத்தார்.

இந்த சந்திப்பு சுமார் 20 நிமிடங்கள் இடம்பெற்றுள்ளது.

பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர் யாழ். பொது நூலகத்துக்கு சென்று பார்வையிட்டார்.இரு தினங்களுக்கு முன்னர் யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரையும் அவரது அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.யாழ். நகர பகுதிக்குரிய இராணுவ அதிகாரி சகிதமே ஐரோப்பிய நாடாளுமன்ற உறுப்பினர் மக்கள் பிரதிநிதிகளை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார். இதனால் தற்போதைய நிலைமை தொடர்பாக மக்கள் பிரதிநிதிகளால் சுதந்திரமான முறையில் கருத்துக் கூறக்கூடியதாக இருக்கவில்லை என்று பல தரப்பினரும் தெரிவித்தனர். (ஒ-14)

---

# 105 ஆவது பிறந்த தினத்தில்
## ஆறாம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்



தோற்றம்: 27.11.1906  மறைவு: 03.07.2005

திருமதி
**சின்னம்மா நமசிவாயம்**
(மலாயன் ஓய்வூதியர்)

நீக்கமற எமதுள்ளத்தில்
என்றென்றும் நிலைத்திருக்கும்
வானுறையும் தெய்வத்துள்
வைக்கப்பட்ட எமதினிய
உறவுகளுக்கும்
இந் நன்னாளில் விழி நீர்
சொரிந்த இதய அஞ்சலிகள்
ஆண்டுகள் பலவானாலும்
ஆறாது நம் துயரம்

சந்திரன் இல்லாத வானம்
தாமரை இல்லாப் பொய்கை
மந்திரி இல்லா வேந்தன்
மதகரி இல்லாச் சேனை
சுந்தரப் புலவர் இல்லா
தொல்சபை சுதரில் வாழ்வு
தந்திகள் இல்லா வீணை
இவை யாவும் போல
எம் நிலையும் ஆளானதே
உங்களை இழந்ததனாலே
சந்ததமும் உங்கள் நினைவு
சாகாத நம் நினைவே

க.நந்திகா,
'இந்திரகிரி'
வதிரி, கரவெட்டி.
(சி-6184)(1,6,9)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

---

# மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 27.02.1934
உதிர்வு: 29.11.2008

திருமதி **சிவப்பிரகாசம் நகுலாம்பிகை**
(வேலணை மேற்கு)

உன்னைப்போல் ஒரு ஜீவனில்லை
மீண்டும் வேண்டும் அம்மா உந்தன் கருவறை

எஸ்.சிவம், 613,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
(10879) (1,6,9)

பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

---

# முதலாம் ஆண்டு நினைவுதினம்



திருமதி
**நாராயணக் குருக்கள் தேவசேனா**

மலர்வு: 04.07.1972
உதிர்வு: 08.12.2010
திதி: 27.11.2011

அன்புக்கோர் இலக்கணமாய் அவனியிலே உதித்தவளே
இன்னலுற்று தவிக்கின்றோம் இடை வழியில் சென்றதெங்கே
வாழ்வுதனில் நாம் உயர ஏணியென இருந்தவளே
விடிவெள்ளி நீங்கள் இப்போ
-வேறுஉலகம் புகுந்ததேனோ
உங்களது கடமைகளை உவப்புடனே செய்துவிட்டு
பலன் செழிக்கும் பொழுதினிலே பரனுலகை புகுந்தவரே
பண்ணு மிக்க உங்கள் ஆத்மா சாந்திதனை அடைந்திடவே
எமது தெய்வம் அருள்புரிய தொழுதுருகி நிற்கின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(10830)(1,6,9)

உபய கதிர்காமம்,
புலோலி தெற்கு, புலோலி.

என்றும் உங்கள் பிரிவால் துயருறும்
கணவர், பிள்ளைகள், உறவினர்

---

## வீடு விற்பனைக்கு

தெஹிவளையில் Galle Road இற்கு மிக, **அருகாமையில் அமைதியானதும்** பாதுகாப்பானதும் ஆன சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 3B/R, 2B/R, 1B/R வீடுகள் மிகவும் சாதாரண விலையில், எழிமையான கொடுப்பனவு முறையுடன் விற்பனைக்கு உண்டு. முன் பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேலதிக விபரங்களுக்கு
தொடர்பு கொள்க : 0777368764

## காணி விற்பனைக்கு

கைதடிச் சந்தியிலிருந்து 300 மீற்றர் தூரத்தில் பிள்ளையார் கோயில் றோட்டில் 4 பரப்புக் காணியும், கைதடி வடக்கு நவபுரத்தில் 6 பரப்புக் காணியும் வீடு கட்ட உகந்தன. நாவற்குழி, கோவிலாக்கண்டியில் 3½ ஏக்கர் கட்டட வேலைக்கு பயன்படுத்தும் வெள்ளை மணல் கொண்ட காணியும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: 0718432030

## கனடா, இத்தாலி, நாடுகளிற்கான Work Permits

- இத்தாலி நாட்டிற்கான Work Permit ஆவணங்களை புதன் கிழமைக்கு முதல் சமர்ப்பிக்கவும்.
- Schengen நாடுகளிற்கான Business, Tourist Visas and Resident Permits.
- UK Student Visa

அனைத்து நாடுகளிற்குமான அனைத்து வகையான விசாக்களுக்குமான பண வைப்புக்கள் சிறந்த வங்கிகளுனூடாக செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களிற்கு :

**Euro Profile**
16B, E.S. Fernando Mawatha, Colombo - 06
நாதன் - 0779874333 நிஷ்னா - 0778885903

## சேவை

புதிய கம்பனிகள் கூட்டிணைத்தல் (In corporation) வருடாந்த அறிக்கை சமர்ப்பித்தல்(Annual Returns) ஆகியவற்றிற்கு தொடர்பு கொள்க- 0777667488 sakthiel.mahes@gmail.com (C/6310)(9-6-8)

## தச்சு வேலையாள்கள் தேவை

தெஹிவளையில் நிர்மாணிக்கப்படும் தொடர் மாடிக்கு தச்சு வேலையாள்கள் (Carpenters) தேவை. தொடர்பு- ஜெயகுமார் 0777417237 (C/6308)(9-6-8)

## டிரைவிங்

ஒரு நாளில் அல்லது ஒரு கிழமையில் இருபாலருக்கும் Driving Licence செய்து தரப்படும். தூர இடங்களில் இருந்து வருபவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். தொடர்பு- 0775472468(கொழும்பு), 0775821521 (C/63089)(9-6-8)

## தேவை

கொழும்பில் சிறிய உத்தியோகத்தர் குடும்பம் ஒன்றில் தங்கியிருந்து சமையல் வேலை செய்வதற்கு ஆள் தேவை. தொடர்புகளுக்கு- 0777413990 (C/6311)(9-6-8)

## பதவி வெற்றிடம்

யாழ் நகரின் மத்தியிலுள்ள மொத்த சில்லறை பலசரக்கு வியாபார நிலையத்துக்கு கீழ் கண்ட பதவிகளுக்கு வேலையாள்கள் தேவை

1. பில்கிளார்க் (சிட்டை எழுதுநர்)
2. களஞ்சிய காப்பாளர் (ஸ்ரோர் கீப்பர்)

2 வருட அனுபவம் விரும்பத்தக்கது. போதிய ஊதியம் வழங்கப்படும்.

விண்ணப்பிக்கும் முகவரி
இல. 344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TP: 0777768835 (10826)(9-6-8)

## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நகரில் இயங்கும் பிரபல பலசரக்கு மொத்த சில்லறை வியாபார நிலையத்துக்கு சேல்ஸ்மன் (பொதி கட்டுபவர்)ஆண்கள் தேவை. இரண்டு வருட அனுபவம் விரும்பத்தக்கது. நிறைவான சம்பளம் வழங்கப்படும். விண்ணப்பிக்கும் முகவரி: இல. 344, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். தொடர்பு: 0777768835 (10827)(9-6-8)

## வீடு காணி விற்பனைக்கு

மல்லாகம் Church lane இல் மூன்று பரப்பு காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. 0754102813 (C/6313)(9-6-8)

## வாடகை

யாழ்ப்பாணம், வீடு, office வைக்கவும்/ Bank staffs stay பண்ணவும் வசதியான இடம். Vehicle parking உள்ளது.. 0757131027,0112360325 (C/6312)(9-6-8)

---

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பம் 1983, லண்டன் PR உள்ள, பூரட்டாதி 4ம் பாதம், கிரகபாவம் 52, 4 ல் செவ்வாய் உள்ள , 5'4'' உயரமுடைய மணமகனுக்கு பெற் றோர் தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றனர். (10876) (9-6-8)
தொடர்பு: 0212226429

## The Royal College of Jaffna

சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில 2 மாதங்கள் தனியாகவும் 3 ஆம் மாதம் மாணவர்களுடனும் ந.விக்னேஸ்வரன் ஆச்சாரி, 426 (302), கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம், பிரதான வீதி, சண்டிலிப்பாய், பிளாக் வீதி,சங்கானை.T.P: 0776751649

---

# 12 ஆம் ஆண்டு நினைவு நாள்



அமரர் திருநாமம் கணேசலிங்கம்
தோற்றம் 02 ★ 05 ★ 1960  மறைவு 27 ★ 11 ★ 1999

என் நன்றி கொன்றார்க்கு உய்வு உண்டாம்
உய்வில்லை செய்நன்றி கொன்ற மகற்கு

பாடசாலை வீதி,
சங்கரத்தை.

என்றும் உம் நினைவுடன்:
மகன், பெற்றோர்,
உடன்பிறப்புக்கள்.
(10877)(2-6-9)

---

# மரண அறிவித்தல்கள்

## ஆசீர்வாதம் பாக்கியம்



நேருடை, கற்றளையைப் பிறப்பிடமாகவும் இல.155, விவேகானந்த நகர், கிளிநொச்சியை வசிப் பிடமாகவும் கொண்ட ஆசீர்வாதம் பாக்கியம் (26.11.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கிளிநொச்சி திருநகர் பொது மயானத்தில் அடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
(14019)(2-6-9) கணவர் எஸ்.ஆசீர்வாதம், மகன் - ஜெஸ்ரின்

## திருமதி கனகரட்ணம் இரத்தினேஸ்வரி



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகரட்ணம் இரத்தினேஸ்வரி 23.11.2011 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் கனகரத்தினத்தின் (முன்னாள் உரிமையாளர், உரும்பிராய் மக்கள் கடை) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான இராசையா-பவளம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம்-தங்கம்மா தம்பதியரின் மருமகளும் நாகேஸ்வரி, தாமரைச் செல்வி, பிருந்தா, கலைச்செல்வி, காலஞ்சென்ற தயாபரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற கருணாமூர்த்தி மற்றும் ஜெயராஜ், இராஜசூரியர், நடராஜா ஆகியோரின் மாமியும் தமிழரசி, கலையரசி, ரஷ்மி, டனிலா, தயானா, அஜந், வினோத், நிரோஜன், யஷ்மினி ஆகியோரின் பேர்த்தியும் நிலேஷ், ஜிஸ்னு, அஜெய், சமந்தா, ஜெயராம், சஞ்ஜெய் ஆகியோரின் பூட்டியும் இராஜேஸ்வரி, புவனேஸ்வரி, காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் ஜெயபாலச் சந்திரன் ஆகியோரின் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று நண்பகல் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக பூதவுடல் வேம்பன் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலாபவனம்,
முதலாம் ஒழுங்கை, உரும்பிராய். (10834(3,6,9)
தகவல்:
குடும்பத்தினர்.

## கார்த்திகேசு ஜெயபதி
(துறைமுக சுங்கப் பரிசோதகர், கொழும்பு)



பாண்டியந்தாழ்வைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு ஜெயபதி (23.11.2011) புதன் கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - பூமணி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற அன்பு மற்றும் ஆசைக்கிளி தம்பிராசா - மகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் திலக்ஷனின் அன்புத் தந்தையும் நாகரத்தினம் காலஞ்சென்ற செல்லத்தம்பி மற்றும் சரஸ்வதி (பிரான்ஸ்), இராஜகோபால் (மதி), பரமசிவம் (பிரான்ஸ்), சிறீஸ்கந்தராசா நவீந்திரன் (பிரான்ஸ்), கெங்காதேவி ஆகியோரின் அருமைச் சகோதரனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் பராசக்தி (பிரான்ஸ்) காலஞ்சென்ற ஜோசேப்மணி மற்றும் ஜெயமலர் ப.புஸ்பராணி (பிரான்ஸ்), சி.புஸ்பராணி, மாலினி (பிரான்ஸ்), குலராஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.16/1, சிவன் பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம். (10878)(1,6)
தகவல்:
சகோதரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# மும்மொழி விருத்தித் திட்டத்துக்கு முன்பதாக ஜனாதிபதியின் கவனத்துக்கு

புதிய ஆண்டை - அடுத்த வருடத்தை - 2012 ஆவது வருடத்தை மும்மொழி ஆண்டாக இலங்கை அரசு பிரகடனப்படுத்த உள்ளது. இதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவே சமர்ப்பித்துள்ளார் என்பது செய்தி. 'ஆசியாவின் அதிசயம்' என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறுவதற்கு இந்தத் திட்டம் காத்திரமான அடித்தளமாக அமையும் என்பது ஜனாதிபதியின் தூர நோக்கு. மும்மொழி அறிவை நாட்டு மக்களிடையே விருத்தி செய்வதன் மூலம் நாட்டில் வாழும் வெவ்வேறு இனக்குழுமங்களிடையே நிலவும் வேறுபாடுகளைக் களைய முடியும் என்று நம்பிக்கை வைத்தே இந்தத் திட்டத்தை ஜனாதிபதி வகுத்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தத் தூரநோக்கு வரவேற்கப்படவேண்டியது; பாராட்டத்தக்கதுமாகும். காலம் கடந்தாவது மும்மொழித்திட்டம் முன்னெடுக்கப்படுவது நாட்டில் நல்ல பயன்களை உண்டாக்கும். அவற்றை மனதில் வைத்து ஜனாதிபதி தமது நோக்கத்தை, இலக்கை அடைவதற்கு வகை செய்தால் இப்போதைய பல பிணக்குகளைத் தகர்த்து எறியவும் வாசல் திறக்கும்.

இப்பத்தியில் பலப்பல தடவைகள் சுட்டிக்காட்டியது போன்று, இந்த நாட்டில் உண்டாகியுள்ள அரசியல், பொருளாதார, சமூக பிணக்குகளுக்கும், அவற்றின் ஊடான பின்னடைவுகளுக்கும் 1956 ஆம் ஆண்டில் நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டம் தான் மூல வேர் என்பதனை எவரும் மறுக்க இயலாது.

சகோதரர்கள் போன்று வாழ்ந்த சிங்களப் பெரும்பான்மை இனத்தவரையும் தமிழ்ச் சிறுபான்மை இனத்தவரையும் இரண்டாகக் கூறுபோட்டது தனிச்சிங்களச் சட்டமே. இந்த உண்மையை அல்லது யதார்த்தத்தை அறிந்திருந்தும் கடந்த பல தசாப்தங்களாக அது விளைவித்த எதிர்மறையான விளைவுகளை அறிந்திருந்தும் சிங்கள அரசியல் தலைவர்கள் அதனால் உண்டான ஆழமான புண்களை ஆற்றி நிலைமையை சீராக்க முனையவில்லை; மனங்கொள்ளவில்லை. ஏறெடுத்துப் பார்க்கவும் எண்ணவில்லை.

நிலைமை மோசமுற்று இரண்டு இனங்களுக்கும் இடையேயான முரண்பாடுகள் முற்றி, உரிமைப் போர் முகிழ்த்து, வெடித்து, உயிர் மற்றும் உடைமை அழிவுகளை உண்டாக்கி பல வழிகளிலும் நாடு பின்னோக்கி விழுந்த போதிலும் -

'சிங்களம் மட்டும்' விளைத்த பாதிப்புகளை மாறி மாறி ஆட்சிக்கு வந்த தலைவர்கள் அகற்ற முயலவில்லை. சிங்களம் மட்டும் சட்டத்தால் வந்த விளைவுகளை தக்க வைத்துக்கொண்டே ஆட்சி நடத்தினார்கள். தத்தமது எதிர்கால அரசியல் சுயநலன்களையும் தேர்தல் வெற்றிகளையும் முன்னிறுத்தியே செயற்பட்டார்கள்.

அதனால் தான் சிங்களம், மட்டும் சட்டத்தின் பிதாவான எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவின் மகள் சந்திரிகா குமாரதுங்க, இரண்டு தடவைகள் நிறைவேற்று ஜனாதிபதியாக பதவி வகித்த போதிலும், இனப்பிரச்சினைக்கு மூல வேராக அமைந்த சிங்களம் மட்டும் சட்டத்தின் பாதிப்புகளையும், அதன் பின்விளைவுகளையும் நீக்க முயலவில்லை. ஆனால் இப்போது காலம் பிந்திய ஞானமாக, ''இலங்கை இனப்பிரச்சினைக்கு மூல காரணமாக அமைந்தது என்னுடைய தந்தையார் கொண்டு வந்த தனிச்சிங்களச் சட்டம்'' என்று அமெரிக்காவில் வைத்து கழிவிரக்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் இறுதிப்போர் முடிவுற்ற பின்னர், இந்த நாட்டின் மீது, சர்வதேசத்தின் கண்கள் அகல விரியத் தொடங்கியுள்ளன. அதனால் மொழிப் பிரச்சினையைத் நீர்த்து விடச் செய்யும் ஓர் முயற்சியாக மும்மொழித் திட்டத்தை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வகுத்துள்ளார் எனலாம்.

இலங்கை மக்கள் தமது தொடர்பாடலை வினைத்திறனுடன் மேற்கொள்வதன் மூலம் பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்திக்கொள்ள முடியும். அதன் மூலம் வெவ்வேறான இனக் குழுமங்களுக்கு இடையேயான வேறுபாடுகள் களையப்படும். 'ஆசியாவின் அதிசயம்' என்ற இலக்கை நோக்கி முன்னேறுவதற்கு இது காத்திரமான அடித்தளமாக அமையும் என்பது ஜனாதிபதியின் தூரநோக்காக உள்ளது. அதில் தப்பில்லை. ஆனால் காலம் பிந்திய ஞானம் என்றே சொல்ல வேண்டும்.

இந்த நல்ல திட்டம் போதாகி, பூவாகி, காயாகி, கனிந்து பயன் பெறுவதற்குப் பத்து வருடங்கள் தேவைப்படும் என்று ஜனாதிபதி முற்கணிப்புச் செய்துள்ளார். பயன்தரவல்ல இத்திட்டம் செயலாக்கப்படுவதும் அதனால் நாடும், மக்களும் பயன் பெறுவதும் ஒரு புறம் இருக்க -

இனப்பிரச்சினைக்குரிய தீர்வைக் காண்பதற்கான முயற்சியில் - தமிழ் மக்களிடமிருந்து ஜனநாயகம் என்ற போர்வைக்குள் மறைத்து வைத்துப் பறித்தெடுக்கப்பட்ட அவர்களுக்குச் சேரவேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு முன்னுரிமை, முதலுரிமை வழங்கப்படவேண்டும். அதுவே இன்றியமையாதாத உடனடித் தேவையாகும்.

அவர் இப்போது தலைமைத்துவம் வகிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தென்னிலங்கையில் அமோக ஆதரவுள்ள காலம், வேளை இது. அந்தப் பலத்தை முன்னிறுத்தி தமிழர்களுக்குச் சேர வேண்டிய உரிமைகளை வழங்குவதற்கு மனச்சுத்தத்துடன், இதயபூர்வமாக முன்வரவேண்டும்.

அரசுடன் இணைந்திருக்கும் பல தரப்பினரும் தமிழர்களுக்குரிய நியாயமான உரிமைகளை வழங்காது சிங்களம் மட்டும் சட்டத்தின் பெறுபேறுகளான பாதகமான கூறுகளையே தோளில் போட்டுச் சுமக்கிறார்கள் என்பது வெளிப்படையானது. அவை காட்டும் பாழ் கிணற்றில் விழாமல் ஜனாதிபதி செயற்பட்டால் மட்டுமே, அவரது மும்மொழி விருத்தித் திட்டமும், ஆசியாவின் அதிசயம் என்ற இலக்கும் சாத்தியமாகும்.

ஜனாதிபதி அவ்வழியில் தடம் பதிக்க மனங்கொண்ட[illegible] யின் ஏனைய தேசியத் தலைவர்களை விட உயர்ந்த இட[illegible] கொள்வதற்கு வாய்ப்பு வருவது நிச்சயம்.

# மீண்டும் தொழிற் சங்க நடவடிக்கையா? பல்கலை ஆசிரியர் சங்கம் ஆலோசனை

கொழும்பு, நவ.27

பல்கலைக்கழகங்களின் ஆசிரிய சம்மேளனம் கடந்த ஜூலை மாதம் 21 ஆம் திகதியன்று நிறுத்தி வைத்த தொழிற்சங்க நடவடிக்கைகளை மீண்டும் ஆரம்பிப்பது குறித்து ஆலோசித்து வருகின்றது. அரசாங்கம் சம்மேளனத்துக்கு வழங்கிய உறுதி மொழிகளை நிறைவேற்றாமைக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாகவே இந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு பல்கலைக்கழகங்களின் சம்மேளனம் யோசித்து வருவதாக தெரிவித்துள்ளது.

சம்மேளனம் இது தொடர்பாக வெளியிட்டுள்ள ஓர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-
எமது தொழிற்சங்க நடவடிக்கையை நிறுத்தி வைத்தபொழுது நிலுவையிலுள்ள எமது கோரிக்கைகளை 2012 வரவு செலவுத் திட்டத்தின் மூலம் வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படாது போனாலும் தொழிற் சங்க நடவடிக்கைகள் மீண்டும் முன்னெடுக்கப்படும் என்று தெளிவாக அரசுக்கு தெரிவித்திருந்தோம்.

எமது இந்தக் கோரிக்கைகளை நடைமுறை படுத்துவதற்கான நியாயமான முயற்சி எதுவும் இம்முறை வரவு செலவுத் திட்டத்தில் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. பல்கலைக்கழக கல்வியாளர்களுக்கு வழங்கப்பட்ட உறுதிமொழிகளை நிறைவேற்றுவதிலிருந்து அரசு தவறியுள்ளது.

பல்கலைக்கழக கல்வியாளர்களின் அடிப்படைச் சம்பளத்தில் 20 வீதம் அதிகரிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வில்லை. அவர்களின் வீட்டு வாடகைத் திட்டத்தை விரிவுபடுத்தவும் தவறியுள்ளது. பல்கலைக் கழகத்தின் ஏனைய சேவைகளுக்கான விகிதங்களையும் அரசு அதிகரிக்கவில்லை. கல்வி மற்றும் உயர்கல்விக்கான செலவினங்களை அதிகரிப்பது தொடர்பாகவும் அக்கறை காட்டப்படவில்லை.

கடந்த சில வருடங்களாக பல்கலைக் கழகங்களின் சுயாட்சி உரிமையைப் பாதுகாக்க வழி செய்யுமாறு சம்மேளனம் கேட்டு வந்துள்ளது. சட்ட விரோத மற்றும் நியாய மற்ற தலையீடுகளுக்கு இடந்தர வேண்டும் என்றும் கேட்டு வந்துள்ளது. ஆனால் தனியார் பல்கலைக்கழகங்கள் நிறுவுதல் பல்கலைக்கழக விதிமுறைகளில் இடைக் கால திருத்தங்கள் செய்தல் போன்ற செயற்பாடுகளை ஆலோசனைகளுக்குட் படுத்தாமல் அதிகாரிகளால் செயல்படுத்தப் படும் நடைமுறைகள் பல்கலை மாணவருக்கு பயிற்சி அளிக்கவென பல்வேறு தகுதியற்ற திட்டங்களை துறை சார் சபைகள் மற்றும் செனட் சபைகளின் அனுதியின்றி ஏற்பாடு செய்துள்ளமை, பெருமளவில் இதற்கென பணம் செலவிடப்பட்டுள்ளமை போன்றவை செலவு அதிகரித்த நிறு வனங்களிடமிருந்து பாதுகாப்புச் சேவைகளைப் பெற்றுக் கொள்ளும்படி உயர் அதிகாரிகளின் வற்புறுத்தலுக்கு உட்பட்டு பெற்றுக் கொண்டமையாலும் கல்வியாளர் களையும் மாணவர் களையும் விரக்தியடையச் செய்துள்ளன.

இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வெளிநாட்டு வேலைவாய்ப்பு தருவதாக ஏமாற்றிப் பணம் வசூலித்த குழு கைது

கொழும்பு, நவ.27

கல்வி கற்கும் வாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்புப் பெற்றுக் கொள்வதற்காக வெளிநாடுகளுக்கு அனுப்பி வைப்பதாகக் கூறி போலியான விசா அனுமதிப்பத்திரம் மற்றும் விமானப் பயணச் சீட்டுக்களைக் காட்டி முன்னூறு பேர் வரையிலானவர்களிடம் கோடிக்கணக்கான பணம் வசூலித்து ஏமாற்றியதாகக் குற்றம் சாட்டி பொல்காவல பிரதேசத்தின் கோயில் பூசகர், அவரது உதவியாளர் மற்றும் கணினித் தொழிநுட்பவியலாளர் ஆகியோரை கொழும்பு குற்றத் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் கொட்டாஞ்சேனையில் வைத்துக் கைது செய்துள்ளனர்.

வடக்கு, கிழக்கு பிரதேசத்தைச் சேர்ந்த இளைஞர்கள் உட்பட வேறு மாவட்டங் களைச் சேர்ந்த இளைஞர்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் தலா 12 லட்சத்துக்குக் குறையாத தொகைப் பணத்தை இவர்கள் வசூலித் திருந்த போதிலும் அவர்களில் ஒருவர் தனும் இவர்களால் வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கப்படவில்லையெனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட பூசகரின் பெயரில் பேணப்பட்ட தனியார் வங்கிக் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்ட தொகைகளுக்கான பற்றுச் சீட்டுக்களின் அடிப்படையில் இனங்காணப்பட்ட குறிப்பிட்ட பூசகர் இரு தேசிய அடையாள அட்டைகளைத் தமது பெயரில் பயன் படுத்தி வந்ததாகவும், அவற்றில் அவரது பெயர் சிவா என்ற சுந்தரம் சிவநேசன் என பௌர் குறிப்பிடப்பட்டுள்ளதாகவும் மேலும் பொலி ஸார் தெரிவித்துள்ளனர்.

மூடப்பட்டுவிட்ட வெளிநாட்டு வேலை வாய்ப்பு நிறுவனமொன்றின் பெயரைப் பயன் படுத்தி போலி தேசிய அடையாள அட்டைகளைத் தமது உதவியாளர்களுக்கு அவர் தயாரித்துக் கொடுத்திருந்ததாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். அத்துடன் மேற்குலக நாடு களின் உயர்ஸ்தானிகராலயங்களின் பெயரில் போலி ஆவணங்களைத் தயாரித்து வழங்கி வடக்கு கிழக்குப் பகுதி இளைஞர்கள் பலரிடம் பெருந்தொகைப் பணத்தைக் குறிப்பிட்ட பூசகர் பெற்றுக் கொண்டுள்ளமை தெரிய வந்திருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

குறிப்பிட்ட பூசகருக்கு எதிராக இத் தகைய குற்றச் செயல்கள் தொடர்பாக ஏற்கனவே நாட்டின் பல பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் நீதிமன்ற வழக்கொன்றும் விசாரணையில் உள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். குறிப்பிட்ட பூசகரின் உண்மையான பெயர் மற்றும் விலாசத்தைத் தற்போது தாம் கண்டுபிடித்துள்ளதாகவும் மேற்கொண்டு விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (த-ஞ)

# துறைமுக அதிகார சபைக்கு 106 கோடி ரூபா நட்டம்

கொழும்பு, நவ.27

கடந்த நிதியாண்டில் துறைமுக அதிகார சபைக்கு 106 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோகித அபேகுணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஜனநாயக தேசிய முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் அனுரகுமார திஸநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கும் வகையிலேயே பிரதி அமைச்சர் மேற்குறிப்பிட்ட தகவலை வெளிப்படுத்தியுள்ளார்.

இதுகுறித்து பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது;

ஜப்பானிடமிருந்து கிடைத்த கடன் தொகைக்கு அமைவாக துறைமுக அதிகார சபையின் பதிவேடுகள் மற்றும் திறை சேரியின் பதிவேடுகளை ஒப்பிட்டுப் பார்த்த வேளை ஏற்பட்ட வெளிநாட்டு நாணய மாற்று விகித வேறுபாடே இத்தகைய நட்டத்துக்கான காரண மாகும். துறைமுக அதி காரசபை கடந்த நிதியாண்டில் 2828 கோடி ரூபா இலாபம் ஈட்டி யிருந்த போதிலும், அதிகார சபையின அவ் வாண்டுக்கான முழுச் செலவினம் 2953 கோடி ரூபாவாகும் எனவும் பிரதி அமைச்சர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டில் கொழும்புத் துறைமுகத்துக்கு மட்டும் 2928 கப்பல்கள் வந்து சென்றதாகவும், 21 லட்சத்துக்கு மேற்பட்ட ''கொன்ரெயினர்'' பொருள்கள் இறக்கி ஏற்றும் பணியில் இடம்பெற்றதாகவும் பிரதி அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார். (க-ஞ)

**நாளை**

கார்த்திகை 12, திங்கட்கிழமை 28.11.2011
திதி: திருதியை காலை 7.35 வரை
நட்சத்திரம்: பூராடம் பி.இ. 12.25 வரை, சதுர்த்தி விரதம்
சுபநேரம்: 12.13-1.43 வரை, ராகு காலம்: 7.43-9.13 வரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க அறிவித்தல்

## யாழ்.மாவட்டச் செயலகம், சகல பிரதேச செயல கங்கள், உதவி அரசாங்க அதிபர் பணி மனைகள் என்பவற்றுக்கான

### வழங்குநர்களையும், ஒப்பந்தக்காரர்களையும் பதிவு செய்தல் - 2012

யாழ்ப்பாண மாவட்டச் செயலகத்துக்கும், சகல பிரதேச செயலகங்களுக்கும்/ உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளுக்கும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் பொருள் கள், சேவைகள் வழங்குவதற்கு விருப்பமுடைய வழங்குநர்கள்/ ஒப்பந்தக் கார்கள், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் என்பவற்றிடமிருந்து 2012 ஆம் ஆண்டுக் கான பொருள்கள் சேவைகள் வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இதற்கான விண்ணப்பப் படிவங்களை மாவட்டச் செலயக களஞ்சிய நலன்புரிக் கிளை, சகல பிரதேச செயலகங்கள் மற்றும் உதவி அரசாங்க அதிபர் பணிமனைகளில் 23.11.2011 தொடக்கம் 23.12.2011 வரை அலுவலக நாள்களில் காலை 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரையும் பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தைக் கடித உறையின் (9x4) இடது பக்க மேல் மூலையில் ''வழங்கல்கள்/ சேவைகள் பதிவு செய்தல் - 2012 '' எனக்குறிப்பிட்டு தபாலில் அனுப்புவதாயின் '' அரசாங்க அதிபர், களஞ்சிய நலன் புரிக்கிளை, மாவட்டச் செல்யலகம், யாழ்ப்பாணம்'' என்னும் முகவரிக்கும் நேரடியாகக் கையளிப்பதாயின் மாவட்டச் செலயகத்தின் களஞ்சிய நலன்புரிக் கிளையிலும் 23.12.2011 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**வழங்கல்கள்**

01. காகிதாகிகள், எழுது பொருகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருள்கள்
02. தளபாடங்களும் அலுவலக உபகரணங்களும் (மரம்/ உருக்கு).
03. கணினிகள், கணினியுடன் தொடர்புடைய ஏனைய இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள்/ போட்டோக்கொப்பி இயந்திரங்கள்/தொலை பேசிகள்/ தொலை நகல்கள் / தட்டச்சு இயந்திரங்கள் இவற்றுடன் தொடர் புடைய ரோனர்கள், றிபன்கள் மற்றும் ஏனைய அலுவலக தளபாடங்கள்.
04. இயந்திரக் கருவிகளும் அதன் உதிரிப்பாகங்களும்
05. ஜன்னல் திரைச்சீலைகள், சீருடைகள் மற்றும் துணி வகைகள்
06. மின்சார பொருள்களும், அதன் உதிரிப்பாகங்களும் மற்றும் அவற்றுடன் தொடர்புடைய பொருள்களும்.
07. கட்டட இரும்புப் பொருள்கள் , தீந்தை, வாணிஸ் மற்றும் சகல ஹாட் வெயார் பொருள்களும்.
08. தும்புத்தடி, விளக்குமாறு கால் துடைப்பங்கள, மொப்பர்கள், வைப்பர்கள்,
09 . கார்பிக், விம், பினோல், சவர்க்காரம், மாபிள், அசிட், குளோறின், எயார் பிறஷ்னர்கள் (Air Fersher)
10 . நீர் இறைக்கும் மோட்டார்கள், அதன் உதிரிப்பாகங்கள் மற்றும் துணை உறுப்புக்களான பைப், பெண்ட், சொக்கற் வகைகள்.
11. மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் மற்றும் டயர், டியூப்புகள், பற்றரிகள்,
12. பிளாஸ்ரிக் பைபர் கிளாஸ் உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களான கதிரை, மேசை போன்ற பொருள்கள்.
13. பால்மா வகைகளும் பிளாஸ்ரிக் குவளை வகைகளும் (Nescafe Premix, Nestea & Disposal Cups, Ect. )
14. கட்டட மற்றும் வாகன வளி பதனாக்கி (A/C)
15. தோல் வகை உற்பத்திப் பொருள்கள்.
16. விளையாட்டுப் பொருள்களும் அதனுடன் தொடர்புடைய பொருள்களும்.
17. கல், மண் வகைகள் உற்பத்தி செய்யப்பட்ட கட்டடப் பொருள்கள்.
18. உலர் மின்கலப் பொருள் வகைகள்.
19. ஒலிபெருக்கி சாதனங்களும், ஒலிவாங்கி சாதன்ங்களும் மற்றும் அவற் றுடன் தொடர்புடைய பொருள்களும்.

**சேவைகள்/ திருத்தங்கள்.**

01. கட்டட நிர்மாணம் மற்றும் கட்டட வேலைகள் மற்றும்சேவைகள் (Services)
02. மோட்டார் வாகனங்கள் திருத்த வேலை/ சுத்திகரிப்பு வேலைகள், பற்றரி திருத்த வேலைகள் (Services)
03. அச்சிடுதல், இறப்பர் ஸ்ராம்புக்கள்,திகதி ஸ்ராம்புக்கள்.
04. அலுவலக அடையாள அட்டைகள் (Plastic)
05. அலுவலக இயந்திரங்கள் மற்றும் சாதனங்கள் திருத்தவேலைகளும் பராமரிப்புகளும் (கணினிகள், கல்குலேற்றர்கள்/ றோணியோ இயந் திரங்கள்/ போட்டோக் கொப்பி இயந்திரங்கள்,தொலைநகல்கள், கல் குலேற்றர்கள்/ தட்டச்சு இயந்திரங்கள் போன்றன.
06. குளிர்சாதனப்பொட்டிகள்,எயார்கொண்டிசனர்கள் திருத்த வேலைகளும் பராமரிப்புகளும்.
07. மர, உருக்குத் தளபாட திருத்த வேலைகள்.
08. பெயர் பலகைகள் வரைதலும் பிளாஸ்ரிக் பெயர் பலகைகள் (3D உட்பட ) செய்தலும்.
09. உள்ளகத் தொலைபேசித் திருத்த வேலைகளும், பராமரிப்புக்களும் (Services)
10. மின் மோட்டார்கள், நீர் இறைக்கும் இயந்திரங்கள், மின் விசிறிகள், ஜெனரேட்டர்கள் திருத்துதல் மற்றும் பராமரித்தலும் மீள்முறுக்குதலும் (Winding)
11. மின்சார வயறிங் வேலைகள், கணினி வலைப்பின்னல் வேலைகள் மற்றும் சேவைகள்,
12. நீர் வழங்கும் குழாய்கள் பொருத்துதல் மற்றும் திருத்துதல்.

**பதிவு தொடர்பானவை.**

**மாவட்டச் செயலகத்தில் பொருள்கள் சேவைகள் வழங்குதல் தொடர்பாகப் பதிவு களை மேற் கொள்பவர்களிடம் இருந்தே 2012 ஆம் ஆண்டுக்கான பொருள்கள் சேவைகளுக்கான கூறுவிலைகள் பெறப்படும் என்பதால் மாவட்டச் செயலகங் களுக்கோ, சகல பிரதேச செயலகங்களுக்கோ, உதவி அரசாங்க அதிபர் பணிமனை களுக்கோ, மாவட்டச் செயலகத்துடன் இணைந்த திணைக்களங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கோ பொருள்கள் சேவைகள் வழங்க விருப்பமுடையவர்கள் மாவட்டச் செயலகத்தில்/பிரதேச செயலகத்தில் / உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் விண்ணப்பத்தைப் பெற்று, பதிவுகளை மேற்கொள்வதற்காகப்பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தை மாவட்டச் செயலகத்துக்கு அனுப்பி வைக்குமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றேன்.**

திரும[illegible]
மாவட்டச் செயலரும், [illegible]
மாவட்டச் செயலகம்,யாழ்ப்பாணம்.

(சி/6127)(3.6.9)

## அபராதம் விதிப்பு

யாழ்.பிரதேசத்தில் 21 வயதுக்குக் குறைந்தவர் களுக்கு புகையிலை உற் பத்திப் பொருள்கள் விற் பனை செய்த வர்த்தகர்கள் மதுவரித் திணைக்கள உத்தியோகத்தரிடம் வச மாக மாட்டிக்கொண்டனர்.

இந்த வர்த்தகர்கள் 14 பேருக்கு எதிராக மது வரித் திணைக்கள யாழ்ப் பாண அலுவலகப் பொறுப் பதிகாரி என்.கிருபாகர னால் யாழ். நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப் பட்டன. வழக்கு களைத் தனித் தனியாக விசாரித்த நீதிவான் ஏ.ஏ.ஆனந்த ராசா வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து தலா 4 ஆயிரம் ரூபா அப ராதம் விதித்தார்.

வரலாற்றில் முதல் தடவையாக கிளிநொச்சியில்

இலங்கைச் சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்பு - 2012

விரிவுரைகள்
இலங்கைச் சட்டக்கல்லூரி அனுமதிப்பரீட்சைக்கான வழிகாட்டல் வகுப்புகளிற்கு கடந்த பத்து வருடங்களிற்கு மேலாக கொழும்பு தமிழ் சங்கத்தில் விரிவுரைகளை நிகழ்த்தும் விரிவுரையாளர்களினால் விரிவுரைகள் நடாத்தப்படும்.

தகமைகள்
1. க. பொ. த சாதரண தரத்தில் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் C
2. க. பொ. த உயர்தரத்தில் மூன்று பாடங்களும் சித்தி அல்லது இவ் வருடம் உயர்தரப் பரீட்சை எழுதியவர்கள்.
3. 35 வயதிற்கு உட்பட்டவர்கள்.

விசேட கவனத்துடன் கூடிய மதிப்பீடுகள் கடந்த கால வினாத்தாள்களை உள்ளடக்கிய மீட்டல் பயிற்சிகள் மற்றும் மாதிரிப்பரீட்சைகள்

அனைத்து மாணவர்களின் நலன் கருதி
(கிளி/மத்தியகல்லூரி முன்பாக)

2000/=
விரிவுரைகள் ஆரம்பம் 03-12-2011 சனி காலை 9.00 - 1.00 வரை
அனுமதிக்கு முந்துங்கள்

கொழும்பு தமிழ் சங்கத்தில் விரிவுரைகள் நடாத்தும் அதே ஆசிரியர் குழாம்

தொடர்புகளுக்கு:
ACS TECHNOLOGY SYSTEM,
No. 16, A - 9 Road,
Ananthapuram,
kilinochchi.
077 - 6757870,
077 - 4372004,
077 - 7930709

ACS



## 31 ஆம் நாள் நினைவலைகள்

### திருமதி நடராசா யோகம்மா

மலர்வு 12.02.1942 உதிர்வு 29.10.2011



**அந்தியேட்டி : 27.11.2011 காலை 6.30**
**சபிண்டிக் கிரியை : 28.11.2011 முற்பகல் 11.00**
**இடம்: கோவிற்கடவை, துன்னாலை மத்தி.கரவெட்டி**

துன்னாலை வடக்கு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் கோயிலின் அறங்காவலர் சபை உறுப்பினர் சி.நடராசாவின் அன்பு மனைவி திருமதி யோகம்மா அவர்கள் இறைவனடி சேர்ந்த31 ஆம் நாள் நினைவு அன்று எமது அஞ்சலியைச் செலுத்தி அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல வல்லிபுர ஆழ்வாரைப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
துன்னாலை வடக்கு, புலோலி.

ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்
குருமார்களும் அறங்காவல்
சபையினரும் மகாசபையினரும், பணியாளர்களும்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்

## வீட்டுக்கிருத்திய அழைப்பும்



எங்கள் செல்லம்மா
சிங்கத்தின் குகைசென்று
எமை மீட்ட அம்மா
புலியாய் நீரிருந்து
எம்மையெல்லாம் காத்திட்டீர்
காலனிடமிருந்து உமை மீட்க
எம்மால் முடியலையே!
பிள்ளைகளே உயிரென்றிருந்த
எம் அம்மாவுக்கு உயிர் கொடுக்க
எம்மால் முடியலையே
மீள முடியவில்லை
உம்பாசம் எம்மை மீள விடவில்லை

### திருமதி சிவஸ்கந்தா சரோஜினிதேவி

(ஓய்வு பெற்ற தொலைபேசி இயக்குநர், சிறீலங்கா ரெலிகொம்)

மலர்வு: 14.09.1941
உதிர்வு: 28.10.2011

28.10.2011 ஆம் நாளன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவியின் மறைவுச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியோருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும் கண்ணீர் அஞ்சலி வெளியிட்டோருக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவிபுரிந்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் நன்றியறிதலைத் தெரிவிப்பதோடு இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை எமதில்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய உணவிலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

[illegible] மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

(10748) (1-6-9)

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Baby Cheramy

# அன்பும் பரிசும்



அல்டோ கார்கள் 3



தங்க மாலைகள் 60



ஸ்கூட்டி பெப்கள் 6



கையடக்கத் தொலைபேசிகள் 60

## அன்புடன் பொழியும் பரிசுகள் உங்களுக்காகவே !

### எப்பொழுதுமே தூய அன்பை மட்டும் வாரி வழங்கும் பேபி ஷெரமியிடமிருந்து உங்கள் வாழ்வை மெருகூட்டும் பரிசு மழை

ஒவ்வொரு மாதமும் குலுக்கலில் கீழ்வரும் பரிசுகளைப் பெற்று கொள்ளுங்கள்

1வது பரிசு - சுசுகி அல்டோ கார் 2வது பரிசு - ஸ்கூட்டி பெப் 2

3வது பரிசு - தங்க மாலைகள் 20 4வது பரிசு - கையடக்கத் தொலைபேசிகள் 20

**போட்டி விதிமுறைகள்**

1. குலுக்கலில் வெல்லப்படும் பரிசுகளுக்கு பதிலாக எந்தவொரு பணப்பரிசும் கிடைக்கப்பெறமாட்டாது.
2. பரிசினது வடிவம், நிறம் என்பன கையிருப்புக்கு ஏற்ப வேறுபடலாம்.
3. பரிசுகள் வழங்கப்பட்ட பின், பரிசுகளின் உத்தரவாதத்தை ஹெமாஸ் நிறுவனம் பொறுப்பேற்காது

இப்போட்டியில் ஹேமாஸ் நிறுவனம், சர்வா இன்டிகிரேட், பீனிக்ஸ் O&M ஊழியர்களும் அவர்களின் குடும்ப அங்கத்தினர்களும் பங்கு பெற முடியாது. இவர்களை தவிர்த்து ஏனைய இலங்கை பிரஜைகள் பங்கு பெறலாம்.

**குலுக்கல் நடைபெறும் திகதிகள்**

முதலாவது குலுக்கல் 2011 டிசம்பர் 15
இரண்டாம் குலுக்கல் 2012 ஜனவரி 15
மூன்றாவது குலுக்கல் 2012 பெப்ரவரி 15

**போட்டியில் கலந்துகொள்ளும் முறை**

பேபி ஷெரமி சவர்க்கார உறைகள் 2 ம் கிறீம் லேபில் 1ம் உங்கள் பெயரையும், முகவரியையும் எழுதி கீழ்காணும் முகவரிக்கு அனுப்புங்கள்.

**“பேபி ஷெரமி, அன்பும் பரிசும்”**
**த.பெ. இல. 2285, கொழும்பு**

WP / GT / 3408




Baby Cheramy
தூய அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துக

# யாழ் இந்து ஆரம்ப

முதல் 25 மாணவர்க

மற்றும் பரீட்சைக்கு



**லோ. டிலோஷன்**
191 புள்ளிகள்
மாவட்ட நிலை 02



**ப. பவதாரகன்**
190 புள்ளிகள்
மாவட்ட நிலை 04



**இ. மாதங்கி**
188 புள்ளிகள்
மாவட்ட நிலை 09


தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை 2011 இல் 111 மாணவர்களைச் சித்தியடையச் செய்ததன் மூலம் யாழ். மாவட்டத்திலும் வடக்கு மாகாணத்திலும் அகில இலங்கையிலும் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாக இருப்பதற்குக் கடின உழைப்பால் உயர்வுகள் பெற வைத்த அதிபர், உபஅதிபர், பகுதித் தலைவர்கள், தர இணைப்பாளர்கள், ஆசிரியப் பெருந்தகைகள் அனைவரையும் மனம் நிறைந்து நன்றியுணர்வோடு பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.



சி. தனலக்ஷன் 187 · சு. மிருதி 186 · அ. தமிழ்ப்பிரியா 183 · சி. தனுஸ்ரன் 183 · இ. கலைநிலா 182



இ. திஷோக் 179 · ஜோ. சார்ள்ஸ் 179 · வி. துவாரகன் 178 · த. கஜானன் 177 · உ. சுதர்சன் 177



ச. லக்ஷன் 173 · ப. நிலாஜன் 173 · ஜ. திவ்வியனி 173 · தே. சிவவருணன் 173 · சி. திவாகரன் 172 · சி. மனாமிர்தன் 172 · இ. அபிநயன் 172 · க. தர்ஷனா 172 · பே. விஷ்ணுகா 171 · கு. அபிஷரன் 171



பா. பிரவீன சர்மா 168 · சி. சௌமியா 168 · ம. சங்கீத் 168 · மு. பிரகஜன் 168 · தா. ஜெயடான்சி 168 · ச. வினோஷன் 167 · நா. துவாரகன் 167 · வ. அவனிகா 167 · பா. ஷாம்பவி 167 · சி. சுபோதினி 167



உ. சுருதி 165 · வி. ஜயகுலன் 164 · மு. திஷான் 164 · பா. ஆதிரையன் 164 · செ. தர்சிகன் 164 · பி. கபிலேஷ் 164 · ஸ்ரீ.ஜதுவி 164 · சி. லோகஜன் 164 · ச. விஷ்ணுகா 163 · ச. கஜதீபன் 162



ச. சிவதர்சன் 160 · சோ. துவாரகா 160 · தா. ஜிவசாந் 159 · ம. லவதர்சன் 159 · க. வாகீசன் 158 · இ. திவிதரன் 158 · சு. கஜானன் 158 · சி. பிரணவன் 157 · ப. கபிலினி 157 · பி. ஹம்சாயினி 157



ஜ. வைஷ்ணவி 156 · ஏ. திலக்சனா 156 · சு. வித்தியாபவன் 155 · தி. இனியவன் 155 · சு. கிருபாலினி 155 · பா. பாலமயூரி 155 · த.திலக்சன் 154 · ஸ்ரீ துவாரகன் 154 · கு. உமாகாந்தன் 154 · லோ. தவக்குமரன் 154



த. கஜன் 152 · அ. குருசுதன் 152 · வி. ராகவன் 151 · த. டினேஸ் 151 · இ. அபிநகா 151 · ஜீ. மிதுனா 151

**யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை, யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி : 021 222 2119**
email: admin@hinduprimary.org
website: hinduprimary.org

கல்விச் செயற
நுணுக்கமாகச்
வித்திட்ட
கௌரவிப்புக்
எடுத்துச் சிறப்
கடந்த பல வரு
வருங்காலத்
வெற்றி வா
வளமு

அனுசரணை

திரு. திருமதி சந்திரசேகரம் சிறிறஞ்சன் குடும்பத்தினர்

# இந்துவின் ஆரம்பம் இனிய ஆரம்பம்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கின்றோம்
# பாடசாலை

2011 இற்கான பரிசளிப்பு விழாவில்

ங்கப்பதக்கங்களையும் ஏனைய மாணவர்கள் பதக்கங்களையும் பரிசில்களையும் பெறுகின்றார்கள்.

தோற்றிய அனைத்து மாணவர்களும் 70 புள்ளிகளுக்குமேல் பெற்று சான்றிதழ் பெறுகின்றார்கள்.



| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| நுபமா | ச. சங்கவிதா | ச. கலாதரன் | ந. வித்தியாசகன் | ஜெ. சன்னுதாங்கி | வி. லிசானி |
| 31 | 181 | 180 | 180 | 180 | 180 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| துஜன் | கோ. துவாரகா | கி. ஆர்த்திகன் | சி. சிவபுஜன் | சி. துஷிதன் | கு. கஜானி |
| 7 | 177 | 176 | 175 | 175 | 175 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிராம் | சு. கோபீசன் | ர. ராகப்பிரியா | சி. சஞ்சீவன் | சு.கிருஷிகா | கு. தீபிகா |
| 71 | 170 | 170 | 170 | 169 | 169 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ரூரன் | ச. சகீர்த்தன் | ந. லக்சிகா | லி. துவாரகன் | செ. கோபிகிஸான் | சி. யதுர்ஷன் |
| 6 | 166 | 166 | 165 | 165 | 165 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம்சன் | ம. சிவஷாயினி | சு. பரணீதரன் | ப. அஸ்வினி | ம. ஹரிகரன் | ப. லக்ஷிகா |
| 2 | 162 | 162 | 161 | 161 | 160 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| னுஜா | சு. ருகித் | கி. வைஷ்ணவி | து. சிவசங்கர் | அ. கோபிகன் | க. அபிமன்யு |
| 7 | 157 | 157 | 156 | 156 | 156 |



| | | | | | |
|---|---|---|---|---|---|
| ன்ஜா | இ. நிதுஜா | பா. சாருணி | இ. பிரணவன் | சி. திவிக்ஷனன் | வி. திலக்ஷன் |
| 3 | 153 | 152 | 152 | 152 | 152 |

இவர்கள் அனைவரும் சகல
கலைகளும் பெற்றுக் கல்வியில் சிறப்புற
ழ்த்துவதோடு தரம் 1 தொடக்கம் தரம் 5 வரை
ாடுகளிலும் இணைப்பாடவிதான செயற்பாடு களிலும் மிக
செயற்றிறனுடன் கருத்தூன்ற வைத்து உன்னதநிலைக்கு
சாலை ஆசிரியப் பெருந்தகைகளுக்கு நன்றி கலந்த
ளையும் பாராட்டுக்களையும் வழங்கி, இன்று பெருவிழா
பதையிட்டு பெருமையும் பேருவகையும் அடைகின்றோம்.
ங்களாகத் தொடர்ந்து முன்னிலை பெற்ற எமது பாடசாலை
லும் பல முன்னேற்றகரமான சாதனைகளைப் படைத்து
க கூடவும் அதிபர், பிரதி அதிபர், ஆசிரியர்கள் நலமும்
பெருக வாழ்வாங்கு வாழவும் வாழ்த்துகின்றோம்.

**புலமைப் பரிசில் பரீட்சையில்**
**சித்தியடைந்த மாணவர்களின்**

## சமாதான நீதிவான்கள்

சாவகச்சேரிநகரசபைக்கு உட்பட்ட பகுதிகளைச் சேர்ந்த ஐவர் அண்மையில் நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் சமாதான நீதிவான்களாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டனர். சங்கத்தானையைச் சேர்ந்த இ. கைலைநாதன் சாவகச்சேரி இந்துக் கல்லூரி அதிபர் அ. கயிலாய பிள்ளை, மீசாலை விக்னேஸ்வரா ம.வி. அதிபர் த.அம்பலவா ணர், சாவகச்சேரி டச்சு வீதியைச் சேர்ந்தமு.பெஷண்முகநாதன், திருமதி உருத்திராதேவி சண்முகநாதன் ஆகியோரே சமாதான நீதிவான்களாக சத்தியப் பிரமாணம் செய்தவர்களாவர். (ம- 207)


## பயிலுநர் தேவை

கொழும்பு -15, மோதரையில் அமைந்துள்ள பியூட்டி பார்லருக்கு பயிலுநர்கள் தேவை. விண்ணப்பதாரிகள் 18 வயதுக்கு மேற்பட்டவர்களாகவும், க.பொ.த சாதாரண வகுப்பு வரையேனும் படித்திருத்தல் வேண்டும். வசதி குறைந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஒப்பந்த அடிப்படையிலான பயிற்சி என்பதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ் (Certificate) திறமையடிப்படையில் வேலை யும் வழங்கப்படும். பயிற்சிக் காலத்தில் உதவிப் படியுடன் உணவு, இருப்பிட வசதியும் செய்து கொடுக்கப்படும்.

(C/5900)(9-6-8)

"Saies Herbal Beauty Care"
CG9, St.James Street, Colombo-15.
தொலைபேசி-0776085536



## 40 ஆவது ஆண்டு திருமண வாழ்த்துக்கள்



**27.11.2011**

திரு. திருமதி **கந்தசாமி**
**புஸ்பலீலாவதி**

கையோடு கை சேர்த்து இதயங்கள் இரண்டும்
இணைந்து மனதை மனத்தால் அரவணைத்து
40 ஆண்டு காலம் வாழ்ந்த நீங்கள்
எந்த நிலையின் போதும் மாறா அன்பை மட்டும்
ஊட்டி வாழ வேண்டும் நீங்கள்
வாழ்த்துகிறோம் நாங்கள்.

வாழ்த்துவோர்:
திருவாரூரன்,உஷாமினி, சுறேக்கா, கனிஸ்கா
(மகள் குடும்பம் - கனடா)
ரமேஸ்,சசிகலா, விதுஷன்,பவிதன்
(மகள் குடும்பம் -கனடா)
மயூரன் (மகன் - லண்டன்)

புஸ்பவனம்
கைதடி கிழக்கு , கைதடி.
(10535)(3.6.9)



## Study in New Zealand

3 ஆண்டுகளில் கல்வி
+தொழில்வாய்ப்பு
= குடியுரிமை

நியூசிலாந்தில் Student Visa வில் 2012 ஏப்ரல் மாதம் முதல் சில
மாற்றங்களை செய்யயிருப்பதால் இப்பொழுதே
விண்ணப்பிப்பதற்கு தயாராகுங்கள்...

நியூசிலாந்தில் அங்கீகரிக்கப்பட்ட முதல் தர கல்லூரிகளில்...

- Information Technology
- Diploma in Professional Cookery
- Hotel and Hospitality Management

இலவச ஆலோசனை வழங்குவதற்காக நாம் அடுத்த வாரம் யாழ்ப்பாணத்திற்கு
விஜயம் செய்யவுள்ளோம்.உங்கள் முன்பதிவிற்கு இப்போழுதே அழையுங்கள்
Mr.Safeer 077 3922677

எம்மால் நியூசிலாந்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட
மாணவர்களில் சிலர் ...




இதேபோல் உங்கள் எதிர்காலத்தை ஒளிமயமாக்கிட நாம் தயார்.

www.execellenceedu.com

மேலதிக விபரங்களுக்கு Mr.Safeer 077 3922677
13,1/1,17th Lane Colombo-03.Tel : 0112 372709
Website:www.excellenceedu.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு
13.06.1932

உதிர்வு
28.10.2011

கடந்த 28.10.2011 வெள்ளிக்கிழமை அன்று சிவபதம் அடைந்த எமது குலவிளக்கு

## திருமதி வேலாயுதபிள்ளை புவனேஸ்வரி

அவர்களின் பிரிவுச் செய்தி கேட்டு, நேரில் வந்து ஆறுதல் கூறி முன்னின்று உதவி புரிந்தவர்களுக்கும், மலர்வளையம் வைத்தும், கண்ணீர் அஞ்சலி அச்சிட்டு வெளியிட்டு அஞ்சலி செலுத்திய பாடசாலைச் சமூகத்தினருக்கும், நிறுவனங்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டவர்களுக்கும், தொலைபேசி, மின்னஞ்சல் மூலம் அனுதாபங்களைத் தெரிவித்த அனைத்து உள்ளங்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் அமரரின் வீட்டுக் கிருத்திய ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

ஸ்ரீ சுபா பேக்கறி,
சுதுமலை.

\- குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(10799)(2-6-9)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**தம்பாப்பிள்ளை செல்லத்துரை**

மலர்வு
08.03.1942


உதிர்வு
08.12.2010

நிலையில்லா இவ்வுலகில்
நிலைத்திருக்கும் உம் உறவால்
நினை விழக்க மாட்டாமல்
நீந்துகின்றோம் கண்ணீரில்
மரமிருக்கும் நாள் வரையில்
நிழலிருக்கும் பூமியில்
நாமிருக்கும் நாள் வரையில்
நீங்கள் இருப்பீர்கள் எம் மனத்திரையில்

தகவல்:
செ.ரவீந்திரா (மகன்)
கற்குழி வடக்கு, சாவகச்சேரி.

(சி/6179)(2-6-9)

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் சின்னத்தம்பி
**இராஜலிங்கம் (ரூச்சி)**

திதி: 27.11.2011

தோற்றம்
15 ★ 06 ★ 1949

மறைவு
10★ 12 ★ 1999

எம்மோடு நீர் வாழ்ந்த பசுமை நினைவுகள்
என்றும் எமதுள்ளத்தில் நிலை கொள்ளும்
ஆண்டுகள் பன்னிரண்டு ஆனாலும் ஆறவில்லை
உமது ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை வீதி, ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை,

மைத்துனர் -
ப.துரைரெட்ணம் (துரை)
மஞ்சு.

(10391)(2-6-9)

## மரண அறிவித்தல்



**சின்னப்பு சிவசுப்பிரமணியம் (சாமி)**

சாவகச்சேரி, சங்கத்தானையைப் பிறப்பிடமாகவும் தாவடி, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாதஸ்வர வித்துவான் சின்னப்பு சிவசுப்பிரமணியம் கடந்த (25.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

பிள்ளையார் கோயிலடி,
தாவடி தெற்கு, கொக்குவில்.

தகவல்:
குடும்பத்தினர்.

(10882)(2-6-9)

## விற்பனைக்கு

German shepard alsersion ஆண் நாய் 01 வயது விற்பனைக்குண்டு. விலாசம் : சேர்ச் ஒழுங்கை, அராலி வடக்கு.
TP. 0213217041, 0783014280 (10721)(9-6-8)

## வீடு விற்பனைக்கு

ஈச்சமோட்டை, கடற்கரை வீதியில் 3½ பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. (காணி பிரித்தும் கொடுக்கப்படும்.
தொடர்பு. 0776146434 (10731)(9-6-8)

## வீடு விற்பனைக்கு

சுண்டுக்குளி விதானையார் வீதியில் 1½ பரப்புக் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: S.S. நாதன்இ இல. 16/3, விதானையார் வீதி,சுண்டுக்குளி யாழ். TP. 0776146434

## விசேட சேவை

கொழும்புக் கட்டணத்திலேயே யாழ்ப்பாணத்திலும்
மாணவர்களுக்குரிய ரை ரூபா 80
மொனிற்றர்,பிறிபெக்ற் பச் ரூபா 30
பொக்கெற் பச் ரூபா 5
யசோதரன் ஆட்ஸ் சென்ரர், யாழ் - கொழும்பு
0777110610 (C/6170)(9-6-8)

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கௌரவ குடும்பம், பிரான்ஸில் வதிவிடம் பெற்ற விவாகரத்துப் பெற்ற மணமகனுக்கு நன்கு படித்த 30-38 வயதுக்குட்பட்ட மணமகள் தேவை. தொடர்புகளுக்கு: யசோ 0033603465327 mylyaso@yahoo.fr.

## காணி விற்பனை

அளவெட்டி, அலுக்கை சந்தி, அலுக்கை விதானை காரியாலயத்திற்கு பக்கத்து வீடு 6 பரப்பு காணியுடன் 3 படுக்கை அறைகள், Attach Bath, garage மற்றும் சகல வசதிகளுடன் கூடிய வீடும் மற்றும் இன்னும் ஒரு வீடு கட்ட 7 அடி பாதையுடன் கூடிய வசதியும் அதே காணி யில் உண்டு. தரகர்களும் தொடர்பு கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு அன்டனி ஜேம்ஸ் 0775346241

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு

உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து (புறோயிலர் 450/= மட்டும்) காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.
நல்லூர் பாம் சென்ரர், 1'9, முருகேசர் லேன், நல்லூர். (10854)(9-6-8)

## மணமகள் தேவை

தனியார் துறையில் வேலை பார்க்கும் 36 வயதுடைய மணமகனுக்கு மணமகள் தேவை. கிரக பாவம் குறைந்தவர்கள் விரும்பத்தக்கது. தினமும் பி.ப 7மணிக்கு பின்பு தொடர்பினை ஏற்படுத்தவும்.
தொடர்பு: 0774004112 (10694)(9-6-8)

## ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்:
01.11.1919

மறைவு:
23.11.2006

**அமரர் சங்கரப்பிள்ளை கார்த்திகேசு**

*(கணித ஆசான், இளைப்பாறிய ஆசிரியர்,
யா/உரும்பிராய் இந்துக் கல்லூரி)*

திதி: திருதியை (27.11.2011)

அப்பா அப்பா எமைவளர்த்த உத்தமரே
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே பெருந்தலைவா
சமூகத்தின் வழிகாட்டியாய் நல்லவர்களின் நண்பனாய்
உரும்பிராய் இந்துவின் சிறந்த ஆசானாய்
பெருந்தலைவர் போற்றும் நல்ல பெருமகனாய்
வாழ்ந்த வள்ளலே நீங்கள் எமைப் பிரிந்து
ஆண்டு ஐந்து ஆனதே ஐயா
ஆனாலும் உங்களை மறவாது போற்றுகின்றோம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பாடசாலை ஒழுங்கை,
மல்லாகம்.

என்றும் உங்கள் நினைவுடன்:
குடும்பத்தினர்

(10638)(1-9-22)

## 11 ஆம் ஆண்டு நினைவலைகள்

மண்ணில்
10 . 09 . 1939

விண்ணில்
27 . 11 . 2000



**அமரர் ஆறுமுகம் சண்முகநாதன்**

(இளைப்பாறிய முகாமையாளர், மக்கள் வங்கி)
திதி: பூர்வபக்க துதியை (27.11.2011)

நிலையிழந்தே வாடுகின்றோம் நித்திலத்தே என்றும்
தலைவனே நின்பிரிவதனால் தரணியிலே ஒன்றாய்
வலம் வருவீர் வையகத்தே நீங்கள் என்றிருக்க
அலையென துயர்தந்து அன்புளரே ஏன் பிரிந்தீர்
உலையினிலே அகப்பட்ட மெழுகெனவே உருகும்
உறவுகளின் துயரகற்ற உத்தமரே வாரீர்
பலமிழந்த நின்மனையாள் படுந்துயரம் போக்க
பண்புயர் தெய்வமே பாரினுக்கே வாரீர்
பிள்ளைகளின் நல்வாழ்வைக் காணாது நீங்கள்
எல்லையற்ற உலகதனை விட்டகன்று சென்றதேனோ...
நல்லுள்ளம் கொண்ட அப்பாவே உம்மை
நானிலத் தன்னில் நாமினிக் காண்போமா

534, அரியாலை, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.
30, விவேகானந்த றோட், கொழும்பு - 06.

பிரிவால் துயருறும்
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதர சகோதரிகள்.

(10766)(2,6,22)

## கோயிலுக்குத் தேவையான மணி விற்பனைக்குண்டு



திருவாசி, கலசம், கொடிஸ்தம்பம், வெண்கல, கருங்கல் சிலைகள், சுவாமி சிலைகள் இன்னும் கோயிலுக்குத் தேவையான உபகரணங்கள் பாரம்பரிய தொழில் நிபுணர்களால் செய்து தரப்படும். கோயிலிலுள்ள பழைய பித்தளை, செம்பாலான பொருள்கள் கோயி லுக்குள்ளேயே வைத்து உருக்கிப் புதிதாகச் செய்து தரப்படும். சுத்தமான வெண்கலமணி 10 கிலோவிலிருந்து 1000 கிலோவரை நல்ல ஓசை ஏற்படக்கூடிய விதமாக கோயி லுக்குள்ளேயே வைத்துச் செய்துதரப்படும். இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும் வேலை செய்து கொடுத்துள்ளோம்.

தொடர்புகளுக்கு: **வேலாயுதம் - பத்மலால்**, கல்முனை வீதி, "தேதாது", மட்டக்களப்பு.
தொ.பே.:- 0776765504, 0770842469

(10797)(2-6-9)

## முதியோர் இல்லம்

"யாழில் முதியோர் இல்லம்" திருநெல்வேலி Central nursing home உடன் இணைந்து முதியோர், நோயாளர் யாழ் நகரிலும் பராமரிக்கப்படுகின்றனர், Home Nursing வசதியுண்டு.
தொடர்பு: 0718234691, 0752555689

## கண்ணீர் அஞ்சலி



அமரர்
**கதிரவேலு பரமானந்தம்**
*(மூத்த உறுப்பினர்,
கலைமகள் ச.ச.நிலையம்)*

எமது சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்காக பள்ளிப் பருவத்திலே எம்முடன் இணைந்து சேவையாற்றிய சிறந்த சேவையாளன் சமய, சமூக பணிகளிலும் எமது சிறார்களின் கல்வி யறிவு திறன் மேம்படவும் உழைத்தவர். அன்னாரின் இழப்பு எமக்கும் எமது நிலையத்துக்கும் எம் சமுதாயத்துக்கும் பேரிழப்பாகும். அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனை துதிப்பதுடன் எம் கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்கி நிற்கின்றோம்.

**கலை மகள் சனசமூக நிலையம்**
ஆத்திசூடி வீதி, யாழ்ப்பாணம். (10824)(1,6,9)

## விற்பனைக்கு

தரமான வெள்ளிரும்பு (Steinles steel) பைப், தகடு, மற்றும் அதன் பொருத்துக்கள், செப்பு தகடு, பித்தளை தகடு, பிணைச்சல் வகைகள், யாவும் நிதான விலைக்கு கிடைக்கும். நந்த லாலா இரும்பகம், 29, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 0212226234 (10785)(9-6-8)

## வேலை ஆள் தேவை

யாழ் நகரில் இயங்கும் வியாபார நிலையம் ஒன்றுக்கு விற்பனையாளர்,கணக்கு மற்றும் பில்கிளாக் வேலைக்கு ஆள் தேவை. இரும்பு, மின்பொருள் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை உண்டு.
தொடர்பு. 0777805950 (10786)(9-6-8)

## வைத்தியம்

நாலாம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் பதினாறு வருடங்களுக்கு முன்பு பல வருட காலமாக அஸ்மா, தொய்வு, முட்டு நோய்களுக்கு விசேட சிகிச்சை அளித்த தற்சமயம் கொழும்பில் சிகிச்சை புரியும் டாக்டர் சுறாஜ் சோமசுந்தரம் அவர்கள் பல நோயாளிகளின் வேண்டுகோளுக்கு இணங்க மீண்டும் மாதத்தில் இருமுறை சில நாள்கள் யாழ்ப்பாணத்தில் சிகிச்சை அளிக்க இருக்கிறார். உங்களைப் பார்வை இடப்படும் நாளையும், நேரத்தையும், இடத்தையும் [illegible] அனுமதி (புக்கிங்) [illegible]
தொலைபேசி இலக்கங்கள்:
0714815690, 0114801582

## நினைவஞ்சலியும் நன்றிநவிலலும்

45 ஆம் நாள்



அமரர்
**செல்வநாயகம் குகநேசன்**
தோற்றம்:- 25.05.1962
மறைவு:- 14.10.2011

கடந்த 14.10.2011 அன்று சிவபதமடைந்த **செல்வநாயகம் குகநேசன்** அவர்களினதும், 29.10.2011 அன்று சிவபதமடைந்த **திருமதி மாலினி குகநேசன்** அவர்களினதும் சபிண்டீகரணக் கிரியைகள் அவர்களது இல்லத்தில் 28.11.2011 திங்கட்கிழமை நடைபெறும். அன்றைய தினம் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், சபிண்டீகரணக் கிரியைகளிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். அவர்கள் இருவரும் இறைபதமடைந்த செய்திகள் கேள்வியுற்று அனைத்து வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் தொலைபேசி மூலமும் கடித மூலமும் நேரிலும் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் நன்றிகளைத்

31 ஆம் நாள்



அமரர் திருமதி
**மாலினி குகநேசன்**
தோற்றம்:- 24.03.1964
மறைவு:- 29.10.2011

[illegible] நாகம். **உறவினர்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- தபால் மூலம் -

## ஆறு மாத கால டிப்ளோமா

**Course Length - Six Month**

**DEC 2011 TO MAY 2012**

22

*தமிழ் மொழி மூலம்*

| | |
|---|---|
| Dip. in Psychology | - உளவியல் டிப்ளோமா |
| Dip. in Office Administration | - காரியாலய நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Human Resources Management | - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Civil Engineering | - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா |
| Dip. in Business Management | - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Banking Management | - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Sales & Marketing Management | - விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் மு. டி. |
| Dip. in Health & Hospital Management | - சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை மு. டி. |
| Dip. in Nursing Administration | - தாதியர் நிர்வாக டிப்ளோமா |
| Dip. in Educational Management | - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா |
| Dip. in Montessori | - மொண்டிசூரி டிப்ளோமா |

**கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்**

- கல்முனை • மட்டக்களப்பு • திருகோணமலை • புத்தளம்
- வவுனியா • மன்னார் • யாழ்ப்பாணம் • கண்டி • கொழும்பு
- ஹட்டன் • அனுராதபுரம் • நுவரெலியா

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர், முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.

**Mobile: 0777 140 844, 071 803 48 48**

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

**ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES**
24, 1ST FLOOR, SUPERMARKET COMPLEX, MAIN STREET, SAINTHAMARUTHU-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas.org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.12.2011

## விற்பனைக்கு

விற்பனை Communication Net cafe உபகரணங்கள் Computers Laminating, binding, Scanner, Net2phone, fan, router, network switch, glass cabinets, colour printer உடன் விற்பனைக்கு. 0777739883

(C/6307)(9-6-8)

## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம் நல்லூர் இராசாவின் தோட்டம் வீதியில் வீடு வாடகைக்கு உண்டு. அரச நிறுவனங்கள் NGO விரும்பத்தக்கது. தரகர் தேவையில்லை.
தொடர்புக்கு 0777563730
0112932397
0717563730
0212223088

(10825)(9-6-8)

## காணி விற்பனைக்கு

மீசாலை வடக்கு சியாமளா மில் ஒழுங்கையில் A9 வீதியிலிருந்து200m தூரத்தில் 25 தென்னை மரங்கள் உள்ளதும், குடியிருப்புக்கு ஏற்றதுமான 9 பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு.
(½ பகுதியாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.)
தொடர்பு: 0772445706, 0213216561

## காணி விற்பனைக்கு

இருபாலை, ஆனந்தபுரம் அருகில் 30 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ள வேண்டிய இலக்கம்
0774562810

C/6303)(9-6-8)

## விடுதிகள் / விருந்தினர் இல்லங்கள்

**கண்டி விடுதி:** விடுமுறைக்கு சிறந்த இடம். உணவுடன் படுக்கை அறைகள் மற்றும் குடும்பத்துக்கான அறைகள் உள்ளன.
சூரிய ஒளியுடன் கூடிய ஓர் உல்லாச இல்லம். வீட்டுக்கு அப்பால் விடுமுறையை சந்தோஷமாக கொண்டாட ஓர் இல்லம்.

இல. 95 , தம்மசிட்டி மாவத்த, அஸ்கிரிய, கண்டி.
தொலைபேசி : 0812224357, 0755597780, 0785225979

(10777)(9-6-8)

## விற்பனைப் பிரதிநிதிகள் தேவை

பெயின்ற் உற்பத்தி நிறுவனத்துக்கு விற்பனைப் பிரதி நிதிகளாக செயற்பட யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பிரதேசங்களில் சேவையாற்ற அனுபவமுள்ள/அனுபவமற்ற ஆண்கள் தேவை. வயது 20-25க்குள்
தகைமை G.C.E (O/L), (A/L).
சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

BERLUX PAINTS (PVT)LTD.
NO.20A, BANDARANAYAKE MAWATHA
MAHABAGE, RAGAMA.

(10720)(9-6-8)

# முன்னணி நிறுவனத்துடன் இணைந்து சிறந்த வியாபாரி ஆகுங்கள்

இலங்கையின் விவசாயத் துறையில் முன்னணியாளர்களான ஹேலீஸ் அக்ரிகல்சர் நிறுவனத்துடன் இணைந்து எதிர்காலத்தை வளமாக்கி கொள்ள உங்களுக்கு ஓர் அரிய வாய்ப்பு.

எங்கள் நாட்டில் காலங்காலமாக நம்பிக்கையை வென்ற **ஹேஸ்பிறே, அக்ரோடெக், குபோட்டா மற்றும் ஃபாம்ட்ரக்** போன்ற நவீன விவசாய வர்த்தக நாமங்களுக்கு விற்பனை முகவர்ாகுங்கள்.

இரு சக்கர டிரக்டர், நான்கு சக்கர டிரக்டர், சூடடிக்கும் இயந்திரம், அறுவடை செய்யும் இயந்திரம், நாற்று நடும் இயந்திரம், தெளிகருவி முதலிய விவசாய உபகரணங்கள் தொடர்பாக விற்பனை முகவர்கள் நாட்டின் சகல பாகங்களிலிருந்தும் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். நீங்கள் பிரதான நகரத்தில் அல்லது விவசாயம் நடைபெறும் பிரதேசத்தில் வசிப்பவராயின், விவசாய உபகரணங்களுக்கான காட்சியறை இடவசதி இருப்பின் அத்தோடு வங்கி உத்தரவாதத்தினை சமர்ப்பிக்க கூடியவராக அல்லது நிறுவனமாக இருந்தால்...

**இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விதத்தில் விண்ணப்பப் படிவம் ஒன்றை தயாரித்து 14 நாட்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பவும்.**

பெயர் :..............................................................

வியாபார முகவரி :..............................................................

..............................................................

தொலைபேசி இலக்கம் :..............................

காட்சியறை இருக்கும் இடம் மற்றும் பரப்பளவு :..............................................

தற்போது நடத்திக் கொண்டிருக்கும் வேறு வியாபாரம் சம்மந்தமான தகவல்கள் :..............................

..............................................................

..............................................................

..............................................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை என உறுதிப்படுத்துகின்றேன்.

.............................. ..............................
திகதி கையொப்பம்

Kubota | Agrotech | FARMTRAC | Hayspray

பொது முகாமையாளர் - விவசாய உபகரணப் பிரிவு
**ஹேலீஸ் அக்ரிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்**
இல 25, பொஸ்டர் ஒழுங்கை, கொழும்பு
தொலைபேசி: 011 2 688 960 - 2, பெக்ஸ்: 011 2 687 202
மின்னஞ்சல்: sumith.herath@agro.hayleys.com

Hayleys AGRICULTURE
ஹேலீஸ் அக்ரிகல்சர் ஹோல்டிங்ஸ் லிமிட்டெட்

இலங்கையில் 30 வருடங்களுக்கு மேல் பழமையான குளிர்சாதன துறையில் மிகவும் அனுபவம் வாய்ந்த பிரபல நிறுவனமான "புரொஸ்டெயர்" தனது துரிதமான சேவைத்துறையை மேலும் விஸ்தரிக்கும் வகையில் பின்வரும் வேலைவாய்ப்புகளை கோறுகின்றது.

பிரதேச பிரதான விற்பனையாளர்கள் (**Area Sales Executive**)
வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள்

- க.பொ.த (உ/த) தகைமைகள்
- தெரிவுசெய்யும் விண்ணப்பதாரிகள் கட்டாயமாக உரையாடக்கூடிய திறமையையும் மற்றும் பேரம் பேசக்கூடிய ஆளுமையையும் கொண்டிருத்தல் வேண்டும்.
- கட்டாயமாக வெளிச்செல்லக்கூடியவாறும் தரப்பட்ட நோக்கம் மற்றும் விற்பனை இலக்கு என்பவற்றை அடையக்கூடியவாறும் இருத்தல்.
- ஆகக் குறைந்தது இரண்டு (02) வருடங்கள் விற்பனை மற்றும் விற்பனை மேம்படுத்தலில் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
- வயதெல்லை 20-30 ஆகக் காணப்படல் வேண்டும்.
- கட்டாயமாக பெறுமதியான மோட்டார் வாகன அத்தாட்சி பத்திரமொன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

இவ் அறிவித்தலின்படி 10 நாட்களுக்குள் **biz@frostaire.com** என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்

Frostaire

இல. 102, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 02.

## மரண அறிவித்தல்



**திருமதி குட்டித்தம்பி அன்னலட்சுமி** (குஞ்சு)

உரும்பிராயை பிறப்பிடமாகவும் வேம்பன் வீதி, (ஒஸ்கா) உரும்பிராயைவசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குட்டித்தம்பி அன்னலட்சுமி (25.11.2011) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குட்டித் தம்பியின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இரா சம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற வர்களான சின்னப்பு- அன்னமுத்து தம்பதியரின் மருமகளும் சற்குணநாதன்(குணம்), இரவீந்திரன்(Van ரவி), திகழ்மதி(பபா), குணசிங்கம் (அப்பன்), அகிலன் ஆகியோரது பாசமிகு தாயும், சுபத்திரா, சற்குண நாதன், ராசா, துளசி, மலர்(துளசி), சிவனேஸ்வரி (குஞ்சு), தயாநிதி (தயா) ஆகியோரின் மாமியும், சாதுளன், நீலா, சாந்திபா, இராம்குமார், சாமரன், கௌசல்யா, சுதர்சன், கஜீபன், பிறிந்தா கனிஸ்குமார், கேதீஸ்குமார், றொசாந்தன், அனோஜன், அருண் ஆகியோரது அன்புப் பேர்த்தியும் , சந்தோஸ், ஸைலேஸ் ஆகியோரின் பூட்டியுமாவார்

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைக்காக வேம்பன் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்பன்வீதி( ஒஸ்கா),*
*உரும்பிராய் தெற்கு.*

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய நிதியாண்டில் வரி அறவீட்டு மாற்றங்கள்

## வரவு செலவுத் திட்டம்- 2012 வரிவிதிப்பு மாற்றங்கள் - ஓர் ஆய்வு

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு அரசாங்கத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டம் கடந்த 21 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி ராஜபக்ஷவினால் சமர்ப்பிக்கப்பட்டது. கடந்த ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டமானது வரிவிதிப்பு சீர்திருத்த ஆணைக் குழுவின் பரிந்துரைகளில் பலவற்றை உள்ளீர்த்து பல செயற்றிறனற்ற வரிகள் நீக்கப்பட்டும் பொருளாதார அபிவிருத்தியை முதன்மைப்படுத்தியும் வரி விலக்களிப்புக்கள், நிவாரணங்கள் வரிச் சலுகைகள் போன்றன வழங்கப்பட்டிருந்தன.

வருமான வரியைப் பொறுத்தவரையில் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான வரி விலக்களிப்புக்கள் மற்றும் வரிவீதம் குறைக்கப்பட்டமை, ஊழிய வருமானம் பெறுவோருக்கு வரயற்ற விடுதொகை 600,000 ரூபாவும், ஏனைய வருமானம் பெறுவோருக்கு 500,000 ரூபாவும் வரியற்ற விடுதொகையாகவும், வருமான வரி வீதம் கீழ் நோக்கித் திருத்தப்பட்டமை மற்றும் குறித்துரைக்கப்பட்ட கட்டணங்கள் மீது நிறுத்தி வைத்தல் வரி நீக்கப்பட்டமையையும் விசேடமாகக் குறிப்பிடலாம். அதேபோன்று பெறுமதி சேர்வரி தொடர்பில் ஆடம்பரப் பொருள்களுக்கான வரியான 20%, 12% ஆகக் குறைக்கப்பட்டதுடன், உள்ளீட்டு வரி வரவு தொடர்பில் 85% வரையறை நீக்கப்பட்டு 100% ஆக அதிகரிக்கப்பட்டது. இதற்கு மேலதிகமாக ஏற்கனவே 5% ஆக விதிக்கப்பட்ட விருப்பத்திற்குரிய பெறுமதி சேர்வரி (Optional VAT) 2% ஆகக் குறைக்கப்பட்டதுடன், முற்பணப் பெறுமதி சேர்வரி (Advanced VAT)யும் 01.01.2011 இலிருந்து நீக்கப்பட்டது. ஏற்றுமதியாளர்களுக்கான மீளளிப்பு நடவடிக்கைகளை மேலும் இலகுபடுத்தும் பொருட்டு எளிமையாக்கப்பட்ட பெறுமதி சேர்வரி நடைமுறை (Simplified) அறிமுகம் செய்யப்பட்டது.

இவற்றுக்கு மேலதிகமாக மாகாண சபைகளால் அறவிடப்பட்ட மொத்த விற்பனைவரி முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு, இவ்வருடம் முதல் மொத்த, சில்லறை வர்த்தக நடவடிக்கைகள் மீதான் வரிவிதிப்பு நடவடிக்கைகள் மத்திய அரசாங்கத்தின் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரியின் கீழ் உள்ளடக்கப்பட்டது. இவைதவிர, வங்கி வைப்புக்களின் மீது மீளப்பெறுகைகளின் மீதான பற்றுவரி மற்றும் சமூகபொறுப்பு அறவீடு, பிராந்திய உட்கட்டமைப்பு அபிவிருத்தி அறவீடு, கையடக்கத் தொலைபேசி பாவனையாளர் அறவீடு போன்ற வரிகள் நீக்கப்பட்டிருந்தன.

தற்போது 2012 ஆம் ஆண்டுக்கான வரிவிதிப்பு முறைகளின் சிறப்பம்சம் யாதெனில், சிறந்த வரிவிதிப்புத் தகுதி விதிகளில் ஒன்றான நெகிழ்ச்சித்தன்மைக் (Elasticity) கோட்பாட்டை அனுசரித்துச் செல்வதுடன், குறுகிய காலத்திற்காவது ஏற்கனவே உள்ள வரிவிதிப்பு நடவடிக்கைகளை மாற்றாது அதனை மேலும் வலுவுள்ளதாக்கும் பொருட்டு சில திருத்தங்களை மட்டும் மேற்கொள்வதாகும். இங்கு திருத்தங்கள் எனக் குறிப்பிடப்படுவது, வரி நிவாரணகளையும், வரிச் சலுகைகளையும் வழங்கி பொருளாதார அபிவிருத்திக்கு உதவுவதாகவே அமையும். இத்தகைய கருதுகோள்களின் பின்னணியில் ஜனாதிபதியால் முன்வைக்கப்பட்ட 2012 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் முன்மொழியப்பட்ட வரிவிதிப்பு மாற்றங்கள் பற்றியும் அதன் பொருளாதாரத் தாக்கங்கள் பற்றியும் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

### வருமானவரி

#### 1.1 வரி விலக்களிப்புச் சலுகைகள்

**(I)** 2015 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளப்படும் முதலீடுகளின் கீழ் கமத்தொழில் நடவடிக்கைகள், மிருக வளர்ப்பு நடவடிக்கைகள், மீன்பிடி நடவடிக்கைகள், தகவல் தொழில் நுட்பம், வியாபாரம் மற்றும் புலமை தொடர்பான செயற்பாடுகளை வெளியில் இருந்து (outsourcing) பெற்றுக் கொள்ளல், சுகாதார நலச் சேவை, கல்வி, அழகியல் நலம் சார்ந்த நடவடிக்கைகள், குளிரூட்டும் அறை மற்றும் காப்பகம், உல்லாசப் பிரயாணத்துறை, விளையாட்டு மற்றும் உடற்பயிற்சி நிலையங்கள், கலை நடவடிக்கைகள் மற்றும் ஆக்கபூர்வ நடவடிக்கைகள் ஆகிய புதிய தொழில் முயற்சிகளுக்கு வரி விடுதலைகள் விரிவாக்கப்படுகின்றன.

**(II) முதலீட்டு வரையறைகள் (புதிய தொழில் முயற்சிகள்)**

* கமத்தொழில் மற்றும் பதனிடல், மிருக வளர்ப்பு, மீன்பிடித்தல் மற்றும் பதனிடல், கலை நிர்மாண நடவடிக்கைகளில் 25 மில்லியனுக்கு குறையாத முதலீடு மேற்கொண்டால் 4 வருடங்களுக்கு வரி விடுதலை வழங்கப்படும்.

* ஏதேனும் இனம் காணப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகளுக்கு முதலீட்டின் அளவைப் பொறுத்து (குறைந்த பட்சம் 50 மில்லியன் ரூபா) 4 தொடக்கம் 6 ஆண்டுகள் வரை வரி விடுதலை வழங்கப்படும்.

* தயாரிப்பு மற்றும் திண்மக் கழிவு முகாமைத்துவம் உட்பட அடையாளம் காணப்பட்ட உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் பாரிய தொழில் முயற்சிகள் முதலீட்டு அளவுக்கேற்ப (குறைந்த பட்சம் 300 மில்லியன் ரூபா) 6 தொடக்கம் 12 ஆண்டுகள் வரை வரிவிடுதலையைப் பெற்றுக் கொள்ள தகைமை பெறும்.

**(III)தற்போதைய தொழில் முயற்சியை விரிவுபடுத்தல்**

31.03.2015 ஆம் திகதிக்கு முன்னர் தற்போதைய தொழில் முயற்சியை விரிவுபடுத்துவதற்கு குறைந்த பட்சம் 50 மில்லியன் ரூபாவை முதலீடு செய்யும் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவோர், முதலீடு செய்யும் வருடத்தி லிருந்து 4 வருட காலத்துக்கு தமது வரி மதிப்பீட்டு வருமானத்துக்கு எதிராக 25%இற்கு மேற்படாத அம்முதலீட்டினை, தகைமைக் கொடுப்பனவாகக் (Qualifying payment) கருத முடியும்.

**(IV) உபாயமார்க்க இறக்குமதி மாற்றீடு தொழில் முயற்சிகள்**

இறக்குமதியாளராக அடையாளப்படுத்தப்பட்ட ஒருவர் புதிய தொழில் முயற்சிகளை அல்லது தற்போதுள்ள தொழில் முயற்சிகளை விரிவுபடுத்துவதற்கு ஏற்றுக் கொள்ளப்பட்ட முதலீட்டு எல்லையில் சிமெந்து (50 மில்லியன் டொலர்), உருக்கு (30 மில்லியன் டொலர் ), மருந்து (10 மில்லியன் டொலர்), புடைவை (5 மில்லியன் டொலர்), பால்மா (30 மில்லியன் டொலர்) ஆகிய பொருள்களை உள்நாட்டுச் சந்தைக்கு அல்லது ஏற்றுமதிக்கு தயார்ப்படுத்துவாராயின் அத்தகைய தொழில் முயற்சிக்கு 5 வருடத்துக்கான வரி விடுதலையும், அதன் பின்னர் 12% சலுகை வீதத்தில் வருமான வரி விதிக்கப்படுழ்.

**(V)** மேலே குறிப்பிட்ட தொழில் முயற்சிகளால் மேற்கொள்ளப்படும் பொறி, இயந்திரம் மற்றும் உபகரண இறக்கு மதிகளுக்கு கருத்திட்டம் செயற்படுத்தப்படும் காலத்துக்கு (Project Implementation Period) பெறுமதி சேர் வரி, சுங்கத் தீர்வை, செஸ்வரி துறைமுக மற்றும் விமான நிலைய அறவீடு என்பவை நிறுத்தி வைக்கப்படுவதுடன் கருத்திட்டம் செயற்படுத்தும் காலத்துக்கு இலங்கை முதலீட்டுச் சபையினால் விதிக்கப்பட்ட நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படுமிடத்து அத்தகைய நிறுத்தி வைத்தல் விலக்களிப்பாகக் கருதப்படும்.

**(VI)**மேற்குறிப்பிட்ட வரிகளுடன் தொடர்புடைய தொழில் முயற்சிகள், தங்கள் வெளியீடுகளில் 75%க்கும் அதிகமானவற்றை ஏற்றுமதி செய்யும் போது, தற்போது அனுபவித்துவரும் அதே நன்மைகளைத் தொடர்ந்தும் அனுபவிக்க முடியும்.

**(VII)** (அ) நிறுவனங்களுக்கான வரிவிலக்களிப் புகள்

இலங்கை சான்றுபடுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர் நிறுவனம் மற்றும் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை ஆகிய நிறுவனங்களின் பங்கு இலா பங்களும், வட்டியும் தவிர்ந்த இலாபங்கள் மற்றும் வருமானங்களுக்கு வருமான வரியிலிருந்து விலக் களிக்கப்படும்.

**(ஆ) வருமான மூலங்களுக்கான விலக்களிப்புகள்**

* வங்கியினூடாக இலங்கைக்கு அனுப்பப்படும். இலங்கைக்கு வெளியிலிருந்து கிடைக்கும் வேத்துரிமைப் பணங்கள் (Royalty) விலக்குப் பெறும்.

* நம்பிக்கை நிதியத்தின்(Unit trust)அல்லது பரஸ்பர நிதியத்தின் (Mutual Fund ) ஒரு அலகினை மீட்கும் போது கிடைக்கும் இலாபம் மற்றும் வருமானங்கள் விலக்குப் பெறும்.

* இலங்கைக்கு வெளியே உள்ள எவரேனும் ஆளினால் அல்லது பங்குடமையினால் இலங்கையில் உள்ள எவரேனும் ஒரு ஆளுக்கு அல்லது பங்குடமைக்கு வழங்கப்பட்ட கடன் தொடர்பாக சேருகின்ற வட்டி விலக்குப் பெறும்.

* விளையாட்டு மைதானம், விளையாட்டு அரங்கு அல்லது விளையாட்டுத் தொகுதியை நிர்வகிப்பதால் பெறப்படும் இலாபங்கள் மற்றும் வருமானங்கள் விலக்குப் பெறும்.

* இலங்கைப் பிரஜையல்லாத விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்க் இக் காரணத்துக்காக இலங்கைக்கு வரவழைக்கப்பட்டால் அந்த இலாபங்கள் மற்றும் வருமானங்கள் விலக்குப் பெறும்.

#### 1.2 சலுகை வீதங்கள்

(அ) குறித்துரைக்கப்பட்ட வங்கிக் கிளைகளினால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள், அபிவிருத்தி வங்கி நடவடிக்கைகளுக்காக புதிதாக நிறுவப்பட்ட வர்த்தக வங்கிக் கிளைகளின் இலா பமும், வருமானமும் 24 % சலுகை வரிக்கு உட்படும்.

**(ஆ) ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி**

நிறுவனமல்லாத தனி நபர் ஒருவர் மேற்கொள்ளும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மீதான இலாபங்களும், வருமானங்களும் உச்ச அளவாக 16% ஆகக் குறைக்கப்படும். நிறுவனமாயின் இவ்வீதம் 20% ஆகக் குறைக்கப்படும்.

**(இ) பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலை**

தேயிலை வளர்ப்பாளரான உற்பத்தியாளர் அல்லது தேயிலை உற்பத்தியாளர் தூய இலங்கைத் தேயிலையை பெறுமதி சேர்க்கப்பட்ட வடிவத்தில் இலங்கையின் வர்த்தகக் குறியீட்டுடன் ஏற்றுமதி செய்யும் நோக்குடன், தேயிலை ஏற்றுமதியாளருடன் கூட்டுச் சேர்ந்து வியாபாரத்தினை மேற்கொள்ளும் போது, உற்பத்தி வருமானத்தில் 12% சலுகை வரி வீதத்துக்கு தகைமை பெறுவர்.

**(ஈ) கைத்தறிக் கைத்தொழில்**

ஆளொருவர் அல்லது பங்குடமையினால் மேற்கொள்ளப்படும் உள்நாட்டுக் கைத்தறி உற்பத்திகளிலிருந்துதான இலாபங்களும் வருமானங்களும் உச்சளவாக 12% ஆகக் குறைக்கப்பட்ட சலுகை வீதத்தில் தகைமை பெறும்.

**(உ) சுகாதார நலச் சேவைகள்**

சுகாதார நலச் சேவையிலிருந்தான இலாபங்களும், வருமானங்களும் உச்சளவாக 12% சலுகை வீதத்தில் வரிக்கு உட்படும்.

#### 1.3 இலாபம் மற்றும் வருமானம் என்பவற்றைக் கணிப்பிடுதல்

**கழிவுகள்**

* மூலதனச் செலவு

வறுசக்தியின் வினைத் திறன் நோக்கத்துக்காக 01 ஏப்ரல் 2012 ஆம் திகதி அல்லது அதன் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட பொறி, இய்ந்திரம் மற்றும் உபகரணங்களுக்கான செலவில் 50% அனுமதிக்கப்படும்.

* பிரயாணச் செலவு

01.04.2011 இலிருந்து செயற்படும் வகையில் ஊழியரினால் உபயோகிக்கப்படும் மோட்டார் வாகனத்துக்கு தொழில் கொள்வோரால் மேற்கொள்ளப் பட்ட செலவினைக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படும்

* வெளிநாட்டுப் பிரயாணச் செலவு

வடிவமைப்பு அபிவிருத்தி, உற்பத்தி அபிவிருத்தி, அல்லது உற்பத்திப் புத்தாக்கம் போன்ற சேவைகளை விசேடமாக வழங்கும் நிறுவனங்கள், இச்சேவைகள் தொடர்பாக மேற்கொள்ளும் வெளி நாட்டுப் பயணங்க்ளுக்கான செலவினை முற்றாகக் கழிப்பதற்கு அனுமதிக்கப்படும்.

#### 1.4 சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கான முன் ஆரம்பச் செலவுகள்

**பாலசுந்தரம் சிவாஜி**
பிரதி ஆணையாளர்
உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

எதிர்பார்க்கப்படும் விற்பனைப் புரள்வு, 500 மில்லியன் ரூபாவை விஞ்சாத புதிய, சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளுக்கு ஒத்துழைப்பை வழங்குவதற்காக தொழில் முயற்சிகளுக்கான முன் ஆரம்பச் செலவுகளை வியாபார நடவடிக்கைகளை ஆரம்பித்த வருடத்தின் முந்திய வரிமதிப்பீட்டாண்டின் மொத்த நியதிச் சட்ட வருமானத்திலிருந்து கழிப்பதற்கு அனுமதிக்கப்படும்.

#### 1.5 தகைமைக் கொடுப்பனவு

உள்நாட்டு இறைவரி ஆணையாளர் அதிபதியினால் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பிரதேசத்தில் மேற்கொள்ளப்படும் குறித்துரைக்கப்பட்ட கூட்டிணைந்த சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்படும் செலவு, தனி நபர் தொடர்பாக உச்ச அளவு ஒரு மில்லியன் ரூபா வரையிலும், நிறுவனம் தொடர்பாக உச்ச அளவு 10 மில்லியன் ரூபா வரையிலும் தகைமைக் கொடுப்பனவாக அனுமதிக்கப்படும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கார் வாடகைக்கு

V.I.P சொகுசு கார் (வெள்ளை நிறம்)
திருமண விசேட சேவைக்கு
தொடர்பு:- 0775533114

## மணமகன்கள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1980 ஆம் ஆண்டு 8 இல் செவ்வாய் 41 பாவம் மக நட்சத்திரம் நோர்வேப் பிரஜை டொக்டர் மணமகளுக்கும், 1885 ஆம் ஆண்டு உதயத்துச் செவ்வாய் 60 பாவம் உத்தரட்டாதி இலங்கை டொக்டர் மணமகளுக்கும் மணமகன்கள் தேவை.
தொடர்பு: 0777495329

## வீடு விற்பனைக்கு

வைமன் வீதியில் 2¾ பரப்புக் காணியில் அமைந்துள்ள சுற்று மதில் வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0212228333, 0777730567

## தவறிவிட்டது

டாக்டர் சுப்பிரமணியம் வீதி, சுன்னாகத்தைச் சேர்ந்த நாகரத்தினம் மதிகரன் என்பவருடைய தேசிய அ.அட்டை (822321860V) மற்றும் ஒரு தொகைப் பணம் என்பன அடங்கிய பேர்ஸ் யாழ். பஸ் நிலையத்துக்கும் ஆஸ்பத்திரிவீதிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.
பொருளியற் கல்லூரி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
0774955789, 0772209651

## வீடு வாடகைக்கு

யாழ். நகரில் இராசாவின் தோட்ட வீதியில் சகல வசதிகளும் கொண்ட வீடு வாடகைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு- 0779095388

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நுணாவில் கிழக்கு, கல்வயல் வீதி, முதலாம் ஒழுங்கையில் கிணற்றுடன் கூடிய 10 பரப்புக் காணி (ஏ9 வீதிக்கு அரு கில்) விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு: 0776034626

## காணி விற்பனைக்கு

கைதடி, நாவற்குழியில் ஏ-9 பாதைக்குச் சமீபமாக 4 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு: 021 32 11220, 021 7400909

## வீடு விற்பனைக்கு

குருசோ வீதி சந்திக்கு அருகில் சகல வசதிகளுடன் மூன்று பரப்பு காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. பார்வையிடல் November (28,29) 9-4 மணி வரை
தொடர்பு: 0770824760
(10880)(9-6-

## தேவை

### மருந்தாளர்

சுயவிவரத்துடன் நேரில் வரவும்
வைத்தியப் பணிப்பாளர்
சென்றல் நேசிங் ஹோம்,
350, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
(10832)(9-6-

## கூட்டம்

புனர்வாழ்வு அதிகார சபையின் கடன் வழங்கும் செயற்றிட்டத்தின் கீழ் புனர்வாழ்வு பெற்ற முன்னாள் போராளிகளில் தெரிவுசெய்யப் பட்டவர்களுக்கான கூட்டம் எதிர்வரும் 4 ஆம் திகதி மு.ப.10 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந்தத் திட்டத்திற்கு யாழ்.மாவட்டத்தில் 700 பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு அவர்களின் பெயர்ப்பட்டியல் அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு யாழ். மாவட்டச் செயலகத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் தத்தமது கிராம அலுவலரிடம் தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## வீடு விற்பனைக்கு

இல.306, நாவலர் வீதியில் அமைந்துள்ள (ஆனைப் பந்திச் சந்திக்கு அருகில்) 2 பரப்புக் காணியுடன் வீடு விற்பனைக்கு உண்டு. (தரகர் தேவையில்லை)
தொடர்புகளுக்கு- 0771345580

## வீடு வாடகைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய மாடி வீடு உடன் வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனம், டொக்டர் குடும்பம், அரச தொழில் புரியும் குடும்பம் விரும்பத்தக்கது.
Park Road, யாழ்ப்பாணம்.
T.P- 0770788943, 0778517062

## சந்திரகாந்தன் திருமணசேவை

துரிதமாகச் செயற்படும் திருமணசேவை,
டொக்டர், எஞ்சினியர், வெளிநாடு, உள்நாடு
அனைத்து மண மக்களும் எம்மிடம் உண்டு.
**சந்திரகாந்தன் திருமணசேவை,**
தொல்புரம் மத்தி, சுழிபுரம்.
S.ஆனந்தி - இயக்குணர்- 0775081756



**ROYAL INTERNATIONAL VISA CONSULTING**

பல வருடகால அனுபவம் வாய்ந்த எமது நிறுவனத்தினால் கனடா, இத்தாலி போன்ற நாடுகளுக்கு குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு

**Work visa, PR visa, Business visa**

போன்றவற்றிற்கான ஒழுங்குகள் செய்து தருவதுடன் Refusal, Pending விசாக்கள் அனைத்தும் நம்பிக்கையுடனும், உத்தரவாதத்துடனும், கால தாமதம் இன்றியும் எம்மால் செய்து தரப்படும்.



Phone No:- 0772484403 General Line:- 0112363880
Web site:- www.ricvisa.com
Address:- 257 1/1 A, Galle Road, Wellawatte, Colombo-06.
Email: [illegible]

FLEX Graphic

# மரண அறிவித்தல்கள்

## கனகராசா சரஸ்வதி



எழுதுமட்டுவாழ், விழுபளையைப் பிறப்பிடமாகவும், பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா சரஸ்வதி 23.11.2011 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு- செல்லம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா- அன்னப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், கனகராசாவின் அன்பு மனைவியும், குமுதினி (சுவிஸ்), அமுதினி (இத்தாலி), குணாளன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், கமலதாசன்(சுவிஸ்), புஸ்பராசா (இத்தாலி) ஆகியோரின் மாமியும், மிதுளா(இத்தாலி), மதுசன் (இத்தாலி), லக்சன்(சுவிஸ்), லதுயா(சுவிஸ்)ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்ற குமாரசாமி மற்றும் பாலமுரளி ஆகியோரின் அன்புச் சகோதரியும், கனகேந்திரனின் மைத்துனியும், மைதிலி பிரதீபன்(இத்தாலி) ஆகியோரின் பெரிய தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (28.11.2011) திங்கட்கிழமை பிரான்ஸில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மிருசுவில் தெற்கு,
மிருசுவில்.

தகவல்:
க.கனகேந்திரன் (மைத்துனர்).

## செல்லையா சபேஸ்குமார்

(சாரதி-இ.போ.சபை )



தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வல்லை வீதி, தொண்டமானாறை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா சபேஸ்குமார் 25.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா மற்றும் லக்சுமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், புஸ்பாவதியின் அன்புக் கணவரும், பிரதீப், லாவன்யா, அர்ஸ்சியா ஆகியோரின் அன்புத் தந்தையும், ரஞ்சி, றீட்டா, அகிலகுமார், குஞ்சன் ஆகியோரின் சகோதரனும், நட்சத்திரம் அரியம்- தனபூபதி தம்பதியரின் மருமகனும், சத்தியாவதி, இராசேந்திரம் (ஜேர்மனி, ரகுபதி, யாமினி(லண்டன்), திருப்பதி, வளர்மதி, பேரானந்தம், தனலக்சுமி, திருமால்வதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காட்டுப்புலம் இந்து மாயனத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வல்லைவீதி,
தொண்டமானாறு

தகவல்:
குடும்பத்தினர்.

## திருமதி சிவபாக்கியம் இராமநாதர்



அல்வாய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் மிருசுவில் வடக்கை முன்னைய வசிப்பிடமாகவும் இல.62, அரச வீதி, நல்லூரைத் தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய ஆசிரியை திருமதி சிவபாக்கியம் இராமநாதர் நேற்று (26.11.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் இராமநாதரின் (இளைப்பாறிய அதிபர்) அன்பு மனைவியும் திருமதி நா.குமுதநாயகி (ஆசிரியை, யா/வைத்தீஸ்வராக் கல்லூரி), மகேந்திரன் (இளைப்பாறிய அதிபர்), திருமதி ப.அமிர்தகௌரி (ஆசிரியை, அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாலயம்), செல்வி இ.வசந்தசெல்வி (தாதிய உத்தியோகத்தர், யாழ்.போதனா வைத்தியசாலை), சிவேந்திரகலாநிதி (அரச நில அளவையாளர், நில அளவைத் திணைக்களம், யாழ்ப்பாணம்), சர்வேந்திரன் (உதவித் திட்டமிடல் பணிப்பாளர், கச்சேரி, யாழ்ப்பாணம்), சத்தியேந்திரம்பிள்ளை (சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்.தேசிய கல்வியியல் கல்லூரி. இணைப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்) ஆகியோரின் அன்புத் தாயும் நாமநாதன் (முன்னாள் தொழில் நுட்பவியலாளர், பெருந்தெரு திணைக்களம்), பரலோகராசா (மந்திகை அரசினர் வைத்தியசாலை), திருமதி மனோராஜி (ஆசிரியை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), திருமதி லக்ஷிமி பிரபா (ஆசிரியை, கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்), திருமதி ஆதிரை (ஆசிரியை, நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம்), திருமதி செவ்வந்தி (ஆசிரியை, மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும் சோபியா (மாணவி, யா/இந்து மகளிர் கல்லூரி), பிரவீணா, சிவநிரோஜினி, மஞ்சுலானி, ஆரணி (வேம்படி மகளிர் பாடசாலை மாணவிகள்), அபிராம், ரவீந்திரசங்கர், பிருந்தாபன் (யா/ இந்துக் கல்லூரி மாணவர்கள்), கோபிகிருஷ்ணா (மாணவன், யா/பொஸ்கோ வித்தியாலயம்) ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணியளவில் இல.62 அரச வீதி, நல்லூர் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.62, அரச வீதி.(இளம் கலைஞர் மண்றம் அருகாமை) நல்லூர், யாழ்ப்பாணம்.

தகவல்:
சி.இராமநாதர் (கணவர்).

## குத்தகைக்கு/ வாடகைக்கு

ஸ்ரான்லி வீதியில் கஸ்தூரியார் வீதிச் சந்திக்கு அருகில் 5 பரப்பு வெற்றுக்காணி குத்தகைக்கும் வாடகைக்கும் உண்டு.
தொடர்புகளுக்கு- 0773510511

# மரண அறிவித்தல்கள்

## சிவபாக்கியம் ஐயாத்துரை



அல்வாயைப் பிறப்பிடமாகவும் சங்கானையை வசிப்பிடமாகவும் (தற்போது திருகோணமலை) கொண்ட சிவபாக்கியம் 25.11.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி- சின்னம்மா தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற ஐயாத்துரை அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அன்னம்மா, பொன்னுத்துரை மற்றும் இராசதுரை காலஞ்சென்ற குலசிங்கம் மற்றும் வேலும் மயிலும் காலஞ்சென்றவர்களான தேவி,கிளி மற்றும் வேலாயுதம், பாரதி, கைலைன் கிரிவாசன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ,சுலோசனாதேவி, ஸ்ரீதரன், புஸ்பகலா, புஸ்பராணி, வதனி, வசந்தா தேவி ஆகியோரின் பாசமிகு தாயும் சிவானந்தா, லக்ஷமிகலா, தர்மதாஸ், தயசீலன் (பாபு) சுரேஸ், ராதா, மனோகரன் ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 27.11.2011 ஞாயிற்றுக்கிழமை திருகோணமலையில் அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் நடைபெறும்
இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கலைமகள் வீதி,
நல்லூரர் வடக்கு.கல்வியங்காடு.

தகவல்:
பாபு(மருமகன்)

## கதிரவேலு பரமானந்தம்(ராசா)



பிறவுண் வீதி, 5ஆம் ஒழுங்கையைப் பிறப்பிடமாகவும் 154/60 ஆத்தி சூடி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு பரமானந்தம் கடந்த 20.11.2011 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலுசுவாசாமி - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் சற்குணத்தின்(தேவி) அன்புக் கணவரும் மோகன் (பிரான்ஸ்), பிரபாகரன் (பிரான்ஸ்), ஆகியோரின் அன்புத் தந்தையும் பேரம்பலம் சர்வானந்த தேவி, சோதிப் பிள்ளை,மீனா, காலஞ்சென்றவர்களான நித்தியானந்ததேவி, ஜோகேஸ்வரி, ஆகியோரின் சகோதரனும் மாசிலா மணி, சிவரட்ணம், ரவி, பசுபதி, சிவராசா, விசையலட்சுமி, துரைமணி,தையல்நாயகி காலஞ்சென்றவர்களான கனகசபை (சின்னத்தம்பி), கதிரவேலு ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(27.11.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30.மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
ப.சற்குணம் (தேவி மனைவி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொன்சேகாவின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதன்போதே இந்த வழக்கின் விசாரணை டிசெம்பர் 15 ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது. நாடாளுமன்ற உறுப்பினர் என்ற வகையில் நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்ளவும் நாடாளுமன்ற வாக்களிப்புகளில் பங்குபற்றவும் தனக்குரிய அதிகாரங்களையும் சிறப்புரிமைகளையும் பயன்படுத்துவதற்கும் இயலுமான விதமாக சட்டத்தின்படி தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்வதற்கும் பிரதிவாதிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி சரத் பொன்சேகா இவ்வழக்கைத் தொடுத்திருந்தார். (ங-சி)

## வளிமண்டல...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யில் மாத்தறை மாவட்டம் மழை மற்றும் மினி சூறாவளி காரணமாக பலத்த இழப்பினைச் சந்தித்துள்ளது. 17 க்கும் அதிகமானோர் உயிர் இழந்துள்ளனர். இவ்வாறு இயற்கை அனர்த்தம் ஏற்படக் போவது குறித்து எச்சரிக்கை விடுக்க வளிமண்டலவியல் திணைக்களம் தவறிவிட்டது. முன்கூட்டியே வளிமண்டலவியல் திணைக்களம் இது குறித்து அறிவுறுத்தி இருந்தால் இழப்புகளை குறைத்திருக்க முடியும். இவ்வாறு முன்னெச்சரிக்கையை வளிமண்டவியல் திணைக்களம் வெளியிடாமைக்கான காரணத்தை அறிய விசேட குழுவொன்றை அமைக்கப் பட்டுள்ளது. அதன் ஊடாக விசாரணைகள் நடத்தப்படும்.இந்த விடயம் குறித்து வளிமண்டலவியல் திணைக்கள அதிகாரிகளிடம் அறிக்கை ஒன்றையும் கோரியுள்ளோம் -என்றார். (ங-சி)

## மாவீரர்தின...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கழகம் என்பன தமிழகத்தில் மாவீரர் தினத்தைக் கொண்டாடுகின்றன. தமது கட்சிசார்பில் இன்று நடைபெறும் மாவீரர் தின நிகழ்வில் கட்சி உறுப்பினர்கள் மற்றும் தமிழர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு தொல். திருமாவளவன் கேட்டுள்ளார்.

சென்னை, கோடம்பாக்கத்தில் உள்ள வீரநங்கை செங்கொடி அரங்கில் நிகழ்வுகள் நடைபெறுகின்றன.

### லண்டனில்

பிரிட்டனில் உள்ள தமிழ் மாணவர்கள் மத்திய லண்டன் பகுதியில் அமைந்துள்ள சவுத் பேங் பல்கலைக்கழகத்தில் மாவீரர் நாள் நிகழ்வை நேற்றுச் சிறப்பாக நடத்தினர். லண்டன் சவுத் பேங் பல்கலைக்கழகம் உட்பட பிரிட்டனின் பிரசித்தி பெற்ற எட்டு பல்கலைக்கழகத் தமிழ் மாணவர் ஒன்றியங்களும் சேர்ந்து இந்தச் சிறப்பு நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்வில் பிரிட்டனின் லிபரல் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் சிமன் ஹுக்கேஸ் கலந்துகொண்டார். பிரிட்டிஷ் தேசியக் கொடியை அவர் ஏற்றி வைத்தார். ப்ருநெல் பல்கலைக்கழக மாணவரும் இளையோர் அமைப்பின் உறுப்பினருமான செல்வன் ராகேஷ் நம்பியார் தமிழீழத் தேசிய கொடியை ஏற்றினார்.

### ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில்

ஐரோப்பிய மற்றும் அமெரிக்க நாடுகளிலும் மாவீரர் தினத்தைக் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. அந்தந்த நாடுகளில் வழமையாக மாவீரர் தினத்துக்கான ஏற்பாடுகளைச் செய்பவர்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளபோதும், நாடுகடந்த தமிழீழ அரசினால் குழப்பங்களை ஏற்படுத்தக்கூடிய விதத்தில் போட்டி மாவீரர் தினம் இந்த நாடுகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப் பட்டுள்ளன.

எனினும் விடுதலைப் புலிகள் இயக்கம் தாயகத்தில் தோற்கடிக்கப்பட்டதன் பின்னர் கடந்த இரண்டு ஆண்டுகளில் நடைபெற்றதைவிட ஒழுங்கமைக்கப்பட்ட வகையில் இம்முறை மாவீரர் தின நிகழ்வுகள் வெவ்வேறு குழுக்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று ஐரோப்பியத் தகவல்கள் தெரிவித்தன. (உ)

## மரண அறிவித்தல்கள்

### ஜெயரட்ணம் ஜெயகரன்

(முன்னாள் சாமுவேல் & சன்ஸ் கம்பனி உத்தியோகத்தர்)

உடுவிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட ஜெயரட்ணம் ஜெயகரன் 25.11.2011 வெள்ளிக்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஜெயரட்ணம் - மேரிபாக்கியம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரநடராசா- நாகபூசனி தம்பதியரின் மருமகனும், நாகரட்ணத்தின் அன்புக் கணவரும், அனன்ஷயா, அஷிதா ஆகியோரின் அன்புத் தந்தையும், கருணாஜோசேப், கஜபதி ஆகியோரின் அன்பு மாமனும், கனிஷாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்கிசையில் அமைந்துள்ள மஹிந்த மலர்ச்சாலையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### வரத்துங்கம் இராசம்மா

தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வரத்துங்கம் இராசம்மா நேற்று (26.11.2011) சனிக்கிழமை கத்தருள் நித்திரையடைந்தார்.

அன்னார் வணக்கத்துக்குரிய ராஜ்குமார்(யாழ். பிராந்தியத் தலைவர்P.A.P.M திருச்சபை) ஆகியோரின் பாசமிகு தாயும் ஆவார்.

அன்னாரின் இறுதி ஆராதனை நிகழ்வு நாளை (28.11.2011) பிற்பகல் 3 மணியளவில் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

செல்லப்பா இல்லம்,
ஒவசியர் ஒழுங்கை,
தெல்லிப்பழை.

தகவல்:
வண.ப. ராஜ்குமார்
(மகன்).

## ராணுவ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நவம்பர் 21 முதல் 27 வரை மாவீரர் தின நிகழ்வுகள் வடக்கு-கிழக்கில் கடந்த பல ஆண்டுகளாக நடைபெற்று வந்திருக்கின்றன. அதற்காக ஆலயங்களில் பூசைகளை நிறுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது. மணியெழுப்பத் தடைவிதிப்பது அராஜகமானது.

காரைநகரில் படையினரின் இத்தகைய செயலைக் கண்டித்த ஆனைமுகனின் வீட்டின் மீது பெற்றோல் குண்டு வீசியிருக்கிறார்கள். அதுபோல் இன்று கருத்துச் சொல்லும் என் மீதும் தாக்குதல் நடத்தப்படலாம்.

இராணுவத்தினர் மிக மோசமான அடக்குமுறையினை மக்கள் மீது திணிக்கின்றனர். மக்களைச் செம்மறி ஆடுகள் என்றெண்ணி நடந்துகொள்கின்றனர். இராணுவத் தலைமைப்பீடங்களின் தவறான வழிநடத்தல்களே இவற்றுக்கெல்லாம் காரணம்.

இராணுவத்தின் இத்தகைய செயல்கள் அவர்கள் மீது மக்களுக்குப் பகையுணர்வு வளரவே வழிசெய்யும்.

ஒரு மனிதனுக்குத் தன்னுடைய குடும்பத்தில் நடந்த இன்ப, துன்பங்களைக் கொண்டாடுவதற்கு உரிமை உண்டு. எனது குடும்பத்தில் ஒருவன் பிறந்தாலோ இறந்தாலோ அதனைக் கொண்டாட உரிமை இருக்கிறது. இதனைத் தடைசெய்ய யாருக்கும் உரிமையில்லை.

மக்கள் மீது அடக்குமுறைகளைத் திணித்தபடி அவர்கள் தமக்கு ஆதர வாக இருக்கவேண்டும் என்று இராணுவம் எதிர்பார்ப்பது முட்டாள்தனமானது. எனவே மக்கள் தமது இன்ப, துன்பங்களை அவர்களே கொண்டாடுவதற்கு அனுமதிக்க வேண்டும் - என்று தெரிவித்தார். (உ-15)

## காரைநகர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டின் முன்பக்கம் சேதத்துக்குள்ளானது. எனினும் தெய்வாதீனமாக வீட்டிலிருந்தவர்களுக்கோ, பிரதேச சபைத் தலைவருக்கோ எவ்வித பாதிப்பும் ஏற்படவில்லை.

பெற்றோல் குண்டுத் தாக்குதல் குறித்து பிரதேச சபைத்தலைவர் கோப்பாய் பொலிஸாருக்கு தொலைபேசி மூலம் தகவல் வழங்கியதையடுத்து அதிகாலை 2.30 மணியளவில் பொலிஸார் சம்பவ இடத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேவேளை பெற்றோல் குண்டு வீசப்படுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர் பிரதேச சபைத் தலைவரை கைத்தொலைபேசி மூலம் தொடர்பு கொண்ட இராணுவப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த ஒருவர் '' நீங்கள் இப்போது எங்கே இருக்கிறீர்கள்? '' என விசாரித்து தகவலறிய முற்பட்டதாகவும் காரைநகர் பிரதேச சபைத் தலைவர் வே. ஆனைமுகன் தெரிவித்தார்.

மாவீரர் நாளையொட்டி ரோந்து நடவடிக்கைகள், சோதனைகள் என்பவற்றை படைத்தரப்பு குடாநாடு எங்கும் தீவிரப்படுத்தியுள்ள நிலையில் குறித்த தாக்குதல் சம்பவம் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தத் தாக்குதலை காரைநகர் பிரதேச சபையின் உப தலைவரும் கண்டித்து அறிக்கை வெளியிட்டுள்ளார். (ங-14)

### மணமகன்கள் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம், 1980 ஆம் ஆண்டு 8இல் செவ்வாய் 41 பாவம் மக நட்சத்திரம் நோர்வே பிரஜை டொக்டர் மணமகளுக்கும், 1985ஆம் ஆண்டு உதயத்துச் செவ்வாய் 60 பாவம் உத்தரட்டாதி இலங்கை டொக்டர் மணமகளுக்கும் மணமகன்கள் தேவை.

தொடர்புகளுக்கு- 0777495329

### கடை வாடகைக்கு

பருத்தித்துறை வீதி கோப்பாயில் இரண்டு கடைகள் வாடகைக்கு உண்டு.(நிறுவனங்களின் பாவனைக்கு ஏற்றது)

தொடர்பு: 0750427166

*Medical Representative (Medical Iquipment Supplies,*

**Contact No- 0773059464**

### மோட்டார் சைக்கிள் விற்பனை

... விற்பனைக்குண்டு. தொடர்பு:0750401085

## போரில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றவில்லை என்பதையே இந்தச் சம்பவம் உணர்த்துகின்றது.

மக்களின் மன உணர்வுகளை அடக்க முற்பட்டால் அது மாபெரும் மக்கள் கிளர்ச்சி உருவாகவே வழிவகுக்கும்.- இவ்வாறு அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன்.

இந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கார்த்திகை மாதத்தில் போரில் உயிரிழந்தோரை நினைவு கூருவது தமிழ்ப் பிரதேசத்தில் ஒரு மரபாகவே மாறியிருந்தது. தனியே போராளிகளை மட்டும் நினைவு கூராமல் 1983 ஆம் ஆண்டிலிருந்து தமிழ் மக்களின் உரிமைக்காக தம் உயிரை ஈந்தவர்கள் அனைவரையும் இந்நாளில் அஞ்சலிப்பது வழமை. போரில் கொல்லப்பட்ட தமது பிள்ளைகளை நினைவு கூர பெற்றோருக்கு இது ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியது. அவர்களின் மன வலிகளை இறக்கி வைக்க உதவியது. இந்த நிகழ்வு ஒரு வன்முறை சார்ந்ததல்ல. அத்துடன் குறித்த ஓர் அமைப்புக்குச் சொந்தமான நிகழ்வுமல்ல. எனவே இதனை ஓர் மனிதாபிமான நோக்கோடே பார்க்க வேண்டும்.

அமைதியான முறையில் தீபங்களை ஏற்றி மணி ஓசை எழுப்பி தமக்காக உயிரிழந்த இளைஞர்களுக்காகவும் பொது மக்களுக்காகவும் மக்கள் அஞ்சலி செலுத்துவர். ஆனால் அதற்கு அரசியல் சாயம் பூசி அதுவொரு பயங்கரவாத நடவடிக்கையாக சித்தரித்து வருகிறது படைத்தரப்பு. அத்துடன் மாவீரர் நாளில் ஆலயங்களில் மணி ஓசை எழுப்பவோ பூசைகளை நடத்தவோ கூடாது என்றும் தடை உத்தரவு போடப்பட்டுள்ளது. போரில் இறந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தவது ஒவ்வொரு தனிமனிதனதும் உரிமை. அதனை எவரும் தடுக்கவோ மறுக்கவோ முடியாது. அவ்வாறு தடுத்தால், அவர்களின் எண்ணங்களுக்கு எதிராகச் செயற்பட்டால் அது எதிர்மாறான விளைவையே ஏற்படுத்தும். இவ்வாறு செயற்படுவது இனங்களுக்கு இடையேயான நல்லிணக்கத்தை ஏற்படுத்த ஒருபோதும் உதவாது.

தம்பாட்டில் இருக்கும் மக்களை சினம் கொள்ளவைத்து அவர்களின் மனங்களில் வலியை அதிகப்படுத்தினால் அது மாபெரும் மக்கள் கிளர்ச்சியையே உருவாக்கும். இத்தகைய மக்கள் கிளர்ச்சிகளால் அண்மையில் எகிப்து, டுனிசியா, லிபியா போன்ற நாடுகளில் இருந்த ஆட்சியாளர்கள் தூக்கி எறியப்பட்டமையை நினைவில் கொள்ள வேண்டும்.

மாவீரர் தினத்தில் மணி ஓசை எழுப்பக்கூடாது என்று இராணுவத்தினர் கட்டளையிட்ட தகவலைப் பகிரங்கப் படுத்தியதற்காக காரைநகர் பிரதேச சபைத் தலைவரின் வீட்டின்மீது நடத்தப்பட்ட பெற்றோல் குண்டுத் தாக்குதல் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட எச்சரிக்கையாகும். இந்தச் சம்பவத்தை நான் வன்மையாகக் கண்டிப்பதுடன் குற்றவாளிகளை அரசு இனங்கண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோருகிறேன்.- என்றுள்ளது.

## நேற்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கியும் ஆலயங்களில் விசேட பூசை வழிபாடுகள் நிகழ்த்தியும் பிரபாகரனின் பிறந்த நாள் கொண்டாட்டங்கள் நடைபெற்றதாகக் கூறப்படுகிறது.


இந்தியாவின் தமிழகத்தில் பல பகுதிகளிலும் புலிகளின் தலைவரின் பிறந்ததின நிகழ்வுகள் எழுச்சியுடன் நடைபெற்றன.

இதேவேளை -

''நேற்று பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு ஒரு சிலர் சுவரொட்டிகளை ஒட்டமுனைவதாகத் தகவல் கிடைத்துள்ளதால் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது . ஒருபோதும் அவரின் பிறந்ததின கொண்டாட்டங்கள் இங்கு இடம்பெறப் போவதில்லை. நேற்றையதினம் வழமையான ஒரு நாளாகவே இருந்தது'' என்று யாழ். மாவட்ட கட்டளைத் தளபதி ஹத்துரு சிங்க தெரிவித்திருந்தார். (ங)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு
10
*
04
*
1927



உதிர்வு
29
*
11
*
2008

அமரர்

### பொன்னம்பலம் முத்தையா

திதி: துதியை

*அன்புக்கும் பண்புக்கும் பாசத்துக்கும் உறைவிடமாய் எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் இன்றெம்மைப் பிரிந்து மூன்றாண்டுகள் கடந்தாலும் உங்கள் அழியா நினைவுகள் என்றும் எங்கள் நெஞ்சங்களில் அணையாத தீபமாய் ஒளிர்ந்து கொண்டிருக்கும். என்றென்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போமாக.*

6,2ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

நீங்காத நினைவுகளுடன் ...
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# BRITISH COLLEGE OF HIGHER STUDIES

BCHS

அனைத்துப் பிரிவுகளுக்கும் புதிய வகுப்புக்கள் ஆரம்பமாகின்றன.

## BI Exam - Student Visa மூலம் UK செல்பவர்களுக்கானது

City & Guilds இன் B1 பரீட்சை ஏனைய ஆங்கிலப் பரீட்சைகளை விட மிகவும் இலகுவானதுடன் IELTS - 4.5 இற்கு ஒப்பானது. இது British High Commission னால் முற்றிலும் அங்கீகரிக்கப்பட்டதுடன் எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றமுடியும்.

Duration : 2 Months

## Spoken English With Grammar - Quick Learning Course (1 1/2 Month)

ஆங்கிலத்தில் சரளமாகக் கதைக்க விரும்புவர்களுக்காகவே நடாத்தப்படுகிறது. தொழில் புரிபவர்களுக்கு பிற்பகல். சனி மற்றும் ஞாயிறு வகுப்புக்கள் உண்டு.
A/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இது மிகவும் சிறந்தது.
வகுப்புக்கள் யாவும் புதிய தொழில் நுட்பத்திற்கமைவாகவும் (Video & Audio Visuals) கூடுதலான பயிற்சிகளுடன் நடாத்தப்படுகிறது.

## Diploma In English (2 Month)

ஒரு தொழில் தேடுவதாயினும் சரி உயர் கல்வியினைத் தொடருவதாயினும் சரி ஆங்கிலத்தின் தற்காலத்தேவையும் அதிலே உங்களின் புலமை என்பதும் இன்றியமையாதது. இத்தேவைகேற்ப எமது பாடத்திட்டங்களும் வகுப்புக்களும் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. தொழில் புரிவோர், மாணவர்களுக்கென வகுப்புக்கள் உண்டு.

## IELTS (International English Language Testing System)

(Students Visa மூலமாக வெளிநாடு செல்பவர்களுக்கானது) 2 1/2 Months
We guarantee minimum band 5.0 Upwards

## A1 Exm - Sponsor / Settlement Visa மூலம் UK செல்பவர்களுக்கான பரீட்சை

- U.K. அரசாங்கத்தினால் சிபார்சு செய்யப்பட்டது
- எமது கல்லூரியிலேயே பரீட்சைக்கு தோற்ற முடியும் சான்றிதழின் வலிது கால எல்லை அற்றது.
- 2012 April இல் எதிர்பார்க்கப்படும் புதிய நடைமுறையின் கீழ் ஆங்கிலத்தின் தராதரத்தை B1 நிலைக்கு உயர்த்த முடிவு செய்திருப்பதால் அதற்கு முன் உங்களை பதிவு செய்யுங்கள்.
- நம்பிக்கைக்குரிய சர்வதேச பரீட்சை
- ஏனைய பரீட்சைகளை விட மிகவும் இலகுவானது

அனுமதிக்கு முந்துங்கள்

**Weekend Courses Will be Started on 3rd and 4th of December**

மேலதிக விபரங்களுக்கும் இலவச ஆலோசனைகளுக்கும் இன்றே எம்மைத் தொடர்பு கொள்ளவும்.

| Head Office: 30 -1/14, w.A.De Silva Mw. Colombo - 6 Tel: 2500207 | Jaffna Branch: No. 15, Sirambiyady Lane, off Stanley Road, Jaffna. Tel: 021 222 4550 | Vavuniya Branch: No. 6, Vairavarkovil Road, Vaiavarpulliam Kulam, Vavuniya. Tel: 024 324 5287 |
|---|---|---|

Hot Lines: 0777 222 422 / 0777585913 / 071 4299935 / 0777730074


## மின்சார... (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மேற்கொண்டனர். நகரின் பல இடங்களிலும் இந்தத் திடீர்ச்சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்டவர்கள் யாழ். பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் இவர்கள் 28 பேரும் நேற்றைய தினம் ஆஜர்படுத்தப்பட்டபோது, தலா 10 ஆயிரம் அபராதம் விதிக்கப்பட்டதுடன் எதிர் வரும் 29 ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் அதனைச் செலுத்துமாறும் உத்தரவிடப்பட்டுள்ளது.

சட்ட ரீதியான இணைப்பைப் பெற்றபோதும் பின்னர் சட்டவிரோதமான - மீற்றர் மானியில் மின்பாவனை பதிவாகாத வகையில் - அதே சமயம் வெளிப்புறத்தே இலகுவில் இனங்காண முடியாத வகையில் அவர்கள் கூடிய மின்சாரத்தை சட்டவிரோதமாகப் பெற்றுவந்துள்ளனர்.

அதிகமானவர்களின் வீடுகளில் குளிர்சாதனப்பெட்டி, ஏ.சி. (ஏயார் கண்டிஷன்) உள்ளிட்ட அதிக சக்தி கொண்ட மின் சாதனப் பொருள்கள் இருந்தமை தெரிய வந்துள்ளது. உயர் பதவிகளிலுள்ளவர்கள், வசதி படைத்தவர்கள்போன்றவர்களே இவர்களில் அனேகமானோர் என்று மின் சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ-4)


**A/L Physics**
By. Mohanraj. B.Sc
கற்பிக்கப்படும் 20 வருட வினாத்தாள்கள் மீட்கப்படும்.
(C/6303)(9-6-8) TP. 0776594913

**Vacancies in Jaffna- Point- pedro Road, V.V. Karunaratne & Co.**
1. Draught Man (Female)
2. Suppervisors
Please send your CV's to vvkc7@yahoo.com interviews on 30.11.2011 wednesday .
Mobile No. 0772360184
V.V. Karunaratne & Co, 8th Km Post, Jaffna. Point pedro Road, Kopai. (Infront of Kopai Cristian College)

**கார் வாடகைக்கு உண்டு**



திருமண வைபவங்கள் மற்றும் விசேடவைபவங்களுக்கான A/C கார் வாடகைக்கு உண்டு.



தொடர்புகளுக்கு: S.மதன், 0777289283

# NALRAVI SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:
- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்

யாருக்காக:
- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:
- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்



NALBON INSTITUTE OF ENGLISH STUDIES
We are born for your bond

| Head Office | Jaffna Branch |
|---|---|
| 527 2nd Floor | 62/20 3rd Floor |
| Galle Road Colombo 6 | Stanley Road Jaffna |
| Tel 0112 363656 Fax 2360004 | Tel 021 221 9 221 |

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com
(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)


## மரண அறிவித்தல்

### கனகரத்தினம் சுந்தரலிங்கம்

(இளைப்பாறிய உப அதிபர், யாழ்.மத்திய கல்லூரி)



தாவடியைப் பிறப்பிடமாகவும், மானியம் பதி ஒழுங்கை, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட கனகரத்தினம் சுந்தரலிங்கம் நேற்று (26.11.2011) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகரத்தினம்- சரஸ்வதி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான செல்வநாயகம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் நாகலட்சுமி (ரதி) யின் அன்புக் கணவரும் கஜந்திராவின் (லண்டன்) பாசமிகு தந்தையும், சிவராமின் (லண்டன்) மாமனாரும், திருமதி சுப்பிரமணியம் மகேஸ்வரி (பிரான்ஸ்)யின் அன்புச் சகோதரனும், பாலாம்பிகை, ஞானக்குமார், ஞானசோதி (பிரான்ஸ்), யோகராணி (லண்டன்), ஞானசுந்தரி (லண்டன்), ஞானவல்லி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனும் பாலச்சந்திரன், இராஜகுமாரி, தயாபரன், பத்மினி, சாந்தினி, வசந்தரூபன், காலஞ்சென்றவர்களான பாலகிருஷ்ணன், ஜெயகௌரி, சிறிகாந்தன் ஆகியோரின் மைத்துனரும் மற்றும் சித்திரா தேவி, தவராஜா (பிரான்ஸ்), லலிதாதேவி, Dr. இரத்தினசிங்கம் யாழ்.மத்திய கல்லூரி (JMO, யாழ். போதனா வைத்தியசாலை), சாமினி (லண்டன்), காலஞ்சென்றவர்களான தங்கேஸ்வரி, கணேசபிள்ளை, விஜயரெட்ணம் ஆகியோரின் சகலனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மானியம்பதி ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்: மனைவி
திருமதி சுந்தரலிங்கம்.
(10831)(2-6-9)


மாதாந்தம் ரூ 50,000/- வேண்டுமா?
கோண் ஐஸ்கிறீம் மெஷின்
குளு குளு ஐடியா!!




- சோயா வெனிலா சொக்லட் சுவைகள்
- இலவச பயிற்சி
- விற்பனையின் பின் சேவை

விலை ரூ 99,000/- இல் இருந்து
புத்தம் புதியது
WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(Member of Pluss int.)
No. 18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03, Sri Lanka.
தமிழில் தகவல்பெற (யோகேஸ்)
Hot Line: 077 391 8870, 077 106 6902

ஜேர்மனி, சுவிஸ், பிரான்ஸ், நோர்வே, கனடா, ஆஸ்திரேலியா... உட்பட எல்லா நாடுகளுக்குமான சகல விதமான விஸாக்களுக்குமான இலவச சட்ட ஆலோசனை.
சனி, ஞாயிறு மட்டும்.
நேரில் வரவும்.

**திசைகாட்டி**



முன்மாதிரியான ஆலோசனை நிறுவனம்
37, சிவகுருநாதர் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 9016, 021 4914527
E- mail: Thisaikaddi@sltnet.lk
இணையத்தள முகவரி: www.thisaikaddi.lk
(யாழ்.நகரிலிருந்து கஸ்தூரியார் வீதியூடாக வருகையில் யாழ்.இந்துக் கல்லூரி மைதானம் கடந்தவுடன் வலது புறமாக வரும் ஒழுங்கை)

27வது அகவையில் கால்பதிக்கும் உதயன் பத்திரிகைக்கு எமது இனிய மனமார்ந்த வாழ்த்துக்கள்

# மதிகலர்ஸ் பிறிண்டர்ஸ்

உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கின்ற மங்களகரமான நிகழ்வுகளுக்கு ...

MATHI COLOURS

## திருமண அழைப்பிதழ் காட்சியறை

15/2 முருகேசர் ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொ.இல : 021 2229285
web.www.mathicolours.com

புதிய வடிவமைப்புக்களுடன் கண்களைக் கவரும் பலவித மடல்களுக்கு ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்...

கிளை நிறுவனம்
இல 61, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (ஆசீர்வாதம் ஸ்ரோர்ஸ்)
தொ.இல : 021 2219092


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27.11.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# முதலாம் ஆண்டு நினைவில்

அனுராதபுரத்தைப் பிறப்பிடமாகவும், தர்மபுரம் இல.449/9 ஐ வசிப்பிடமாகவும் கொண்ட

## திருமதி சண்முகராசா பரமேஸ்வரி

(சகுந்தலா அக்கா)



மண்மடியில் 27.03.1951

விண்மடியில் 27.11.2010

27.11.2010 ஆம் நாள் எம்மை விட்டுப் பிரிந்த எம் அன்புத் தெய்வத்தின் முதலாம் ஆண்டு நிகழ்வும், மதியபோசனமும் இன்று (27.11.2011) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.30 மணி அளவில் மகன் ச.ஜீவராசா (அம்பாள் கட்டடப் பொருள் வாணிப உரிமையாளர்) அவர்களது இல்லத்தில் இடம்பெறவுள்ளதால் உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதுடன் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும்படி அன்புடன் வேண்டப்படுகின்றீர்கள்.

மகன்: ச.ஜீவராசா குடும்பம்
மகன்: ச.ஜெயராசா குடும்பம்
மகள்: திருமதி கெங்காதரன் திருமகள் குடும்பம்.

"நிஜம், நிழலாகியதால்
நிம்மதி இழந்து வாடுகின்றோம்."

எம் வாழ்வை வளமாக்கிய,
வற்றாத நதி.... வற்றி விட்டதால் – நாம்
வாடுகின்றோம் உம், முகம் தேடுகின்றோம்...
அம்மா..... அம்மா..... அம்மா....

ஓம் சாந்தி

ச.ஜீவராசா
அம்பாள் கட்டடப்பொருள்
வாணிபம், தர்மபுரம்.
தொ.பே.0772056054 (14017)(2-6-9)


# பாட்டி மருத்துவம்



நாள்பட்ட சளி மற்றும் இருமலுக்கு அருமருந்து மஞ்சள் மற்றும் மிளகு தூள் என்று பாட்டி வைத்தியம் கூறு கின்றது.

ஒரு டம்ளர் பாலில் ஒரு கரண்டி மஞ்சள் தூள், மிளகுத்தூள் ஆகியவற்றைச் சேர்த்து தினந்தோறும் இரவில் குடித்து வந்தால், நான் கைந்து நாளிலேயே சளி, இருமல் பறந்தோடி விடுமாம்.

நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட மஞ்சள், உடலில் உட்புகும் நோய்க் கிருமிகளை எதிர்த்து போராடி விரட்டியடிக்கிறது. அதிக மருத்துவ சக்தி கொண்ட மிளகு சளியைக் கரைத்து காணாமல் போகச் செய்கிறது. தினந்தோறும் உணவில் மிளகு, மஞ்சள் ஆகியவற்றை சேர்த்துக் கொள்வதற்கு காரணம் இதுதான்.


SWISSTEK
டைல் மோட்டார்
ஃபுளோர் மற்றும் வோல் டைல்களைப் பதிப்பதற்கான நவீன உடனடிக் கலவை
சர்வதேச நியமங்களுக்கமைய தயாரிக்கப்பட்டது

1958 லிருந்து
புகைப்படக்கருவித்திருத்துவதில்
நம்பிக்கையைவென்ற ஸ்தாபனம்
வெளியூர்பயிற்சிப்பெற்ற தமிழ்பேசும்
தொழில்நுட்பவியலாளர்கள் உங்களின் சேவைக்கு




இலங்கையில் Nikon கான
ஏக முகவர்
Photo TECHNICA
இல. 288, காலிவீதி, கொழும்பு-03 தொ.பே : 2577877








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# முட்டையின் மகத்துவம்



வேலை செய்யும்போது தூக்கக் கலக்கமாக இருக்கிறதா, தூக்கம் கலையவும் சக்தி பெருகவும் உடனே முட்டை சாப்பிடுங்கள் என்கின்றனர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள்.

சொக்கலேட்டுகள், பிஸ்கற், இனிப்புகள் ஆகியவற்றில் உள்ள கார்போஹைட்ரேட்டுகளைவிட முட்டையில் உள்ள புரதச்சத்துதான் தூக்கத்தைப் போக்கி சுறுசுறுப்பாக வைத்திருக்கும் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

நம்மை விழிப்புடன் இருக்க வைத்து, உடலிலுள்ள கொழுப்புகளை எரித்துக் கரையவைக்கும் மூளைச்செல்களைப் பாதிப்பது எது என்று ஆராய்ச்சி செய்தனர். அப்போது சேதமடைந்த மூளைச் செல்களுக்கு, முட்டையிலுள்ள புரதச்சத்து மாதிரிகளை உட்செலுத்திய போது மூளை சுறுசுறுப்பாகி நன்றாக வேலை செய்ததாம். அப்போது ஆரெக்ஸின் என்ற ஊக்கி வெளிப்பட்டதாம்.

டாக்டர் டென்னிஸ் புர்தகோவ் தலைமையிலான குழு இந்த ஆராய்ச்சியை மேற்கொண்டது. ரொட்டிக்கோ வேறு தின்பண்டத்துக்கோ, தொட்டுக்கொள்ள ஜாம் வேண்டுமா, முட்டையின் வெள்ளைக்கரு வேண்டுமா என்று கேட்டால் வெள்ளைக்கருவே வேண்டும் என்று கேட்டு சாப்பிடவேண்டும் என்கிறது ‘நியூ ரான்’ பத்திரிகையில் வெளியான ஆய்வுக்குழு அறிக்கை.

முட்டை வெள்ளைக்கருவின் மகாத்மியம் இத்தோடு முடியவில்லை. இதை பிரிட்டனைச் சேர்ந்த ஊட்டச்சத்து அறக்கட்டளையும் வேறு சோதனைகளுக்குப் பயன்படுத்தியது. முட்டையின் வெள்ளைக் கருவிலும் கொழுப்புச்சத்து இருந்தாலும் அந்தக் கொழுப்பு மாரடைப்பை ஏற்படுத்துவதில்லையாம். மிகச் சிலருக்கு மட்டுமே இந்தக் கொழுப்பால் மாரடைப்பு ஏற்படுகிறதாம்.

சிகரெட், பீடி புகைத்தல், தொப்பை விழும் அளவுக்குத் தொடர்ந்து கண்டதையும் சாப்பிடுதல், உடற்பயிற்சியே செய்யாமல் சோம்பேறிகளாக இருத்தல் ஆகிய காரணங்களால் தான் மாரடைப்பு அதிகம் வருகிறது என்றும் கண்டுபிடித்திருக்கிறார்கள்.

பால், தயிர், வெண்ணெய், நெய் ஆகியவற்றை அதிகம் சாப்பிடாமல், தினமும் ஒரு 6 கிலோ மீற்றராவது நடந்தே சென்று பழகுங்கள்.

RE

உங்கள் முச்சக்கரவண்டி பஜாஜ் ஆக இருக்கவேண்டியது



ஏன்?

செலவு - மிகக்குறைவு!
எரிபொருள் சேமிப்பு - மிகக் கூடியது!
சத்தம் - மிகக்குறைவு!
சேமிப்பு - மிகக் கூடியது!
தொழிற்பாடு - மிகவும் சிறந்தது!
பாவனைக்காலம் - மிகக் கூடியது!
மீள் விற்பனைப் பெறுமதி - மிகக் கூடியது!
உதிரிப்பாகங்களின் விலை - மிகக்குறைவு!
விற்பனை வலையம் - மிகப்பெரியது!
சேவை முகவர் வலையம் - சிறந்த தொழிற்பாடுடையது!
பூரண நம்பிக்கை - மிகக் கூடியது!
முற்கொடுப்பனவு - மிகக்குறைவு!

முச்சக்கரவண்டியொன்றை கொள்வனவு செய்யும் போது நீங்கள் எதிர்பார்க்கும் எல்லா நடவடிக்கைகளும் அதியுயர் மட்டத்தில் உள்ளது பஜாஜ் முச்சக்கரவண்டி மட்டுமே என்பது இப்பொழுது உங்களுக்கே புரிந்திருக்கும்.

விலை ரூ. 338,125/-

tradlanka

DPMC டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்
நிறுவன பதிவு இலக்கம்: PB270
சென். மார்டின்ஸ் டிரேட் சென்டர், பிரதான வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே: 021-7700600-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் சிறார்களின் கைவண்ணங்களைச் சுமந்து வெளி வருகிறது உதயனின் மற்றுமொரு வெளியீடு....

'அர்ச்சுனா'

# உலர் திராட்சைப் பழத்திலுள்ள பயன்கள்

உலர் திராட்சைப் பழத்தில் உடலுக்கு வலிமை தரும் சத்துக்கள் நிறைந்துள்ளன. திராட்சைப் பழ வகைகளில் உயர்தரமான திராட்சைப் பழங்களைப் பதம் செய்து உலர்த்திப் பதப்படுத்துகின்றனர். இந்த உலர் பழங்களை வெளிநாடுகளுக்கு அனுப்பினாலும் நீண்ட நாள்கள் வரை பழுதடையாது இருக்கும். திராட்சைப் பழத்தில் உள்ள விற்றமின் சத்துக்களை விட இதில் அதிகமான சத்துக்கள் காணப்படுகின்றன. பச்சைத் திராட்சைப் பழத்தை விட இதற்கு உஷ்ணசக்தி அதிகம். பச்சைத் திராட்சைப் பழத்தை விட 10 மடங்கு அதிக உஷ்ணத்தைக் கொடுக்கும்.

**இதில் அடங்கியுள்ள சத்துக்கள்**

உலர் திராட்சைப் பழத்தில் அதிக அளவு சுக்ரோஸ், ப்ரக்டோசும் நிறைந்துள்ளன. விற்றமின்களும், அமினோ அமிலங்களும் காணப்படுகின்றன. இதில் பொற்றாசியமும் மக்னீசியமும் காணப்படுவதால் அமிலப்பிரச்சிகைகள் அதிகம் ஏற்படாது.

**குருதிச்சோகையைக் கட்டுப்படுத்தும்**

ரத்தத்தில் ஹீமோகுளோபின் அளவு குறைவாக இருப்பவர்கள் உலர் திரட்சையை உட்கொண்டால் குருதிச்சோகை குணமடையும். தாமிரச்சத்துக்கள் ரத்தத்தில் சிவப்பணுக்களின் எண்ணிக்கையை அதிகரிக்கும்.

**காமாலை நோய் குணமடையும்**

மஞ்சள் காமாலை நோய் உள்ளவர்கள் தினமும் இரு வேளை உலர்திராட்சையைச் சாப்பிட்டு வர காமாலை நோய் குணமடையும். உலர் திராட்சைப் பழத்தில் 50 பழங்களை எடுத்துச் சுத்தம் செய்து பசுவின் பாலில் போட்டு போட்டுக் காய்ச்சி ஆற வைத்து பழத்தை சாப்பிட்டு விட்டு பாலை குடித்தால் காலையில் மலச்சிக்கல் சரியாகும்.

**உடல் புஷ்டிக்கு:**

இதில் உள்ள கல்சியம் சத்து எலும்பு மற்றும் பற்களின் வளர்ச்சிக்கு உதவுகிறது.

குழந்தைக்கு பால்காய்ச்சும் போதும் அதில் இரண்டு பழத்தை உடைத்துப் போட்டு காய்ச்சிய பின் பாலை வடிகட்டிக் கொடுத்தால், தேக புஷ்டி உண்டாகும். குழந்தை திடமாக வளரும்.

தொண்டைக்கம்மல் இருந்தால் இரவு படுக்கும்முன் 20 பழங்களை சுத்தம்செய்து பசுவின் பாலில் போட்டுக் காய்ச்சி, 10 வால் மிளகைத் தூள் செய்து சிறிதளவு பனங்கல் கண்டு சேர்த்து கலக்கிக் குடித்தால் தொண்டைக் கம்மல் குணமடையும். மூலநோய் உள்ளவர்கள் தினமும் உணவுக்குப்பின்னர் காலையிலும், மாலையிலும் 25 உலர்திராட்சைப் பழங்களை ஏழுநாள்கள் சாப்பிட்டுவந்தால் மூலரோகம் குணமடையும்.

## விளம்பரப் பலகை

**இலங்கையின் பிரபல முன்னணி நிதி நிறுவனம் ஒன்றில் இணைந்து Part Time அடிப்படையில் கடமையாற்றுவதற்கு துணிச்சல் மிக்க இளைஞர் யுவதிகளுக்கு அரியதோர் வாய்ப்பு!**

**எங்கு?** - LOLC Group

**யாருக்குப் பொருந்தும்?** - 25 வயதுக்குக் குறைந்த, துடிப்புமிக்க Part Time அடிப்படையில் தொழில் செய்ய விரும்பும் இளைஞர் யுவதிகளுக்கு

**இந்த வாய்ப்பு எந்தப் பிரதேச வாசிகளுக்கு?** - அனுராதபுரம், குருநாகல், இரத்தினபுரி, காலி, கண்டி, பதுளை, மட்டக்களப்பு, கம்பஹா, யாழ்ப்பாணம் மற்றும் களுத்துறை ஆகிய பிரதேசங்களில் வாழும் இளைஞர் யுவதிகளுக்கு

**தகைமை?** - பல்கலைக்கழகத்தில் கல்வி கற்பவராயின் அது ஒரு விசேட தகுதியாகும்.

**என்ன செய்ய வேண்டும்?** - LOLC நிறுவனத்தின் விற்பனை மேம்பாட்டு நடவடிக்கைகளில் பங்கெடுத்தல்.

**கொடுப்பனவு எவ்வாறு?** - Daily கையில் ஒரு நல்ல தொகை

இறுதித் திகதி? - 2011 டிசம்பர் 05 அல்லது அதற்கு முன்னர்

LOLC imagine the possibilities

Envelope இன் இடபக்க மேல்மூலையில் பிரதேசம் மற்றும் Part Time எனக் குறிப்பிடவும்.

ஆட்சேர்ப்பு நிலையம் - LOLC குழுமம் 100/1 ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ராஜகிரிய எனும் முகவரிக்கு CV யை அனுப்பவும்.

SINCE 1942

நம்பிக்கையை வென்றது... எந்நாளும் முன்னணியில்.

இலங்கையின் 1 தரம்

Sinks

PRINCE

CROWN STAINLESS STEEL KITCHEN SINK



801 QUEEN

103 KATHAKALI

501 PREETHI

ரூ 1875/- இலிருந்து

உடனடி அழைப்புகளுக்கு
0115 225247

நாடு முழுவதுமுள்ள எமது விநியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

சென். அன்ரனீஸ் ஹாட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்

Reaching for Excellence

SINCE 1942

HARCROS PIGMENTS

Red Colour Powder

மேசன்மார்களின் நம்பிக்கையான தெரிவு



ரூ. 485/- இலிருந்து

பிரித்தானிய தயாரிப்பாகும்

உடனடி அழைப்புகளுக்கு
0115 225247

நாடு முழுவதுமுள்ள எமது விநியோகத்தர்களிடமிருந்து பெற்றுக் கொள்ள முடியும்.

சென். அன்ரனீஸ் ஹாட்வெயார் (பிறைவேட்) லிமிட்டெட்

Reaching for Excellence

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருக்க இலகுவான வழி



இந்த உலகில் யாராவது மகிழ்ச்சியாக இருப்பதை விரும்பாமல் இருப்பார்களா என்றால் அது உண்மையாக இருக்காது. ஏனெனில் மகிழ்ச்சிதான் வாழ்க்கையை இன்னும் பிரகாசமாக்குகிறது.

திருப்தியான வாழ்க்கையை வாழ்பவர்கள் ஏனையவர்களை விடவும் நீண்டகாலம் வாழ்கின்றார்களென்றும் குற்றங்களைச் செய்வது குறைவாக உள்ளதென்றும் உறவுகளை வளர்க்கவே அவர்கள் விரும்புகின்றார்களென்றும் ஓர் ஆய்வு கூறுகின்றது.

மகிழ்ச்சிதான் ஒரு நாட்டின் சொத்து. மகிழ்ச்சியானவர்கள் நீண்டகாலம் வாழ்ந்தால் அவர்களால் அதிகளவு பயன் கிடைக்கும். அது நாட்டுக்கும் வளர்ச்சியாக இருக்கும்.

ஆனால் முழு நேரமும் மகிழ்ச்சியாக இருப்பது சாத்தியமா என்று ஒருவர் கேட்கலாம். ஒருவர் தனது மனதை மாற்றிக்கொண்டால் அதைச் சாத்தியமாக்கலாம் என்கின்றனர் விஞ்ஞானிகள்.

ஒரு பெண் முதலில் தனது சிகிச்சைக்கு எதிர்ப்புத் தெரிவித்து வந்தார். பின்னர் தன்னை ஒருவாறு மாற்றிக்கொண்டார். உண்மையில் எப்போதும் மகிழ்ச்சியுடன் இருப்பவர் ஒருவருக்கும் வேதனையான சம்பவங்கள் இடம்பெறலாம். அதனை நாங்கள் தடுத்து முன்னேறி வரவேண்டும்.

ஒரு கிரேக்கத் தத்துவாசிரியர் சொல்வதுபோல் விடயங்கள் எங்களைக் குழப்புவதில்லை. நாங்கள் அவ்விடயங்களைப் பார்க்கும் கோணந்தான் குழப்புகின்றது என்றார். இதுபோலவே மக்களோ நிகழ்வுகளோ எங்களை மகிழ்ச்சிப்படுத்தாது என்று பதிலுக்கு ஒருவர் கேட்கலாம். ஆம் மகிழ்ச்சிதான் எங்களது செயலையும் தெரிவுகளையும் செயற்படுத்துகின்றன. ஒருவர் எங்களில் அன்புசெலுத்தும்போது அல்லது ஒரு பதவியுயர்வு வரும்போது அவை எங்களுக்கு எவ்வளவு மகிழ்ச்சியைத் தருகின்றது. இவ்வாறான நன்மை பயக்கும் செயற்பாடுகள் இடம் பெறும் போது இயற்கையாகவே எமக்கு மகிழ்ச்சி ஏற்படுகின்றது.

ஆனால் இவை எவற்றையும் நாங்கள் எங்களது திருப்திக்கான முக்கிய நிகழ்வுகளாகக் கருதினோமானால் அவை எப்போதும் எங்களது வாழ்க்கையிலிருந்து காணாமற்போய்விடும்.






Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வேகமும் உந்துசக்தியும் யாழ்ப்பாணத்திற்கு வருகிறது. நீங்கள் தயாரா?

வாகன விற்பனைத் தொழிலில் முன்னணி வகிக்கும் பொதுக் கம்பனியான **யுனைட்டட் மோட்டர்ஸ் லங்கா பி.எல்.சி.** புதிதாக ஆரம்பிக்கும் **யாழ்ப்பாணக் கிளையில்** பணியாற்றுவதற்கு திறமையும் சுயமாக செயற்படும் ஆற்றலும் புத்தார்வமும் செயற்திறனும் உற்சாகமும் வாய்ந்தவர்களுக்குப் பின்வரும் பதவி வெற்றிடங்கள் உள்ளன. கம்பனியுடன் நீண்டகால தொழில்சார் உறவுகளை விருத்திசெய்வதில் ஆர்வம் கொண்டவர்களையே நாம் தேடுகின்றோம்.

## விற்பனை அலுவலர் (Sales Executive)

**பதவிக்கான தகுதிகள்**

- க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் 3 சித்திகளுடன் சிறந்த இடைநிலைக் கல்வி
- விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் தகைமைகள் அனுகூலமாகக் கருதப்படும்
- சாரதி அனுமதிப்பத்திரம் வைத்திருக்க வேண்டும்
- காட்சியறை மற்றும் வெளிக்கள விற்பனையில் அனுபவம்
- வாடிக்கையாளர் சேவை மற்றும் உறவு முகாமையில் சிறந்த ஆற்றல் அவசியமானது
- வயது 22 - 35

## சேவை ஆலோசகர் (Service Advisor)

**பதவிக்கான தகுதிகள்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கணிதம், ஆங்கிலம் உள்ளிட்ட 4 திறமைச் சித்திகளும் க.பொ.த. (உயர்தர) பரீட்சையில் 3 சித்திகளும் கொண்ட சிறந்த இடைநிலைக் கல்வி
- அங்கீகரிக்கப்பட்ட வாகனக் கல்வி நிலையமொன்றிலிருந்து வாகனத் தொழில்நுட்ப டிப்ளோமாவும் வாகனப் பொறியியலில் சிறந்த தொழில்நுட்ப அறிவும்
- கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம்
- வாடிக்கையாளர்களுடன் சிறந்த உறவுகளை வளர்த்து அவர்களைத் திருப்திப்படுத்தும் ஆற்றல்
- தொழில்நுட்ப அணியை ஊக்கப்படுத்தி வழிநடத்தும் திறமை
- இதே போன்ற தொழிலில் குறைந்தது 2 வருடகால அனுபவம்
- வயது 35க்கு கீழ்

## மோட்டார் மெக்கானிக் (Motor-Mechanic)

**பதவிக்கான தகுதிகள்**

- க.பொ.த. (சாதாரணதர) பரீட்சையில் கணிதம் உட்பட 4 திறமைச் சித்திகள் (ஆகக்கூடுதலாக 2 அமர்வுகளில்)
- கனரக வாகனங்களுக்கான சாரதி அனுமதிப்பத்திரம்
- தேசிய தொழில் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபையில் அல்லது Automobile Engineering Training Institute (AETI), மோட்டார் இயந்திரவியல் சான்றிதழ் அல்லது 2 வருட வாகன மின்னியல் கற்கை நெறி
- வயது 26க்கு கீழ்

**யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

தொழிலில் ஆர்வமும் சிறந்த தொடர்பாடல் திறனும் வாகனங்களில் பிரியமும் உள்ளவர்களே விரும்பப்படுகிறார்கள்.

**ஆங்கிலத்திலும் தமிழிலும் நன்கு உரையாடக்கூடியவராக இருப்பது கட்டாயம். சிங்கள அறிவு அனுகூலமானது.**

தெரிவு செய்யப்படுபவர்களுக்குக் கவர்ச்சியான சம்பளத் திட்டமும் சிறந்த தொழில் முன்னேற்ற வாய்ப்புக்களும் காத்திருக்கின்றன.

மேற்குறிப்பிட்ட தகுதிகள் உங்களுக்கு இருக்குமாயின், இந்த விளம்பரம் பிரசுரமான 7 தினங்களுக்குள் எமக்குக் கிடைக்கத்தக்கதாக உங்கள் சுயவிபரக்கோவை, உறவினரல்லாத இரு நடுவர்களின் விபரங்கள் என்பவற்றை தபாலில் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பவும்.

**விற்பனை அலுவலர்: sejaffna@unitedmotors.lk, மோட்டார் மெக்கானிக்: mmjaffna@unitedmotors.lk, சேவை ஆலோசகர்: sajaffna@unitedmotors.lk**

**United Motors Lanka PLC**
100, ஹைட் பார்க் கோனர், கொழும்பு 2.

The 7th Frontier


# மண்ணினாலே செய்யப்பட்ட சிற்பங்கள்





பல்வேறு மூலப்பொருள்களால் ஆன கைவண்ணங்களைப் பார்த்திருப்போம். இவற்றை மிகவும் சிரமப்பட்டு சிற்பிகள் தமது கலைவண்ணத்துக்கு உருவம் கொடுத்திருப்பார்கள். இப்படிப்பட்ட கலையுணர்வில் மண்ணை மட்டுமே பயன்படுத்தி மிகவும் தத்ரூபமாக சிற்பங்களை உருவாக்கி இருக்கிறார்கள்.

**GlucosCare**



# குருதியில் குளுக்கோஸ் மட்டத்தை கட்டுப்படுத்த இயற்கை வழி

- ★ சிங்கப்பூரில் இறக்குமதி செய்யப்பட்ட ஒரிஜினல் ஜிம்நிமா சில்வெஸ்ட்ரி இல் இருந்து தயாரிக்கப்பட்ட 100% இயற்கை மூலிகை தேயிலை
- ★ சதையக் கலங்களில் இன்சுலின் சுரக்கப்பட்டு, நீரிழிவுக்கு நிவாரணம் வழங்குகிறது.
- ★ குடற்பகுதிகளில் சீனி அகத்துறிஞ்சல் செயல்பாடுகளை கட்டுப்படுத்துகின்றது.
- ★ உடற்பருமன் மற்றும் கொலஸ்ரோலைக் கட்டுப்படுத்தி, உடலுக்கு சக்தியை வழங்குகின்றது.
- ★ விஞ்ஞானரீதியாகவும் மருத்துவரீதியாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

பக்க விளைவுகள் அற்றது



சிறந்த பெறுபேற்றிற்கு 14 நாட்கள் தினமும் 03 கோப்பைகள்
விலை ரூ 1,150/-

**Hotline: 077 3562111**

**UNIMED HEALTHCARE (PVT) LTD.**
No 12, Frazer Avenue, Dehiwala, Sri Lanka. Email: info@unimedhealthcare.com

ஏக விநியோகஸ்தர்கள்
யாழ்ப்பாணம் - Brishman Healthcare Products 077 208 8812
மட்டக்களப்பு - Citymax Marketing 077 779 0545

www.unimedhealthcare.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலக நீரிழிவு மாதத்தை முன்னிட்டு விஷேட சலுகை.

உங்கள் குருதியில் சக்கரையின் அளவை கணித்துக்கொள்ள ப்ரொடிஜி ஓட்டோகோட் மற்றும் ப்ரொடிஜி பொக்கட்

இலங்கையில் கோர்ட் முறை இல்லாமல் ஒரு துளி இரத்தத்தில் உங்கள் சக்கரையின் அளவை கணிக்கும்

Approved by the US FDA

இந்த விளம்பரத்தை எந்தவொரு பிரதான பாமசி, Arpico மற்றும் Laugfs சுப்பர்மார்கட்களில் வழங்கி இந்த சலுகையைப் பெற்றுக் கொள்ளலாம்.

எந்த ஒரு பழைய கருவியையும் கொடுத்து புதிய கருவியை பெற்றுக்கொள்ளலாம்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

மேலதிக தகவல்களுக்கு இப்போதே அழையுங்கள் 0777 427827



PRODIGY AutoCode
Handy Easy Fast
Rs. ~~5950/=~~
Rs. 4950/=

PRODIGY Pocket
Small Fast Convenient
Rs. ~~3950/=~~
Rs. 2950/=



கேளுங்கள்

விஷேட சலுகை 30ம் திகதி நவம்பர் 2011 வரை மட்டுமே.

Service for Health

Imported and Marketed by EMAR PHARMA (PVT) LTD.
No.23, Anderson Road, Kalubowila, Dehiwela.
Ter.:2810913/4 Fax: 2768475 E-mail: emar79@sltnet.lk

## வியாழன் கிரகத்தில் தண்ணீர் நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



வியாழன் கிரகத்தில் தண்ணீர் உள்ளது என நாசா விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். சூரிய குடும்பத்தில் மிகப் பெரிய கிரகம் வியாழன். இங்கு பல சந்திரன்கள் உள்ளன.

எனவே, வியாழன் கிரகம் குறித்து ஆய்வு நடத்த அமெரிக்காவின் நாசா விண்வெளி மையம் கடந்த 1989 ஆம் ஆண்டில் கலிலியோ விண்வெளி ஓடத்தை அனுப்பியது. அந்த ஓடம் வியாழன் கிரகத்தின் மேற்பரப்பை ஆய்வுசெய்தது.

அதில்ய அங்கு பனிக்கட்டிப் படிவங்கள் ஓரளவு இருப்பது தெரியவந்தது. அது மிகத் தெளிவாகத் தெரியாததால் அங்கு தண்ணீர் இருப்பது சந்தேகம் எனக் கருதினர். இந்த நிலையில், வியாழன் கிரகத்திலுள்ள யூரோப்பா என்ற சந்திரனில் தண்ணீர் இருப்பது உறுதியாகத் தெரியவந்துள்ளது. யூரோப்பாவில் 10 கிலோ மீற்றர் அளவுக்கு கனமான பனிக்கட்டிப் படிவங்கள் உள்ளன.

அவை 3 கிலோ மீற்றர் ஆழத்துக்குப் படிந்துள்ளன. இதன் மூலம் அங்கு பெரிய கடல்களும், ஏரிகளும் இருக்க வாய்ப்புள்ளது. இந்தத் தகவலை அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழகத்தின் விண்வெளி இயற்பியல் நிறுவனத் தலைவர் பிரிட்னி தெரிவித்துள்ளார்.

இப் பண்டிகைக் காலத்தில்
ஒவ்வொரு கொடுக்கல் வாங்கலுக்கும் பரிசு

இப்போது LB ஃபினான்ஸ் அடகுச் சேவை மூலம் ஒரு தங்கப் பவுனுக்கு அதிகூடிய கடனாக

ரூபா. 50,555/-

* கால விரயமும் அலைச்சலும் அற்ற சிநேகபூர்வமான சேவை.
* வாரத்தின் 7 நாட்களிலும் மாலை 6.00 வரை திறந்திருக்கும்.
* முன்னறிவித்தல் கொடுக்காமல் நகைகளை மீட்கலாம்.
* கொடுப்பனவைப் பகுதி பகுதியாகச் செலுத்தலாம்.
* தங்க நகைகளுக்குப் பூரண காப்புறுதி.
* கொடுப்பனவைச் செலுத்த ஒப்பற்ற 14 மாதகால அவகாசம்.



உங்கள் பெறுமதிமிக்க தங்க நகைகளுக்கு முன்னொருபோதும் இல்லாத அளவு அதிகூடிய கடனையும் பூரண பாதுகாப்பையும் வழங்கும் எல்.பி. ஃபினான்ஸ் சகல கொடுக்கல் வாங்கல்களுக்கும் பெறுமதியான வெகுமதிகளையும் வழங்குகின்றது.

The 7th Frontier

ரேகா 0779 740787
பேர்னார்ட் 0773 794358
கெனிஸ்டன் 0777 716986

L B FINANCE
எல்.பி. ஃபினான்ஸ் பிஎல்சி, 275/75, பேராசிரியர் ஸ்ரான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.
011 4 521065 / 011 4 521001 www.lbfinance.com

L B FINANCE GOLD LOANS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரசிட்டமோல்ட் அதிகம் உட்கொண்டால் மரணம் நிகழும்

## ஆய்வாளர்கள் எச்சரிக்கை




தொடர்ந்து அளவுக்கதிகமாக பாரா சிட்டமோல்ட் வலி நிவாரணி மருந்தை உட்கொண்டு வருவோருக்கு சில சந்தர்ப்பங்களில் உடலில் தேங்கும் அந்த மருந்தின் அளவு அதிகமாகி உயிரிழப்பு ஏற்படக்கூடும் என நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். படிப்படியாக உடலில் சேர்ந்தாலும் கூட மருந்தின் அளவு கூடிப்போய் மரணம் ஏற்படலாம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அண்மைய ஆண்டுகளில் 150 இற்கும் மேற்பட்டவர்கள் இவ்வாறாக உயிரிழந்திருப்பதை அமெரிக்காவின் எடின்பர்க் நகர மருத்துவமனைகள் பதிவுசெய்துள்ளன என்று அந்நகர பல்கலைக்கழகத்தின் ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒரு நபர் உட்கொள்வதற்குரிய அளவை விட சற்று கூடுதலான அளவில் பாரசிட்டமோல்ட் மருந்தை உட்கொள்கிறோம் என்பதை பலர் உணராமலேயே இருந்துவிடுகின்றனர் என்று அவர்கள் கூறுகிறார்கள்.

ஒரு தடவையில் மருந்தின் அளவு கூடிப்போவதை கண்டுபடிப்பதென்பதைவிட படிப்படியாக உடலில் மருந்தின் அளவு கூடிப்போவதை கண்டுபடிப்பது சிரமமான விஷயமாகவே இருந்துவந்துள்ளது.

**பொருத்தமில்லாதவை**
**பிழையானவற்றிற்கு வழிவகுக்கும்...**



அனைத்தும் பொருத்தமாக இருக்கும் ஒரு சந்தர்ப்பத்தில் பொருத்தமில்லாதவர்களை சேர்த்துக்கொள்ளும்போது அவ்வழகான தருணம் பொலிவிழந்துவிடலாம்,
**அதேபோல்...**

உங்கள் பஜாஜ் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கரவண்டிக்கு விரைவில் பழுதாகக்கூடிய, நிறம் மங்கக்கூடிய, சரியாகப் பொருந்தாத, போலி பாகங்களைப் பொருத்துவதனால் அது உங்களின் மொத்த வாகனத்தினது அழகையும் குலைத்துவிடும் என்பது உங்களுக்குத் தெரியுமா?



இங்கு காட்டப்படுவது விரைவில் நிறம் மங்கிப்போய், வர்ணப்பூச்சில் பிழைகள் ஏற்பட்ட எரிபொருள் தாங்கியாகும். இதேபோன்று பஜாஜ் அசல் பாகங்களில் ஏற்படுவதில்லை.

உங்களின் பஜாஜ் வாகனத்தின் அசல் தோற்றத்தை பேணிக்காத்துக்கொள்ளுங்கள்...

பஜாஜ்
**அசல் உதிரிப்பாகங்கள்**
*மட்டுமே பொருத்திக்கொள்ளுங்கள்...*

tradlanka

டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்

# உடலில் நோய் எப்போது ஏற்படுகிறது?

உடலில் நோய் எதிர்ப்பு சக்தி குறையும் போது நோய்க் கிருமிகள் எளிதில் தொற்றிக் கொள்கின்றன. ஊட்ட சத்துக் குறைவினாலும் நோய்கள் ஏற்படுகின்றன.

நம் உடலில் நோய் எதிர்க்கும் திறன் குறைவதற்கு நிறைய காரணங்கள் உள்ளன. அவற்றில் சில பலவீனமான உடலமைப்பு, மன அழுத்தத்தைக் கொடுக்கும் வேலைகள், அலர்ஜி ஏற்படுத்தக்கூடிய சூழலில் வாழ்வது, மது, போதைப் பொருள் பழக்கம், புகைப் பழக்கம், தூக்கமின்மை, சர்க்கரை நோய் இவை அனைத்தும் நோய் எதிர்ப்பு சக்தியை பலவீனப்படுத்தி நோய் எதிர்ப்பாற்றலை இல்லாமல் செய்கிறது.

இந்த எதிர்ப்பு சக்தி பிறக்கும் போதே ஒருவரது உடலில் அமைவது. மனித உடலுக்கு தோல் எப்படி ஒரு மிகப் பெரிய தடுப்பு சுவர் போல் உள்ளதோ, அதைப் போலவே மூக்கு, தொண்டை மற்றும் உணவு செல்லும் பாதை போன்ற பகுதிகளில் உள்ளே உள்ள சவ்வுகளும் தடுப்புக் கவசம் போல் செயல்படுகின்றன.

இந்த கவசங்கள் நம்மை நோய் கிருமிகளிடம் இருந்து காப்பாற்றக் கூடியவை. அடுத்தபடியாக உடலுக்குள் நுழையும் நோய்த் தொற்றுக்கிருமிகளை தாக்கி அழிக்கக் கூடியவையாக வெள்ளை அணுக்கள் உள்ளன. இவைகள் தூங்காத படை வீரனைப் போல் நம் உடலுக்குள் செயல்பட்டு கொண்டிருக்கின்றன.

இவை அனைத்தும் நம் உடலின் நோய் எதிர்ப்பு சக்திகளாகும். இரண்டாவது வகையான எதிர்ப்பு சக்தி, நம்முடைய உடல் தன்னை நோய்க் கிருமிகளிடமிருந்து காப்பாற்றிக் கொள்வதற்காக, ஒவ்வொரு பாக்ரீரியாக்களுக்கு தகுந்தவாறு வேறுபட்ட நோய் எதிர்ப்புத் தன்மையை உருவாக்கும்.

இந்த நோய் எதிர்ப்பு சக்தியில் முக்கிய பங்கு வகிப்பது லிம்போ டைடஸ் என்ற ரத்தத்தில் உள்ள வெள்ளை அணுக்கள். மூன்றாவது வகையான உடன்பாட்டு எதிர்ப்பு சக்தி என்பது தேவைப்படும் போது, இன்னொரு இடத்திலிருந்து எதிர்ப்பு சக்தியை தற்காலிகமாக பெறுதல்.

உதாரணமாக தாய்ப்பால் அருந்தும் குழந்தைக்கு தாய்ப்பாலில் இத்தகைய நோய் எதிர்ப்புசக்தி தற்காலிகமாக கிடைக்கிறது. மஞ்சள் காமாலை நோய் எதிர்ப்பு மருந்து மற்றும் டெட்டனஸ் நோய் எதிர்ப்பு மருந்துகள் இந்த நோய்கள் வராமல் தடுக்க வைக்கும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 ஆவது அகவையில் உதயன்

# விலை போகாத தலைமகன்

“மனதில் இடம் பெறுதல்” என்பது புறவியல்புகளையெல்லாம் தாண்டிய அக அழகின் பரிசு. மனிதனுக்கு மனிதனுடன் மட்டுமன்றி பிற உயிரினங்களோடும், பாவனைப் பொருட்களோடும், குறித்த ஸ்தலங்களோடும் இன்னபிற விடயங்களோடும் ஆத்மார்த்த தொடர்பொன்றைத் தோற்றுவிக்கும் பிணைப்பு அது. தொடர்புறும் பதார்த்தங்கள் மாறுபடுகையில் அந்த உறவுகளுக்கான பெயர்களும் மாறுபடுவது மட்டுமேயன்றி, வேறெந்த பெரியதொரு வித்தியாச மும் இப்பிணைப்புக்களுக்கிடை யில் இருந்ததாயில்லை. மனங்களை வெல்ல முடியாத மன்ன னுக்கு, மக்களிடத்தில் மதிப்பிருப் பதில்லை. மண்ணை வெல்ல முடியாத விதைக்கு பயிர் என்ற பெருமை கிடைப்பதில்லை. புன்னுயிர்களிலிருந்து, பேருயிர்கள் கடந்து, பகுத்துயிர்கள் வரை இன்னொரு மனத்தை வெற்றி கொண்டாளுவதென்பது இலேசுப்பட்டதொன்றல்ல.

ஏறத்தாழ ஒன்பதாயிரத்து ஐந்நூறு நாட்களைக் கொண்ட இருபத்தாறு வருடங்களில் தினமும் தன் “வருகைக்காக” இத்தீவின் வடபகுதி மக்களை வேட்கை கலந்ததொரு காத்திருப்பிற்குள் விட்டு வைத்த பெருமை மேற்சொன்ன ‘மனங்களை வெல்லுதல்’ என்பதன் உச்சப் பெறுபேறு என்பதை தமிழ் ஊடக வரலாறு சொல்லும். “ஊரடங்கு விலகாத விடிகாலைப் பொழுதுகள்”, “அச்சியந்திரங்கள் அடித்து நொறுக்கப்பட்ட நடு இரவுகள்”, “செய்தியாளர்களும், பணியாளர்களும் படுகொலையான பயங்கர முன்னிரவுகள்”, “பணிக்கு ஊழியர்கள் வரமுடியாத, குண்டுவெடித்த பிற்பகல்கள்”, “ஆயுததாரிகள் வந்திறங்கும் வெள்ளை வான்களால் சூழப்பட்ட நண்பகல்கள்” எவையுமே சின்ன தொரு சலனத்தையும் ஏற்படுத்தி விடாத “பனங்காட்டு” நரியாக இன்றும் வலம் வரும் “பீடு”, இணைந்திருக்கும் எல்லோரையுமே தோளுயர்த்திச் சிலிர்க்கச் செய்கின்ற மெய்யுணர்வின் உச்சம். அடக்குமுறைகளுக்கெதிராகப் போராடிய, போராடுகின்ற இனக் கூட்டமொன்றின் அழுகையையும், ஏக்கத்தையும், குமுறல்களையும், ஆக்ரோஷத்தையும் உலகின் காதுகளில் ஓங்கி ஒலிக்கச் செய்து, அந்தக் கேளாச் செவிகளைக் கொண்டு “ஏதாவதொரு சிறு நன்மையாவது தன்னினத்திற்குப் பெற்றுக் கொடுத்துவிட முடியாதா?” என்ற அதி அங்க லாய்ப்பில், அடிவயிற்றிலிருந்து குரலெடுத்து ஒலிக்கும் தமிழினத்தின் பல்லூடகங்களில், விலை போய்விடாத சிலரில் இவன் “தலைமகன்” என்ற மகுடம் இலகுவில் தட்டிப்பறிக்க முடியாத பரிசு!

பத்தோ, இருபதோ பக்கங்களில் மெல்லிய தாள்களில் அச்சிட்டு வரும் ஒவ்வொரு தினப்பதிப் பிற்குப் பின்னாலும், ஒவ்வொரு வார்த்தைகள், ஒவ்வொரு எழுத் துக்களுக்குப் பின்னாலும் கண்கள றியாத பல கண்விழித்த மனித இயந்திரங்களின் வியர்வை வேர்விட்டிருக்கின்றது என்பது எல்லோராலும் இலகுவில் உணர்ந் தறிந்து விடமுடியாத அழகிய வலி. அவர்களது நாட்குறிப்புக்களில், விடுமுறை நாட்கள் அழிக்கப்பட்டிருப்பதும், வார இறுதிகள் கிழிக் கப்பட்டிருப்பதும் வேதனை சுமக்கும் பணிச்சுமை என்பதையும் தாண்டி “பாலம் கட்ட உதவிய அணில்களாய்” மாபெரும் சுதந்திரப் புரட்சித்தீயில் எண்ணெய்த் துளிகள் என்ற ஓர்மம் இன்றை வரைக்கும் ஓய்ந்து விடாத இயக்கும் சக்தி!. வெறுமனே விற்கும் பிரதி களின் எண்ணிக்கை தான் மக்கள் விருப்பம் என் கின்ற கணக்கெ டுப்பு, வியாபார நோக்கிலான உறுதிக்கு ஊடகங் களை வழி நடத்தும் என்பது சில்லறை வியாபாரிக்கும் கூட தெரிந்த யுக்தி. இருந் தும் சமூக சாக்கடைகளில் சிலவான “சினிமா வர்ணங்கள்”, “இனத் துரோக அரசியல்”, “கொளுத்துபவனுக்கு கொள்ளி கொடுத்தல்” போன்றனவில் வலிந்தே விலகியிருப் பது, சமகால அச்சூடகம் ஒன்றில் மிகஅரிதாகவே காணப்படும் இயல் பென்பது தெளிவு. இவ்விட யத்தில் “விஸ்வாமித்திரன்”, “மேனகை” களிடம் எப்போதும் தோற்றுவிடக் கூடாதென் பது வாசக வட்டத்தின் விருப்பம் கலந்த அன்புக் கட்டளைகளில் ஒன்று.

காய்த்த இந்த மரத்திலும், கல்லடிகளோடு இணையாக சொல்லடி களும் சூழ்ந்தேயிருந்தன. “செத்த வீட்டுப் பேப்பர்” என்றும், சிறப்பி தழ் வரும் நாளில் விளம்பரக் கொழுப்புக்களால் கொஞ்சம் “ஓவர்” நிறையூட்டம் கொண்டிருப்பதும் நகைச்சுவையோடு விமர்ச்சிக்கப் படுவது தவிர்க்க முடியாததாகிப் போனது. ஆனாலும் ‘அரச விளம் பரங்கள்’,‘உத்தியோக பூர்வ அறி வித்தல்கள் விளம்பரமாக வெளி யிடப்பட முடியாதபடி ஆளுவோர் நாசூக்காக தவிர்த்துக் கொள்வ தும்,மேற்படி வெளியீடுகளால் கொள்ளை லாபம் பார்ப்போரின் முன்னால் “இதுவெல்லாம் ஒன்று மேயில்லை!” என்பதையும் அதே வாசகர்கள் அறியாமலில்லை.

குறித்த ஒரு நிறுவனத்தின், நிர்வாகக் கட்டமைப்பின் சில பல குறைகள், சமூகப் பொறுப்புக் கருதி பெயரோடு வெளியிடப்பட்ட சந்தர்ப்பங்களில் அக்குழுவினர் குரலால் ஒன்றிணையும் “இனி மேல் எடுப்பதில்லை!” என்ற வேக முடிவுகள் , “எட்டுமணிக்கு மேல் என்னவோ ஆகும் புது மாப்பிள்ளையின் கோபமாய்”, இரண்டு மூன்று வாரங்களில் ‘இயல்பு’க்குத் திரும்பி விடுவதே இயல்பு. இவையெல் லாம் பணப்பெறுமதிகளால் அளவிடும் வியாபாரத்தையும் தாண்டி, மனப்பெறுமதிகளால் அளவிட முடியாத மக்கள் ... புதினத்தளம் கொண்டு ... நெருக்கமான ஊட லின்



வெளிப்பாடென்று அர்த்தம் கொள்வதிலும் தவறில்லை.

“சுக்கா, மிளகா நீங்கள் கேட்டது? சுதந்திரம். வலி கொண்டு தான் பிறக்கும் அது” என்கின்ற வார்த்தைகளை எழுத்துக் களிலிருந்து பெயர்த்தெடுத்து ஒவ்வொரு விடுதலை விரும்பும் இதயச் சுவரிலும் இரத்தோட்ட மாகப் பதிய வைத்த இந்தச் செயன் முறை விளக்கக்கூடம், பல கட்டத் தமிழ் வரலாற்றின் பரிசோதனைக் கூடமாகவும் பயன்பட்டுள்ளதே. தலைநகருக்கும், வட தமிழனுக்கும் இடையிலான தூரம் திட்டமிட்டு “பொருளாதாரத் தடைகளாகவும்” “பாதையடைப்புக் களாகவும்”,“ஆக்கிரமிப்பு ஏவல்களா கவும்”, “பதிவுக் கெடு பிடிகளாகவும்” வக்கிரமாகப் பிரயோகிக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளை, பாதிக்கப் பட்டவர்களின் ஏக துணைவனாக நின்று சாட்சி சொன்னபோது சர்வதேசமும் விழி தூக்கிப் பார்த்து விருதுக ளால் அலங்கரித்த அழகு, ஈழத் தமிழினம் முழுவதும் அடைந்த உரிமைக் குரலுக்கான அங்கீகாரம். நசுக் கப்பட்ட இராணுவக் காவல்களுக்கு கீழிருந்து வெற்று நாவால் விளக்கம் கேட்ட ஒற்றைக் குற்றத்திற்காக அரச தரப்பின் “நன்றியறிதல் வெளிப்பாடுகளால்” உடைமையிழப்பு, உதிரியிழப்பு, உயிரிழப்பு எல்லாவற்றையுமே படிக்கற்களாக்கி உயர்ந்து இன்னமும் தட்டிக்கேட் கும் உரிமையிழக்காத இப் போரா ளியை, வாழ்த்தும் வயது கூட இன்னமும் வந்துவிடாதவர்களை யும் வளர்த்துவிட்டு அழகு பார்க்கும் செம்மைக்கு சென்னி தாழ்த்துவதை விட வேறென்ன? இனக் காவலனாய், உச்சரிப்பு நிகழ்தகவு கூடிய, ஆனால் இப்பந்தியில் இதுவரை எழுதப்பட்டு விடாத அந்த வார்த்தை, அதுதான்- “உதயன்”!

■ செந்தூரி

## அன்பு தழுவிய எமது வாசகர் பெருமக்களே! அபிமானிகளே, ஆதரவாளர்களே!!

உங்கள் உள்ளக் கமலத்தில் உறைந்திருக்கும் உதயனுக்கு இன்று அகவை இருபத்தாறு. 27 ஆவது ஆண்டில் அடி எடுத்து வைக்கிறான்.

உதயன் வாசகர்களே! அவனது பெருமைக்கும் சேவைக்கும் உரிய நாயகர்கள் நீங்களே. உங்களில் ஒருவனாக நின்று, ஈழத் தமிழ் மக்களில் ஒருவனாக நின்று, பணியாற்றுவது என்பதனை பிறந்த முதல் நாள் வரித்துக் கொண்டு, உங்கள் நலன்களை நாடியே அவன் செயற்பட்டு வருவதை நீங்கள் நன்கறிவீர்கள்.

ஈழத்தமிழ் மக்களுக்காக, அவர்களது உரிமைகளுக்காக முதல் நாள் தொடக்கம் இடையறாது ஓங்கி ஒலித்துக் குரல் எழுப்பி வருபவன் உதயன். அவனது உயிர்ப்பின் நோக்கமும் இயக்கத்தின் விசையும், வீச்சும், பொறுப்பும் அவற்றின்பாற்பட்ட சேவையும் உங்கள் உரிமைகளை முன்னிறுத்தி ஆற்றப்படுபவையே.

தமிழ் மக்கள் எதிர்கொண்ட அவலங்களை, வேதனைகளை, இழப்புகளை, இன்னல்களை, அச்சுறுத்தல்களை, அராஜகங்களை எல்லாம் அவனும் சேர்ந்து அனுபவித்தவன். அவ்வாறிருந்த போதிலும் உங்களுக்குத் தகவல் சொல்லும் பெரும் பணியை ஆற்றியதோடு மட்டும் நின்றானா? இல்லை; உங்களுக்காக தளரா உணர்வுடன் உங்கள் எல்லோரதும் குரல்களாக ஓங்கி ஒலித்தான்.

தமிழ் மக்கள் சார்பில், பெருமக்களாகிய உங்களது சார்பில் உரிமைகளுக்காகவும், நீதி வேண்டியும், நியாயம் கேட்டும் குரல் கொடுத்தமைக்காகக் கடந்த இருபத்தாறு அகவைகளாக உதயன் அனுபவித்த, எதிர்கொண்ட அச்சுறுத்தல்கள், இடையூறுகள், உயிர் பறிப்புகள், உடைமை நட்டங்கள் மிக நீண்டவை.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காகவும், நீதி, சுதந்திரம், சுயாட்சி ஆகியவற்றுக்குமாகக் குரல் எழுப்பினால் அதன் பின் விளைவு அராஜகத்திற்கு ஆட்படுத்தப்படுவாய் என்று வாய்ப்பாடு இயற்றும் தரப்புகளுக்கு மத்தியிலும் வாசகர்களாகிய நீங்கள் தொடர்ந்து வழங்கிவரும் தார்மீக ஆதரவே உதயனின் உயிர்நாடியாக விளங்குகிறது என்பதனை நாம் சொல்லித்தான் தெரியவேண்டியதில்லை. உங்களில் ஒவ்வொருவரும் நன்கு அறிவீர்கள்.

தமிழ் மக்களின் உரிமைகள் நோக்கியும், அவர்களின் வாழ்வியல்சார் மேம்பாடுகள் கருதியும் உழைப்பதே தனது உன்னத பணி என்று சொல்பவன் உதயன். அந்தப் பணியே தனது உயிரின் உந்துசக்தி என்பதனை அவன் மறந்ததில்லை; மறப்பதற்கும் இல்லை.

வடக்கு வாழ் மக்களின் தொண்டனாக மட்டுமன்றி, அனைத்துலக நாடுகளிலும் பரந்து வாழும் தமிழ் மக்களின் நண்பனாகவும், அவர்கள் அனைவருக்கும் தகவல் சொல்லும் சேவகனாகவும் உதயன் விளங்குகிறான். அதன் பால் அவன் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறான்.

உதயனின் பணி பழுதிலாத்திறனுடன் நாளும் மலர்ந்து விரிவதற்கு கடந்த இருபத்தாறு ஆண்டுகளாக உறுதுணையாக விளங்குபவர்கள் வாசகர் பெருமக்களாகிய நீங்களே. எமது நிறுவனத்தின் மீது ஏவிவிடப்படும் சகலவிதமான பாதக நடவடிக்கைகளையும், நயவஞ்சகச் சூழ்ச்சிகளையும் இனங்கண்டு எமக்கு அரணாக விளங்கும் வாசகர்கள், விளம்பரதாரர்கள், ஆதரவாளர்கள், அபிமானிகள் அனைவருக்கும்

சோதனைகளின் மத்தியிலும் எம்மோடு தோளோடு தோள் நின்று உழைக்கும் எமது பணியாளர்கள், பிரதேச செய்தியாளர்கள், விற்பனை முகவர்கள், படைப்பாளிகள் அனைவருக்கும் இன்றைய நன்னாளில் உதயன் தனது மனம் நிறைந்த நன்றிகளைப் புகல்கின்றான்.

வணக்கம்
நிர்வாகத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் 26 ஆவது அகவை நிறைவு சிறப்புமலர் 27.11.2011




ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல 04.09.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தபோது உதயனுக்கும் வருகை தந்திருந்தார். உதயன் நிர்வாக இயக்குநர் ஈ. சரவணபவன், பிரதம ஆசிரியர் ம.வ. கானமயில்நாதன், செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் ஆகியோருடன் கலந்துரையாடுகின்றார்.





உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா. குகநாதன் மீது 29.07.2011 அன்று இடம்பெற்ற தாக்குதலைக் கண்டித்து கொழும்பைத் தளமாகக் கொண்டியங்கும் சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 16.08.2011 அன்று யாழ். பஸ் நிலையம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.


## உதயனின் பதிவுகளில் சில....







2011 ஆம் ஆண்டுக்கான உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டிகளை முன்னிட்டு உதயன் நிறுவனம் நடத்திய போட்டியின் பரிசளிப்பு விழா 14.05.2011 ஆம் திகதியன்று உதயன் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது. கலைநிகழ்வுகள் போட்டியில் முதல் பரிசில் பெற்றவருக்கான ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபாவுக்கான காசோலை வழங்கலும் இடம்பெறுகின்றன.



இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா புட்டினிஸ் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த போது 24.01.2011 ஆம் திகதியன்று உதயன் அலுவலகத்துக்கு வருகை தந்து ஊடகவியலாளர்களுடன் கலந்துரையாடுகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன் 26 ஆவது அகவை நிறைவு சிறப்புமலர் 27.11.2011


வேதனைகள் பல தாங்கி சாதனைகள் பல படைத்த சரித்திர நாயகன்
உதயனை 26 வது அகவையில் வாழ்த்துவதில்
IIS பேருவகையடைகின்றது

What Next?
After A/L

கல்வியாண்டு 2012 தை மாதத்திற்குரிய
வார ,வாரஇறுதிநாள் பிரிவுகளுக்கான பதிவுகள் ஆரம்பம்.



edexcel
HND in Computing
HND in Business Management
HND in Civil Engineering
HND in Quantity Surveying

DCS The Chartered Institute for IT
Certificate in IT
Diploma in IT
Professional Graduate Diploma in IT

CIM
Introductory Certificate in Marketing
Professional Diploma in Marketing

SLIM
Preliminary Certificate in Marketing
Professional Diploma in Marketing



பட்டதாரி ஆக வேண்டும் என்ற
உங்கள் கனவை நனவாக்கி
தருகின்றது IIS

B.Sc 3rd Year ↔ P.G.D in IT
HND 2nd Year → Diploma in IT
HNC 1st Year → Certificate in IT
edexcel DCS







உள்நாட்டு, வெளிநாட்டு உயர்கல்வி மற்றும் வேலை வாய்ப்புக்களை பெற்றுத்தர வல்ல சர்வதேச தரம்
வாய்ந்த கற்கை நெறிகளில் உங்களை இணைத்து உங்கள் எதிர்காலத்தை வளப்படுத்திக் கொள்ளுங்கள்
பலநூறு மாணவர்கள் பயணித்த இவ் வெற்றிப் பாதையில் உங்கள்
காலடியையும் பதித்துக் கொள்ளுங்கள்

கல்விப் பாரம்பரியம் மிக்க யாழ்ப்பாணத்தில் ஓர் கல்விச் சாம்ராஜ்யம்

IIS CITY CAMPUS
200, சிவன் பண்ணை வீதி, (வைத்தீஸ்வராச் சந்தி) யாழ்ப்பாணம்
T.P :: 021 222 8060 ,, FAX :: 021 222 6933
WEB :: iis.edu.lk, E-Mail :: info@iis.edu.lk

நவீன தொழில்நுட்ப மாற்றங்களுக்கு ஏற்ப
தகவல் தொழில்நுட்பக் கல்விகளை திறம்பட வழங்கி வரும் IIS

கணனிக்கல்விக்கு
தனித்துவம் மிக்க IIS இல்
இணைவதன் மூலம்
கணனி உலகில் நீங்கள்
அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்



Certificate in Office Solution Development
Certificate in Multimedia
Certificate in Web Designing
Certificate in Desk top Publishing
Certificate in Computerized Accounting
Certificate in Eng. Drawing & AutoCAD
Certificate in Hardware Technology
Certificate in Java Programming
Certificate in Visual Programming
Certificate in Networking
Certificate in Database Management
Diploma in Software Development
Diploma in Business Information System
Diploma in Computer Hardware & Networking
Diploma in Multimedia
Diploma in Web Development

INSTITUTE OF INFORMATICS STUDIES
இல 100, மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம்
தொலை பேசி : 021 222 2831


Digitized by Noolaham Foundation
இங்கு மணிமேகலைக் காப்பியத்தில் மாதவி, மணிமேகலை துறவு பூண்டமை பற்றி ஆராய்வோம். காப்பிய முறையின்படி அன்னையான கண்ணகியின் கதையைச் சிலப்பதிகாரமும், மாதவியின் மகள் மணிமேகலை கதையை மணிமேகலையும் கூறுகின்றன. மேலும் சிலப்பதிகாரத்தைச் சமணப்புலவரான இளங்கோவடிகளும், மணிமேகலையைப் பௌத்த மதத்தவரான கூலவாணிகன் சாத்தனாரும் பாடியிருக்கின்றனர் என்பதையும் நாம் அறிந்துகொள்வோம். ஆயினும் இந்த இரு காப்பியப்புலவர்களும் இந்து மதத் தெய்வங்களைப் போற்றியிருப்பதனை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

இப்புலவர்கள் இருவரும் சமகாலத்தவர்; தமக்குள் கலந்து பேசி, இக் காப்பியங்களைப் பாடியிருக்கின்றனர்.

*''இளங்கோ வேந்தன் அருளிக்கேட்ப*
*வளங்கெழு கூல வாணிகன் சாத்தன்*
*மாவண் தமிழ்த்திறம் மணிமேகலை துறவு*
*ஆறைம் பாட்டினுள் அறியவைத் தனென்''*

*[கூலம் -தானியம்]*

என மணிமேகலை கூறுவது கவனிக்கத்தக்கது. மேலும் பாடிமுடிக்கப் பெற்றபின், சிலப்பதிகாரத்தை இளங்கோ சொல்லச் சாத்தனார் கேட்டார் என்றும் மணிமேகலையை சாத்தனார் சொல்ல இளங்கோ கேட்டார் என்றும் நூலில் சொல்லப்பெறுவதால் இந்த நூல்கள் சங்ககால மரபுக்கேற்ப இவ்வாறு அரங்கேற்றம் பெற்ற சங்ககாலத்துக்குப் பிற்பட்டவை எனக் கொள்ளலாம்.

இனி நாம் எடுத்துக்கொண்ட மணிமேகலைத் கதைக்கு வருவோம். காவிரிப்பூம் பட்டினத்திலிருந்து கண்ணகியைப் பொருள்வயிற் பிரிந்த கோவலன் அவ்வூர் அரச மாளிகையில் நடைபெற்ற மாதவி நடன அரங்கேற்ற விழாவில் கலந்து கொள்கிறான்.

அங்கு மாதவிக்கு அரசன் வைரமாலை ஒன்றைப் பரிசாகக் கொடுக்கிறான். அந்த மாலையை விலை கொடுத்து வாங்குபவர்கள் மாதவிக்குக் கணவனாக வரும் தகுதி பெறுவர் என மாதவியின் தாய் கூறுகின்றாள். மாதவியின் ஆடல், பாடல், அழகு என்பவற்றில் மனதைப் பறிகொடுத்த கோவலன் அந்த மாலையை வாங்கி மாதவியை அடைகிறான். கண்ணகியை மறக்கிறான்.

ஏழாண்டு காலம் இன்புற்று வாழ்ந்த கோவலன் அங்கு நடைபெற்ற இந்திரவிழாக்காலத்தில் மாதவியைப் பிரிந்து கண்ணகியிடம் செல்கிறான். மகளான மணிமேகலையையும் பிரிந்து செல்கிறான். பொருள் தேடப் புறப்பட்டு பொருளை இழந்து இலம்பாடுற்றமை பற்றிக்கூற கண்ணகி மறுவார்த்தையின்றி, 'சிலம்புள கொண்மின்' என்கிறாள். இருவரும் மதுரைக் குப் போகின்றனர். சிலம்பை விலை கூறிக்கொண்டு நகரவீதியில் சென்ற கோவலன் கோப்பெருந்தேவியின் சிலம்பைத் திருடினான் எனக் குற்றஞ்சாட்டிக் கொல்லப்படுகிறான். கண்ணகி பாண்டியனோடு வழக்குரைத்து தன் கணவன் கள்வனல்லன் என்பதை உணரவைத்து மதுரையை எரியூட்டி சேர நாடு சென்று பத்தினித் தெய்வமாகி கோவலனோடு விண்ணகம் புகுகிறாள்.

இது கேட்ட மாதவி

*..............................*
*''காதலனுற்ற கடுந்துயர் கேட்டுப்*
*போதல் செய்யா உயிரொடு நின்றே*
*பொற்கோடி மூதூர்ப் பொருளுரை இழந்து*
*நற்றொடி நங்காய்! நாணுத் துறந்தேன்''*

என்று தோழி வயந்த மாலையிடங் ஒரு பத்தினிப் பெண் ஒழுக வேண்டிய நெறியில் நான் நடக்கவில்லை என்பதால் வெட்கங்கெட்ட வளாகிறேன் என்கிறாள்.

*''காதலர் இறப்பின் கனையெரி பொத்தி*
*ஊதுலைக் குருகின் உயிர்த்து அகத்து அடங்காது*
*இன்னுயிர் ஈவர்; ஈயார் ஆயின்*
*நன்னீர்ப் பொய்கையின் நளிஎரி புகுவர்;*
*ஆயினும் நம் கண்ணகியோவெனில்,*
*கண்ணீராடிய கதிரின வனமுலை*
*திண்ணிதிற் திருகித் தீயழற்பொத்திக்*
*காவலன் பேரூர் கனையெரி யூட்டிய*
*மாபெரும்பத்தினி-''* என்று கண்ணகி மாபெரும் பத்தினி எனப் பெருமைப்படுகிறாள்.

*''அன்றியும்*
*........................ மகள் மணிமேகலை*
*அருந்தவப்படுத்தல் அல்லது யாவதும்*
*திருந்தாச் செய்கைத் தீத்தொழிற் படாஅள்''*

என்று மகளின் வருங்காலத்தையும் உரைத்த மாதவி அறவண அடிகளிடம் தனது தறவு பற்றிக் கூறியதாகவும் சொல்கிறாள். அப்போது அடிகள்,

*''பிறவார் உறுவது பெரும்பே ரின்பம்*
*பிறந்தோர் உறுவது பெருகிய துன்பம்''*

என்று மாதவிக்கு உணர்த்துகின்றார்.

இவ்வாறு மாதவியும் மணிமேகலையும் துறவறம் மேற்கொள்வதை உணர்ந்த வயந்த மாலை, கடலிலே விழுந்த மாணிக்கத்தை நாம் திரும்பப் பெறுதல் முடியாது. அதுபோல மாதவி, மணிமேகலை இருவரையும் இனிமேல் காண முடியாது என்ற வருத்தத்தோடு அவ்விடம் விட்டுப் போகிறாள் என்கிறார் புலவர். அந்த நேரம் மாலை புனைந்து கொண்டிருந்த மணிமேகலை

**மட்டுவில் நல்லதம்பி**

யும் தனது பிறப்பு, இளமை வனப்பு என்பவற்றையும் தந்தை தாயாரான கோவலன் கண்ணகியரின் துன்ப முடிவையும் எண்ணியவளாக அழுது கண்ணீர் சிந்துகிறாள்.

அதனை அவதானித்த தாய் மாதவி,

*''- மணிமேகலை முகம் நோக்கித்*
*தாமரை தண்மதி சேர்ந்தது போலக்*
*காமர் செங்கையிற் கண்ணீர் மாற்றித்*
*தூநீர் மாலை தூத்தகை இழந்தது''*
*நிகர்மலர் நீயே கொணர்வாய்* என்கிறாள்.

இங்கே தாமரை மலர் போன்ற தன் கையால் மாதவி, மதி போன்ற (மணிமேகலையின்) முகத்தில் தோன்றிய கண்ணீரைத் துடைத்ததாகச் சாத்தனார் கூறும் உவமானம் ஆழமான நயம்பயப்பதாகும். மாதவியின் உள்ளத்தில் மணிமேகலையின் வருங்காலம் பற்றிய கனவு பாழாகியதால் ஏற்பட்ட தாக்கத்தை உணர வைக்கும் திறன் வியந்து பாராட்டத்தக்கது.

(மிகுதி அடுத்த வாரம்)

---

# மூழ்கிய நினைவுகள்




நன்றாய் விடிந்துவிட்டது என்பதைப் புலப்படுத்தும் காகங்களின் கரைதலையும் சேவலின் கூவுதலையும் அருகில் உள்ள ஆலயத்தில் இருந்து எழும் காண்டாமணி ஓசையின் சத்தத்தைக் கேட்டும் பாயிலிருந்து நித்திரையால் எழ மனமில்லாமல் புரண்டான் கமலன். முதல்நாள் முழுக்க கொஞ்சக் காசுக்காக தெரிந்தவர், உறவினர் வீடுகளுக்கு அலைந்த அலைச்சல்தான் காரணம்.

குசினியிலிருந்து அவனது தாய் காமாட்சி ஊதாங்குழலால் அடுப்பூதும் ஓசையும், அடுப் பூதிய வேகத்தில் மூண்ட சிரட்டை தனக்கேயுரிய ஒருவகை ஓசையுடன் எரியும் சத்தமும் கேட்டது.

அருகில் அவனது பெரியக்கா மல்லிகா தனது கைத்தொழிலைத் தொடங்கி விட்டாள் என்பதை மெழுதிரி இயந்திரத்தைக் கழட்டிப் பூட்டுகிற சத்தம் கேட்கிறது. தனக்கேயுரிய மழலை மொழியால் ஊ....ஆ... எனக் கத்தியபடி ஒரு வயதுப் பெண்குழந்தை சிரட்டையால் நிலத்தில் தட்டி விளையாடுகின்றது. ஏழ்மைக்கே உரித்தான விளையாட்டுப் பொருளில் சிரட்டை தான் முதலில் நிற்கிறது.

பாவம் இந்தப் பாலனுக்கு ஒரு வயது தான் ஆகிறது. அது இன்னும் படிக்கவே இல்லை. ஆனால் பட்டம் பெற்றுவிட்டது ''அப்பனை விழுங்கிய சனியன்''. இப்பெயர் ஊரவர்களால் குழந்தைக்குக் கொடுக்கப்பட்டது.

இந்தப் பிள்ளை பிறந்து இரண்டாம் நாள் மல்லிகாவின் கணவன் இராமு இறந்துவிட்டான். கள்ளுத் தவறணையில் இருவருக்கிடையில் நடந்த சண்டையில் இவர்தான் விலக்குப் பிடிக்கப் போனவர். கடைசியில் கத்திக் குத்துக்கு இலக்காகி இறந்ததும் இவர் தான்.

மல்லிகாவுக்குச் சொத்தைச் சேர்க்காவிட்டாலும் நிறைந்த சோகத்தைச் சேர்த்து வைத்துவிட்டுச் சென்றான். மூன்று பெண்பிள்ளைகள் பெற்ற பின்பே 'சீதனம் வாங்காது திருமணம் செய்து விட்டேனே' என்ற கவலை இவனுக்கு. ஆகவே இதை மறக்கச் செய்யும் மருந்தாக கசிப்பையும், தொட்டுக் கொள்ள பயன்படுத்தும் ''டேஸ்ட்'' ஆக மல்லிகாவின் முதுகில் தினம் போடும் அடியையும் கருதினான்.

சின்ன வயதிலேயே கமலனின் தலையில் பல பொறுப்புக்கள் வீழ்ந்தன. பாவம் ஒருவன் எத்தனை சுமைகளைத் தான் வாழ்க்கையில் சுமக்க முடியும்!

''இந்தா பிள்ளை திருமகள் இந்தத் தேத்தண்ணி கிடந்து ஆறுது'' எனத் தாய் காமாட்சி அழைக்கவும், கூட்டிய குப்பையை அள்ளிவிட்டு விளக்குமாற்றை ஓர் ஓரமாகச் சாத்திவிட்டு வந்தாள் திருமகள். இவள் காமாட்சியின் இரண்டாவது உற்பத்தி.

திருமகள் திருமண வயதைத் தொட்டு எவ்வளவோ வருடங்கள் ஆகிவிட்டன என்பதை அவளுடைய தலையில் இருந்து வெளிப்டுகின்ற வெள்ளிக்கம்பிகள் போன்ற நரைமயிர்கள் புலப்படுத்துகின்றன. அவள் திருமண ஆசைகளை மனதிலே போட்டு மூடுவதால் அவை முகத்திலே சுருக்கங்களாக வெளிப்படுகின்றன.

பணக்காரப் பெண்களைப் போன்று வயதை மறைக்க வெள்ளைக் கழிகளை முகத்திலே அப்புவதற்கு அங்கு என்ன பணம் கொட்டியா கிடக்கிறது.

அவளது பெயருக்கும் காரணத்துக்கும் எதுவித பொருத்தமுமே இல்லை. குமர் குரங்காக முதல் கட்டி வைச்சிரோணும் என்ற கவலையை காமாட்சியின் குழிவிழுந்த கண்கள் புலப்படுத்துகின்றன.

**வ.கஜநந்தினி,**
கொட்டடி, யாழ்ப்பாணம்.

கமலனின் தங்கை பூமகள். அவளுக்கு வயது முப்பது தான் என்றாலும் திருமகளின் வயதோடு ஒப்பிடும் போது அவள் அந்த வீட்டுக்குச் சிறுபிள்ளையாகவே இருந்தாள். வீட்டு வறுமை நிலையும் அவள் வயதைக் குறைத்து மதிப்பிட எண்ணியது.

(06 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு தாயின் தேடல்



என் அன்பு மகனுக்கு,
தம்பி...
என்றோ ஒரு நாள்
நீ வருவாய் என்ற ஏக்கத்திலேயே
எனது பொழுதுகள்
விடிந்து கொண்டிருக்கின்றன
அம்மா... நான் சுகமாக இருக்கிறேன்
விரைவில் வந்து விடுவேன் என்று
ஒரு கடிதமாவது
உன்னிடமிருந்து வருமென்று...
ஒவ்வொரு நாளும்
வீட்டு வாசல் தாண்டிச் செல்லும்
தபால் காரனைப் பார்த்து
பெருமூச்சு விடுகிறேன்
அன்று ''செல்'' அடியின் அகோரத்தில்
சிதறி ஓடிய போது
தூக்கிக் கொண்டு ஓடக் கூட ஆளில்லாமல்
விழுந்து கிடந்த
உன் அப்பாவின் நினைவுகள்
அடிக்கடி வந்து
என்னை வெருட்டுகிறது
ஆண்டவனே... என் பிள்ளைக்கு
அப்படி எதுவும் நடந்திருக்காது
கடவுள் எங்களை கைவிடமாட்டான்
உன்னைப் போல பல பேருக்கு
எங்கோ ஓர் இடத்தில்
புனர்வாழ்வு கொடுக்கிறார்களாம்
கட்டம் கட்டமாக அவர்கள் எல்லாம்
புது மனிதர்களாக வெளியே வருவார்களாம்
உன் தங்கச்சிதான் அடிக்கடி சொல்லுவாள்
பேப்பரைப் பார்த்து
யாரோ மனித உரிமைக்காரர்களாம்
நேற்று மாலை வீட்டுக்கு வந்தார்கள்
உன்னுடன் படித்த அந்த புண்ணிய மூர்த்திதான்
கூட்டிக் கொண்டு வந்தான்
உன்னைப் பற்றி....
விவரம் எடுத்தார்கள்
கவலைப் படவேண்டாம் தேடித் தருகிறோம் என்று
சொல்லி விட்டுச் சென்றார்கள்
அவர்கள் வருவார்கள்
அவர்களிடம் கொடுத்து விடத்தான்
உனக்கு இந்தக் கடிதம் எழுது விக்கிறேன்
எனக்குக் கண்பார்வை எல்லாம்
மங்கி விட்டது
கை கால் களும் நடுங்குகின்றன
நான் சொல்லச் சொல்ல உன் தங்கச்சிதான்
கடிதம் எழுதுகிறாள்
உன் தங்கச்சிமார் பேசப்பேச
நீ வந்த பிறகுதான்
சோறு தின்பேன் என்று
ஒரு நாளைக்கு ஒரு துண்டுப் பாணுடன்
உபவாசம் இருக்கிறேன்
இடியப்பம் அவித்து கடைக்கு கொடுப்பதால்
ஏதோ எங்கள் வாழ்க்கையும்
ஓடிக் கொண்டிருக்கிறது
கண் பார்வை மங்குவதால்
கை கால்கள் நடுங்குவதால்
அளவாக உப்பு விட்டு
பதமாக மாக்குழைக்க முடியவில்லை
உன் தங்கச்சிகள் பாவம் சின்னஞ் சிறிசுகள்
குழைத்துக் கொடுத்தால்
அவித்து இறக்குவார்கள்
தம்பி... நானும் இல்லா விட்டால்
உன் தங்கச்சிகள் பாவம் தவித்துப் போவார்கள்
நீ புனர் வாழ்வு பெற்று
விரைவில் வந்து விடு
இல்லை என்றால்
புனர் ஜென்மம் எடுத்தாவது
நான் கண்மூடு முன்
எம்மிடம் வந்து விடு

புதுக்கவி

# வேரோடு சாய்ந்திடுவீர்

உள்ளம் நொந்து
உயிர் துடித்து,
வெள்ளத்தால் அள்ளுண்டு
அங்கத்தைப் பறிகொடுத்து
அழுது கொண்டிருந்த
நம் உறவுகள்
ஆறுதலாய் அவனியிலே
அனல் மூச்சைத் தவிர்த்து
உயிர் மூச்சு விடுகையிலே
எம் இளஞ்சிட்டுக்களை
எம் அருமைப் பிள்ளைகளை
போதைக்கு அடிமையாக்கும்
புல்லுருவிக் கூட்டமே,
எங்கள் ''தாய்மாரின்''
சாபம் இது
குடும்பத்தோடு சேர்ந்து
குடியழிந்து போவீர் -எம்
குடியழிக்க நினைப்போரே
எம் கண்ணீர் என்னும் கடலில் - உங்கள்
குடும்பத்தோடு நிர்மூலம் ஆகி
வேரோடு சாய்ந்திடுவீர்

நடராசா சந்திரலிங்கம்
அச்சுவேலி வடக்கு.

# கனாக்கள் துரத்திய துரத்தங்கள்

நீ திருமணம் என்ற
தேசத்தில்
அகதியாய் இருந்தாய்
இதிலிருந்து
நீ விரட்டப்பட்டதோ
வர தட்சணையால் தானே!
உன் வாழ்க்கையை
காசுகள் இல்லாமல் தான்
காலம் தின்று
கொண்டிருந்தது

''கன்னி'' என்பது
உனக்கு
கொடுக்கப்பட்ட
வரமா? அல்லது சாபமா?

நீ செவிகளையும்
விழிகளையும்
மூடிக்கொள்
திருமணச் சந்தையில்
இடும் கூச்சல்கள்
இந்த ஜென்மத்தில்
வேண்டாம்
உனக்கு

துணையில்லா
ஜீவன் தான்
நின்மதியானது
நீ இருப்பது
விரதமல்ல
வலுவில்லாத
ஆண்களுக்கு
தொடமுடியாத
கண்ணீர்க் கிரகம்
நீ!



செ.மோகன்ராஜ்
நெடுந்தீவு - 12

# எவளோ ஒருத் (தீ)

இருண்ட கதவுகளை
விரல்கள்
குடைந்தது
இதயத்தில் மின்னல்
மூச்சோடு
விழித்துக் கொள்வாள்

சூரிய அஸ்தமனமும்
மேற்கில் இருந்து
உதிக்கத் தொடங்கியது
உன் மூச்சு
சுட்டதால்

நீ கூடியிருப்பதும்,
தனித்திருப்பதும்
ஆகாயத்தில் அல்ல

உன்னை நோக்கி
நீளும்
சுவாசம் கூட
உன் கற்பைத் தின்று
ஏப்பமிடும்

கடசித் தவறுகளோடு
நடைபோட்டுப் போன
சமுதாயம்
பகிரங்கமாக
பேசிற்று
''பெண் எம் அடிமை என்று''



எம்.நேசா
நெடுந்தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு, கிழக்கிலும் இராணுவ மயம் உறுதியாகிறது..!

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

ஒவ்வொரு வருடமும் நாடாளுமன்றத்தில் வரவு செலவுத் திட்டம் சமர்ப்பிக்கப்படும் போது மக்கள் மத்தியில் பெரும் எதிர்பார்ப்பு இருக்கும். சம்பள உயர்வு, வாழ்க்கைச் செலவுக்குறைப்பு, புதிய உட்கட்டுமான வசதிகள் போன்ற பல விஷயங்கள் கடந்த காலங்களை விட மேம்பாடடையக் கூடும் என்ற நம்பிக்கையும் உருவாவதுண்டு. அதே போன்று முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் போன்றவர்களும் புதிய சாதகமான நிலைமைகளுக்காகக் காத்திருப்பார்கள்.

தற்சமயம் நாடாளுமன்றத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் ஏழாவது வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இரண்டாவது பதவிக்காலத்தின் முதலாவது வரவு செலவுத்திட்டம் என்ற வகையில் இந்த அரசின் அடிப்படை நோக்கங் களை முழுமையாக விளங்கிக் கொள்ள முடியாத சாதாரண சிங்கள மக்கள் மத்தியில் எதிர்பார்ப்பு சற்று கூடுதலா கவே அமைந்திருந்தது.

எனினும் கடந்த ஆறு வரவு செலவுத்திட்டங்களைப் போலவே அலங்கார வார்த்தைப் பிரயோகங்களும் அதிசயிக்கத்தக்க புள்ளி விபரங்களும், கவர்ச்சிகரமான வாக்குறுதிகளும் கொண்ட ஒரு கனவுப் பெட்டகமாகவே சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வழமைபோலவே பாதுகாப்பு, அபிவிருத்தி என்ற மாயமான்களுக்குள் ஏனைய விஷயங்களைப் புதைத்து எதிர்கால சுபீட்சம் பற்றிய கண்கட்டு வித்தை காட்டப்பட்டுள்ளது.

உதாரணமாக ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிக்கப்பட்ட அரச பணியாளர்களுக்கான 2500 ரூபா சம்பள உயர்வு கூட இன்னும் வழங்கப்படவில்லை. ஆனால் 10 வீத சம்பளம் வழங்கப்பட்டு விட்டு அதேவேளையில் நாணயப் பெறுமதி மூன்று வீதத்தால் குறைக்கப்பட்டு விட்டது. 'கையில் வாங்கினேன் பையில் போடவில்லை. காசு போன இடம் தெரியவில்லை' என்றளவுக்கு நாணயப் பெறுமதிக் குறைப்பு சம்பள உயர்வை அர்த்தமற்றதாக்கி விட்டது. அதேவேளையில் தனியார் துறையினரின் ஊதிய உயர்வு பற்றி எதுவுமே பேசப்படவில்லை.

ஏற்கனவே எரிபொருள் விலை உயர்வு போன்றவற்றால் வாழ்க்கைச் செலவு உயர்ந்து போயுள்ள வேளையில் நாணயப் பெறுமதிக் குறைப்பு முழு நாட்டின் மக்களையுமே நெருக்கடிக்குள் தள்ளும் நிலை உருவாகியுள்ளது.

இவற்றின் தாக்கத்தை மறைக்க கிராமியப் பொருளாதார அபிவிருத்தி, உணவில் தன்னிறைவு, வறுமை குறைப்பு, வேலையில்லாத்திண் டாட்டம் வீழ்ச்சி என வெவ்வேறு கவர்ச்சிச் சுலோகங்கள் முன் வைக்கப்பட்டுள்ளன.

ஆனால் ஒட்டுமொத்தத்தில் மக்கள் மேலும் மேலும் வறிய நிலைக்குத் தள்ளப்படும் ஆபத்துக்கான வாய்ப்புகளே காணப்படுகின்றன. எப்படியிருப்பினும் பெரும்பான்மையான சிங்கள மக்கள் இந்த அரசுக்குத் தங்கள் ஆதரவை வழங்குவதன் மூலம் தங்களைத் தாங்களே வறுமைக்குள்ளும், துயரங்களுக்கும் தள்ளிக் கொண்டிருக்கின்றனர் என்பதைப் புரிந்து கொள்ள இன்னும் சிலகாலம் எடுக்கலாம்.

நாட்டின் இறைமையைப் பாதுகாத்தல், அந்நிய நாடுகளின் தலையீட்டுக்கு அடிபணியாமை போன்ற சுலோகங்களை முழங்கியவாறே நாட்டின் நிலம் உட்பட மூலவளங்களும்,மனித உழைப்புச் சக்தியும் அந்நிய தேச நிறுவனங்களுக்கு விற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கான சகல ஏற்பாடுகளையும் இவ்வரவுச் செலவுத் திட்டம் அபிவிருத்தி என்ற மாயைக்குள் மறைத்து வைத்துள்ளது என்பது ஒரு முக்கியமான விஷயமாகும்.

முழு இலங்கையையுமே இப்படியொரு கருமேகம் சூழ்ந்து கொண்டிருக்க வடக்குக் கிழக்கைப் பொறுத்தவரை ஏற்கனவே பரந்துகிடக்கும் இராணுவ மயம் மேலும் உறுதிப்படுத்தப்படவும் அது நிரந்தரமாக்கப்படுவதற்குமானபிரரேணையை இவ்வரவு செலவுத்திட்டம் முன்வைத்துள்ளது.

வரவு செலவுத்திட்டத்தில் பெருந்தொகையான நிதி பாதுகாப்பு அமைச்சுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. அதாவது போர் இடம் பெற்ற காலத்தில் ஒதுக்கப்பட்ட நிதியை விட போர் முடிந்து இரண்டரை ஆண்டுகள் ஆகின்ற போதிலும் கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

இதில் ஒரு பகுதி தற்சமயம் தற்காலிகமாக இருக்கும் படைமுகாம்களை நிரந்தரமாக்கப் பயன்படுத்தப்படும் அவ்விஷயத்தைப் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்களும் உறுதி செய்துள்ளார். மேலும் விடுதலைப் புலிகளால் பயன்படுத்தப்பட்ட இரணைமடு விமான ஓடுபாதை விமான நிலையமாக அபிவிருத்தி செய்யப்படுவதற்கு முந்நூறு மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

தற்சமயம் தற்காலிகமானவையாக இருக்கும் படைமுகாம்கள் நிரந்தரமாக்கப்படுவதன் பின்னால் வடக்குக் கிழக்கில் ஒரு பரந்த இராணுவ வலைப் பின்னல் நிரந்தரமாக உருவாக்கப்படுவதற்கான திட்டம் இருப்பதை நாம் தெளிவாகவே புரிந்து கொள்ளமுடியும். பெரும்பாலான முகாம்கள் பொது மக்களுக்குச் சொந்தமான காணிகளிலேயே அமைந்துள்ளன. இப்படியான நிலையில் ஏராளமான தமிழ் மக்கள் தங்கள் குடியிருப்புகளை இழக்கும் நிலை உருவாகும். அதுமட்டுமன்றி மக்களின் குடியிருப்புக்கள் மத்தியில் அமையும் படைமுகாம்களால் மக்கள் எவ்வளவு அசௌகரியங்களை அனுபவிக்க வேண்டி வரும் என்பது சொல்லித் தெரியவேண்டியதில்லை.

வலி.வடக்கிலிருந்து இராணுவ நடவடிக்கைகள் காரணமாக பல ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்பட்டன. போர் முடிந்த பின்பும் உயர்பாதுகாப்பு வலயம் என்ற பேரில் அவர்கள் மீள் குடியேற அனுமதி மறுக்கப்பட்டது. நீதிமன்ற நடவடிக்கை உட்பட பலவித முயற்சிகள் மூலம் ஒருசில பகுதிகள் மீளக் குடியேற அனுமதிக்கப்பட்டன. ஆனால் இடைக்காடு, வளலாய், வசாவிளான், மயிலிட்டி போன்ற கிராமங்களின் ஒரு பகுதி அதாவது பலாலி விமான நிலையத்தை அண்டிய பகுதிகள் விடுவிக்கப்படமாட்டா என தெரிவிக்கப்படுகிறது. இப்படைத்தளம் நிரந்தரமாக்கப்படுமானால் ஆயிரத்துக்கு மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் காணிகளை இழக்க வேண்டிவரும்.

இதேபோன்று மாதகல் மேற்கில் கடற்படையினால் பொதுமக்களின் காணிகளில் ஒரு பகுதியை தமது படைமுகாம் அமைப்பதற்கு வழங்கும்படி பிரதேச செயலருக்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர். அங்கு முகாமமைக்கப்படுமாயின் அம்மக்களின் காணிகளும் நிரந்தரமாகவே பறிக்கப்படும் நிலைமை உருவாகிவிடும்.

> **முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் நடந்த பகுதி. அங்கு மக்கள் குடியமர அனுமதிக்கப்படமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டுவிட்டது. அதுமட்டுமன்றி அவர்களைச் செட்டிக்குளம் நலன்புரி முகாமிலிருந்து கொண்டு வந்து கோம்பாவில் பகுதியில் குடியமர்த்தும் பணிகள் வேகமாக இடம்பெற்று வருகின்றன. முள்ளிவாய்க்கால், மாத்தளன், பொக்கணை ஆகிய பகுதிகள் முல்லை மாவட்டத்தின் பிரதான கரைவலைப் பாடுகளைக் கொண்ட பகுதியாகும். அங்கு நிரந்த முகாம்கள் அமைக்கப்படும் போது மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த தங்கள் நிலங்களை மட்டுமன்றி வாழ்வாதாரங்களையும் இழக்கும் நிலை உருவாகும்.**

மிருசுவில், கிளாலி ஆகிய பகுதிகளில் ஏற்கனவே இரு பிரதான முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன. இம்முகாம்களை அண்மித்த பலபகுதிகள் இன்று வரை மக்கள் மீள்குடியமர அனுமதிக்கப்படவில்லை. இம்முகாம்கள் நிரந்தரமாக்கப்படும் போது பல தமிழ் மக்களின் காணிகள் பறிபோகும் நிலை உருவாகும்.

இரணைமடு விமான நிலையத்தை அண்மித்த திருமுறிகண்டிப் பகுதியில் மக்கள் மீள்குடியேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. அது மட்டுமன்றி இராணுவக் குடியிருப்புகளை அமைப்பதற்கென பல ஏக்கர் காணிகள் கபளீகரம் செய்யப்பட்டுவிட்டன.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தம் நடந்த பகுதி. அங்கு மக்கள் மீள்குடியேற அனுமதிக்கமாட்டார்கள் எனத் தெரிவிக்கப்பட்டு விட்டது. அது மட்டுமன்றி அவர்களைச் செட்டிக்குளம் நலன்புரி முகாமிலிருந்து கொண்டு வந்து கோம்பாவில் பகுதியில் குடியேற்றும் பணிகள் வேகமாக இடம் பெற்று வருகின்றன. முள்ளிவாய்க்கால், மாத்தளன், பொக்கணை ஆகிய பகுதிகள் முல்லை மாவட்டத்தின் பிரதான கரைவலைப்பாடுகளைக் கொண்ட பகுதியாகும். அங்கு நிரந்தர முகாம்கள் அமைக்கப்படும் போது மக்கள் பரம்பரையாக வாழ்ந்து வந்த தங்கள் நிலங்கள் மட்டுமன்றி தமது வாழ்வாதாரங்களையும் இழக்கும் நிலை உருவாகும்.

இவ்வாறே மணலாற்றுப் பகுதியின் கொக்குளாய், ஒதியமலை, மெனிக்பாம், டொலர் பாம், கஜபாபுர, கருநாட்டங்கேணி, கொக்குத் தொடுவாய் போன்ற பகுதிகள் ஏற்கனவே இராணுவ முகாம்களால் நிரம்பி வழிகின்றன. இவை அனைத்தும் நிராந்தரமாக்கப்படும் போது மணலாற்றின் நிலைமை எப்படியிருக்கும் என்பது சொல்லித்தான் தெரியவேண்டும் என்பதில்லை.

அதேவேளை, வடக்குக் கிழக்கில் இருந்த மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் அழிக்கப்பட்டு அங்கெல்லாம் முகாம்கள் நிறுவப்பட்டுள்ளன. மேலும் பெரும்பான்மையான முகாம்கள் பொதுமக்களுக்குச் சொந்தமான வீடுகள், காணிகள் என்பனவற்றிலே அமைந்துள்ளன. இவையெல்லாம் நிரந்தரமாக்கப்படும் பேர்து எமது மக்களின் சொத்துகள் பெரும்தொகையில் பறிக்கப்பட்டு விடும் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கில் இப்படியொரு நிலைமை என்றால் கிழக்கில் இதைவிட மோசமான நிலை உருவாகி வருகிறது. அதிரடிப் படை முகாம்களையும், இராணுவ கடற்படை முகாம்களையும் அமைக்கத் தமிழ் மக்களின் காணிகள் மட்டுமன்றி முஸ்லிம் மக்களின் காணிகள் கூடப் பறிக்கப்படுகின்றன. இது தொடர்பாக அண்மையில் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்த பிரிட்டிஷ் தூதுவராலய அதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர். மக்கள் ஜனாதிபதியிடமோ, உரிய பொறுப்பு வாய்ந்தவர்களிடமோ முறையிடக் கூட அஞ்சுவதாக மனித உரிமைகள் அமைப்பினர் லண்டன் பி.பி.சி. வானொலிக்குத் தெரிவித்துள்ளனர்.

அடிப்படையில் நாட்டின் பாதுகாப்பு எனக் காரணம் காட்டப்பட்டு படை முகாம்கள் நிரந்தரமாக்கப்படும்போது தமிழ் , முஸ்லிம் மக்களின் காணிகள் அபகரிக்கப்படும் ஓர் அபாய நிலையே தோன்றுகின்றது.

இதற்கமைவாக கிழக்கு மாகாண ஆளுநர், திருமலை அரச அதிபர், வட மாகாண ஆளுநர் அனைவருமே இராணுவ அதிகாரிகள் என்பது குறிப்பிடத்தக்கது.

வடக்கில் பாடசாலை விழாக்கள், சனசமூக நிலைய விழாக்கள், மாவட்ட, பிரதேச அபிவிருத்திக் கூட்டங்கள் அனைத்திலுமே இராணுவப் பிரசன்னம் கட்டாயப்படுத்தப்படுகிறது. நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்து கொள்ளும் கூட்டங்கள் கூட படையினரின் கண்காணிப்புக்கு உட்படுத்தப்படுகின்றன.

சிவில் நிர்வாகம் மேற்கொள்ளும் விஷயங்களில் கூட படைக் கட்டமைப்பு தலையிடும் நிலைமை மட்டுமின்றி, அவர்களின் கட்டளைக்கு அமையவே சிவில் அதிகாரிகள் செயற்படும் ஒரு நிலைமையும் வலிந்து உருவாக்கப்படுகிறது.

அதாவது வடக்கின் சகல அசைவுகளையும் இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரும் முயற்சிகள் ஏற்கனவே இடம்பெற ஆரம்பித்துவிட்டன. அதாவது ஓர் இராணுவமயப்படுத்தப்பட்ட நிர்வாகத்துக்குள் தமிழ் மக்களை ஆளும் நிலை உருவாகி வருகின்றது. வடக்குக் கிழக்கின் இராணுவ முகாம்கள் நிரந்தரமாகும் போது அவை மேலும் வலுப்படுத்தப்படும்.

எனவே வரவு செலவுத்திட்டத்தில் பாதுகாப்புக்கு ஒதுக்கப்படும் நிதி வடக்குக் கிழக்கை இரா்ணுவமயப் படுத்துவதுடன் நின்று விடாது தெற்கு வரைக் காலப்போக்கில் நீளும் என்பதைச் சிங்கள மக்கள் உணரும் காலம் வெகு தொலைவில் இல்லை. *

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 190

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | ■ | 4 | 5 | |
| 6 | | ■ | 7 | 8 | | | ■ |
| 9 | | 10 | | | ■ | 11 | 12 |
| | ■ | 13 | | ■ | 14 | | |
| ■ | 15 | | ■ | 16 | | | ■ |
| 17 | | ■ | 18 | | | ■ | 19 |
| 20 | | 21 | | ■ | 22 | 23 | |
| 24 | | | ■ | 25 | | | |

அனுப்புபவர் பெயர்:..............................................

விலாசம்:..............................................

..............................................

கையொப்பம்:..............................................

### இடமிருந்து வலம்

1. எச்சரிக்கையைக் குறிக்கும் நிறம்
4. பத்தாம் நாள் திதி
6. ஒன்று சேர்
7. ஈகை
9. மனதைக் கவரும் அழகு
11. இது வந்தால் பத்தும் பறந்திடுமாமே
13.பூப்படைதல்
14. விளக்கமாகக் கூறு
15. போதை தருவது
16. பாரமான
17. முகத்தில் வருவது
18.வருடு
20. பொன்
22. மெல்லிய உலோகத்தட்டு
24. பத உறுப்பில் ஒன்று
25. மருத்துவ மலர் வாசணையுள்ளது.

### மேலிருந்து கீழ்

1.மலை உச்சியில் அமைவது
2. இடம் அல்ல
3. நவீனமானது
4. ஏற்ப.
5. ஒரு நிகழ்வு.
8. நாம்
10.மென்மை
12.புன்னகை செய்
14. கேட்டல்
15. அருகில்
16. தாண்டு
17. அதிகாரிகளுக்கு இதன் மேல் ஆசை
18. தங்களுடையது
19. விதைப்பு
21. வேகம்
23. இந்த யுகம்.

★வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படு வதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத் துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலா னோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவ தால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 188 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) விசும்பு (4) பாரதி (7) தடி (8) திகழ்தல் (10) வைத்தியம் (12) தாதி (13) பகா (16) நீர் (17) வளர்தல் (19) அரவம் (20)வலி (21) பதிகம் (23) இணைய (24) திரும்புதல்

### மேலிருந்து கீழ்

(1) விதவை (3) புதிய (4)பாழ் (5) ரதம் (6) தில் (9)கம்பளம். (11) திதி (14) கார் (15) துல்லியம் (16)நீதிபதி (17) வரம்பு (18) தவணை (19) அகம் (22) திரு (23)

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 187 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு
**ச. தயாபரன்,**
விநாசித் தம்பி வீதி, சாவகச்சேரி.

2 ஆம் பரிசு
**சி.சிந்துஜா,**
இல.184, பிரதான வீதி, நெல்லியடி, கரவெட்டி.

3 ஆம் பரிசு
**கு.ஜெயகோபன்,**
இல.11/1 R.D.D. விடுதி, சிந்தாமணிவெளி, வட்டவீதி, வவுனியா

4 ஆம் பரிசு
**இ.இராஜேந்திரா,**
இல.21 B, கனகரட்ணம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம்.

5 ஆம் பரிசு
**பேனாட் ஷரோன் டிலக்ஷி,**
பாரதி வீதி, 7 ஆம் கட்டை, சங்கானை.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

### பாராட்டுப் பெறுவோர்

**ரி.ஹரிஸ்கண்ணா,**
இணுவில் மேற்கு, இணுவில்.

**சி.சஜீவன்,**
ஹல்லக் லேன்,
மானிப்பாய்.

**செ.ராஜினி,**
பொற்பதி வீதி,
கொக்குவில்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம்போட்டி - 189**
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 30.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.189 இற்கான விடைகள் 04-12-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

# மூழ்கிய ...

(03 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வீட்டுச் சுமைகளும் அளவுக்கு மீறிய பொறுப்புக் களும் உடலை வருத்திச் செய்யும் வியாபாரமும் கமலனின் வாலிப வயதை வயோதிபமாக்கிக் காட்டி யது.

வியாபார நுணுக்கமும், முயற்சியும், உழைத்துத் தன் குடும்பத்தை முன்னேற்ற வேண்டும் என்ற நிறைந்த ஆசை கமலனிடம் இருந்தது. ஆனால் மூலதனம் இல்லை.

அந்தக் காலப்பகுதியில் கப்பல் வியாபாரத் திலேயே யாழ்ப்பாண வியாபாரிகள் வியாபாரம் செய்து இலாபம் சம்பாதித்து வந்தனர். மூலதனம் எவ்வளவு அதிகமோ அந்தளவில் தமது வியா பாரத்துக்கு காப்புறுதியும் செய்தே வியாபாரம் செய்தனர்.

குடும்பத்தை முன்னேற்றும் நோக்கில் கமலனும் தாம் இதுவரை அரும்பாடுபட்டுச் சேர்த்த பணத் தையும் தனது வீட்டை ஈடுவைத்தும் அறிந்தவர் தெரிந்தவர்களிடம் அறாவட்டிக்குப் பணத்தைச் சேர்த்தும் சிறிய மூலதனமாக்கி தனது வியாபாரத்தைத் தொடங்கினான். எப்படியும் வியாபாரத்தில் முன்னேறித் தனது குடும்பத்தை உயர்த்த வேண்டும் என்பதே அவனது உயர்வான இலட்சியம்.

கொழும்புக்குச் சென்று பல கடைகள் ஏறி இறங்கி பதினைந்து மோட்டார் சைக்கிளைக் கொள்வனவு செய்து திருகோணமலைக்குக் கொண்டு சென்று ஒருவாறு கப்பலில் ஏறிவிட்டான். இனி பருத்தித் துறைக்குச் சாமான் வந்ததும் விற்க வேண்டியது தான்.

கப்பல் வேகமாகப் புறப்படுவதற்கிடையில் கமலனின் கற்பனை அதைவிட வேகமாகச் செல்லத் தொடங்கியது.

'போன முறையை விட இந்தமுறை கூடிய இலாபம் வரும்; எனவே புறோக்கரிட்டைப் போய் முதல் திருமகள் அக்காவுக்கு பேசின சம்பந்தத் தையே பேசச் சொல்ல வேணும்'. சீதனம் கொஞ்சம் கூடினாலும் பரவாயில்லை.

''தம்பி கமலன் நீ ஏகாம்பரத்திட்டை அறாவட்டிக்கு வேண்டின காசைக் குடு. வட்டிதான் தோல் இருக்கச் சுளை போற மாதிரி ஆளையே விழுங்கி விடும்'' என்றாள்.

' ஓம் அம்மா நானும் இதைத்தான் யோசிச்சனான் பேரம்பலமும் கொழும்பில என்னைக் கண்டு அக்கான்ரை புருஷன்ரை செத்த வீட்டுக்கு வேண்டின காசையும் வட்டியையும் தரேல்லை என்று பேசிப் போட்டார். இந்தமுறை எப்படியும் தாறன் என்று சொன்னனான்' என்றான்.

ஓடி விளையாடிக் கொண்டிருந்த மல்லிகாவின் மூத்தமகள் ஓடிவந்து ''மாமா மாமா செந்தூரனும் பள்ளிக்கூடத்தில் போய்ச் சேந்திட்டான். என்னை எப்ப சேக்கப் போறீங்க பள்ளிக் கூடத்தில'' என்று கேட் டாள்.

பாவம் அந்தப் பிள்ளைதான் பள்ளிக்கூடம் சேர்வது என்றாலும் மாமாவின் கப்பல் சாமான் விற்று வரும் இலாபம் தான் பதில் கூற வேண்டும் என்பதையோ அல்லது பெரிய பாடசாலைகளில் 'டொனேசன்' என்னும் பெயரில் நடைபெறும் பகற்கொள்ளை யையோ அந்தப் பாலன் அறிந்திருக்க நியாயமில்லை.

தையல் பழகிவிட்டு தையல் மெஷினுக்காக பூமகள் ஒவ்வொரு வீட்டிலும் போய்த் தைப்பதும் கமலனுக்குக் கவலை. அவளுக்கு ஒரு நல்ல சிங்கர் மெஷின் வேண்டவேணும், திருமகளுக்கு அட்டியல் செய்யச் சொன்ன புறோக்கரிட்டை போய் மிச்சக் காசைக் கொடுக்க வேனும், அம்மாவுக்கு கண்ணைச் சோதிச்சு ஒரு வெள்ளெழுத்துக் கண்ணாடி வேண்ட வேணும், இப்படியே எண்ணமிட்டபடி அவனது பட்ஜெட் நீண்டது.

வரவர குடும்பத்தின் தேவைகளும் யோசனை களும் அவனது வாலிப வயதை வயோதிபமாக்கியது.

சிக்கலான பிரசவத் தாயின் பிரசவத்தை எதிர் பார்ப்பது போன்று, சாமான்களுடன் புறப்பட்ட கப்பலைக் கமலன் வீட்டினர் ஒவ்வொருவரும் எதிர் பார்த்தனர்.

நாளை சாமான் இறக்கும் போது கொண்டு செல்ல வேண்டிய தனது அடையாள அட்டை, மோட்டார் சைக்கிளின் வரித்துண்டுகள், சாமான் ஏறியதற்குக் கூலி கொடுக்கப்பட்ட துண்டுகள் ஒவ்வொன்றை யும் சரி பார்த்து அடுக்கிவிட்டு நித்திரைக்குச் சென்றான். விடிந்ததும் மோட்டார் சைக்கிளைக் கொண்டு வரவேண்டும் என்பதே அன்றைய இரவு முழுவதும் அவனுடைய சிந்தனை.

மறுநாள் அதிகாலை பல்லை அவசர அவசரமாகத் தீட்டிக் கொண்டு நிற்கின்றான். அப்போது அவனது நண்பன் வேகமாக சைக்கிளில் வந்து வரிச்சுமட்டை வேலியில் சாத்திவிட்டு ஓடிவருகிறான்.

''கமலன் கேள்விப் பட்டனீயே...''

''என்னடா என்னத்தைக் கேள்விப்படுறது...''

''நேற்று சாமான்களுடன் வந்த கப்பல் எல்லே நடுக்கடலில தாண்டு போச்சுது... அதில இருந்த மாலுமியக் கூடக் காப்பாத்தேலாம போயிற்று தாம்...!''

அடுத்த வார்த்தை கேட்க கமலனுக்கு நாக்கு எழவில்லை... காதிலும் ஒன்றும் ஏறவில்லை... வார்த்தையால் சொல்ல முடியாத அளவுக்கு நெஞ்சிலே ஒரு பிறழ்வு... கப்பல் மட்டும் தாழ வில்லை. அந்தக் குடும்பத்தின் எதிர் கால வாழ்வும், வாழ்வின் நம்பிக்கையுமே தாண்டு போனது.

அரச உதவியுடன் கட்டிவிட்டு அரை குறையாக நிற்கும் மல்லிகாவின் வீடு கூட புதுப்பொலிவு பெற கமலனின் கப்பல் சாமானின் வரவையே எண்ணியிருந்தது. காப்புறுதி செய்து சாமான் ஏத்தாத கமலனுக்கும் கட்டி அரைகுறையாக நிற்கும் தனக்கும் இனி மீட்சியே இல்லையா? என்று கேட்பது போல் இருந்தது எதிரேயுள்ள மல்லிகாவின் அரைகுறையான வீடு.

எதுவுமே சிந்தையில் ஏற மறுத்தது. கமலன் வாய்விட்டலறினான். விஷயம் அறிந்த தாய் முத்துப்பிள்ளை, ''அடே மகனே பயப்பிடாதையடா, நீ ஓர் ஆண்பிள்ளையெல்லோ!'' என்று உற் சாகமூட்டிச் சிரித்தாள். அவளும் எத்தனையோ துன்பங்களைக் கடந்து வந்தவள் தான்... கமலன் அண்ணையின் முகத்தைக் கூர்ந்து நோக்கினான். ஓர் உற்சாகம் பிறந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையின் சீரான அரவணைப்பு சீரழிவுகளைக் கட்டுப்படுத்தும்



மனித வாழ்க்கைக்கு அணிகலமாக அமைபவை நல்லொழுக்கம், கட்டுப்பாடு, பணிவு, கீழ்ப் படிவு என் பவை ஆகும். இந்தப் பண்புகளை சிறு வயதில் இருந்து படிப் படி யாக ஊட்டி சமூகத்தில் நற் பிரஜைகளை உருவாக்கும் பொறுப்பு அன்னையர்களுக்கே உரியது.

தன் குழந்தைகளை அன்புடன் பாலூட்டி, சீராட்டி, நற்பண்புகளையும் நன்னடத்தைகளையும் சீர்ப் படுத்தி வளர்த்துக்கொள்ள வேண்டும்.

போதிய அன்பு, பாசம், அரவணைப்பு போன்ற சில தாய்மாரிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் பல குழந்தைகள் திசைமாறிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இந்தக் குழந்தைகளே குறைபாடுகள் உடையவர்களாகவும், ஒழுக்கப் பிறழ்வுகள் உடையவர்களாகவும், உளப்பாதிப்புக்கள் உடையவராகவும், ஒழுக்கம், கட்டுப்பாடு, கீழ்ப்படிவு அற்றவர்களாகவும், சமூகத்துக்கு அஞ்சாதவர்களாகவும் சட்ட ஒழுங்கினை மதிக்காதவர்களாகவும் இருக்கின்றனர்.

இயற்கையினால் தாய்க் குலத்திடம் ஒப்படைக்கப்பட்ட இந்த மாபெரும் பொறுப்பு மகத்தானதும், புனிதமானதும் என்பதை ஒவ்வொரு தாய்மாரும் உணர்ந்து செயற்பட வேண்டும். நாளைய சமூகம் நற்பிரஜைகளாகப் பரிணமிக்கவும் மலர்ச்சி பெறுவதற்கும் தாய்க்குலத்தின் பங்களிப்பு இன்றி அமையாதது ஆகும்.

''ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன் மகனைச் சாற்றோன் எனக் கேட்டதாய்''

குழந்தையைப் பெற்றெடுத்து குழந்தைப் பருவத்திலும் பிள்ளைப் பருவத்திலும் பேணி ஒழுக்கப் பண்புகள் என்னும் விதைகளை விதைத்து அப்பண்புகள் வளர்ந்து பயன் தரும் போதுதான் தாயானவள் மகிழ்ச்சி அடைகின்றாள்! சான்றோன் என்ற விதை இளமையில் தாயினால் குழந்தையின் உள்ளத்தில் விதைக்கப்பட்டு நற்பண்பு என்னும் முளை கொண்டு வளர்ந்து நல்ல அறுவடையாகப் பெறப்படுகிறது. எனவே ஒவ்வொரு அன்னையரும் தமது முழுமையான அரவணைப்பின் மூலம் சிதைவடைந்து செல்லும் இந்தச் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப முயற்சிக்க வேண்டும். முயற்சிப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

சி.கங்கானந்தி,
5ஆம் வட்டாரம், நயினாதீவு.

## சிந்தனை செய் கிள்ளையே!



''சுப்பர் கப்'' பைக்கில்
சம்பளம் வாங்காத
மெய்க்காப்பாளனாய்
நீ செல்லும் இடமெல்லாம்
பின் தொடர்வான்
நீ திருப்பிப் பார்க்கும் தருணத்துக்காக
காவல் காப்பான்
துப்பாவியாய் தாடியுடன் அவன்
திரிவான்-பாவி அவனைப் பார்த்து
பாவை நீ பரிதாபம் கொள்ளாதே!
உன்னை காதல் வலையில்
சிக்க வைக்க அவன் நடத்தும்
நாடகம் அது- நீ ''ஓ.கே என்றால்
கண்ணே கண்மணியே
பொன்னே பொன்மணியே என்பான்
கசாப்புக் கடைக்காரன் ஆட்டிடம்
காட்டும் கருணை போன்ற
அவன் பசப்பு வார்த்தைகளை
மங்கை நீ நம்பாதே!
இது காதல் கொள்ளும் வயதல்ல
கல்வி கற்கும் வயது
ஓடிப்போய் வாழ்வை அமைக்காதே
சீரழிந்து போவாய்
ஓடிப் போகும் முன்
ஒரு நிமிடம் யோசி
பாழ்படப் போவது உன் வாழ்வு
மட்டுமல்ல
பாசம் கொண்ட உன்
குடும்பத்தின் மரியாதையும் தான்.

வதனா,
கரவெட்டி.

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
''திலகம்'',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# சிறந்த வாழ்வுக்கு மனங்கள் மாறவேண்டும்



சு.சிவாஜினி.

இன்றைய காலத்துப் பெண்கள் எவ்வளவுதான் புத்திஜீவிகளாக இருந்தாலும் தம்முடைய பிரச்சினைகளில் இருந்து எப்படி விடுபடுவது, அதனை எவ்வாறு தீர்ப்பது என்பது பற்றி சரியான முடிவெடுக்கத் தெரியாமல் தவிக்கின்றனர். இப்படியான ஒரு நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்ணால் தன்னுடைய வாழ்க்கையை மேன்நிலைக்கு இட்டுச் செல்ல முடியாது. மாறாக ஊரே சிரிக்கும் படி தான் வாழ முடியும். சிரித்து வாழ வேண்டும் பிறர் சிரிக்க வாழக் கூடாது. இதை மனதில் கொண்டு எவ்வளவுதான் வாழ்க்கையில் தோல்விகள் வந்தாலும் மனம் சோர்ந்துவிடாது வாழ்க்கையை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். சில பெண்கள் வாழ்க்கையில் ஏற்படும் சின்னச் சின்னத் துன்பங்களுக்கெல்லாம் மனமுடைந்து அடுத்தகட்ட நடவடிக்கைகளை எப்படி மேற்கொள்வது என்ற நிலை தெரியாது மிகவும் தடுமாறிப் போயிருப்பார்கள்.

இப்படிக் கலங்கி இருப்பதால் வாழ்க்கையில் வெற்றி பெற முடியுமா? நாம் செய்த தவறுகளில் இருந்து திருந்தி வாழ வேண்டும். அதைவிடுத்து, நான் பிழை விட்டு விட்டேன்; எப்படி சமுதாயத்தில் தலை நிமிர்ந்து வாழ முடியும், என்றெல்லாம் சிந்திப்போமேயானால் முடிவு தற்கொலையாகத்தான் அமையும். எது வந்தாலும் நாம் போகின்ற பாதை நேர்மையானதாக இருக்குமானால் யாருக்கும் அஞ்சி வாழத்தேவையில்லை. வாழ்க்கையென்னும் பயணத்தில் பயணித்துக் கொண்டிருக்கின்ற நாம் போகும் வழியில் எத்தனையோ தடைகளைச் சந்திக்கின்றோம். தடைகள் தாண்டிப் பயணத்தை மேற்கொள்ளும் போதுதான் குறித்த இலக்கை அடையமுடிகின்றது. பாதை பஞ்சுமெத்தையால் அமைக்கப்பட்டிருந்தால் நாம் அடைந்த இலக்கில் சந்தோசம் இருக்காது. அது சாதனையாகவும் இராது.முள்கள் குத்தி, கால்கள் வலித்து அந்த வலிகளையும் தாண்டி எங்கள் பயணம் தொடர்ந்தால்தான் அது சாதனை.

குறிப்பாகப் பெண்களுக்கு மலையளவு மன வலிமை வேண்டும். குறுகிய வட்டத்துக்குள் நின்று கொண்டு கண்ணீர் விட்டால் வாழ்வே நரகமாகிவிடும். முடியுமான வரை உங்கள் மனதை ஒரு குறிக்கோளில் வைத்து முயன்று பாருங்கள். முடியாதது என்று எதுவுமே கிடையாது. முன் நோக்கி போகும் போது பின் நோக்கிய பார்வை வேண்டாம். முன்னால் இருக்கும் தடைகளை மட்டும் பார்த்து முயன்று செல்லுங்கள். நிச்சயம் வெற்றி கிடைக்கும். முடிந்தவைகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்கள், வரப்போகும் எதிர்கால வெற்றிக்கு அத்திவாரமாக அமையட்டும்.

## கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

நீ மறுமணம் செய்வதை உன் உறவினர் விரும்பவில்லை என எழுதியிருந்தாய். கணவனை இழந்து நீ குழந்தையுடன் பரிதவித்த போது அவர்கள் எல்லாம் எட்டி நின்று வேடிக்கை பார்த்தவர்கள் என்பது எனக்குத் தெரியும். அவர்களுக்காக நீ ஏன் தயங்குகிறாய் மறுமணம் செய்வது குற்றமில்லை.

விதவையான உன்னை மீண்டும் சுமங்கலியாக்க அருமையான ஒரு நபர் முன்வந்துள்ளார். இதில் முடிவெடுக்க வேண்டியது நீதான். மற்றவர்கள் ஏதாவது சொல்வார்கள் என்று கவலைப் பட்டால் ஆயுள்வரைக்கும் நீ விதவைதான். வாழ்க்கை உன்னுடையது. அதில் மற்றவர்களுக்கு முடிவெடுக்க உரிமையில்லை.

ஓர் ஆண் மறுமணம் செய்வதை ஏற்றுக் கொள்ளும் இவர்கள் ஏனோ பெண்களுக்கு மறுமணம் என்பதை விரும்புவதில்லை. சந்தர்ப்பத்தைத் தவற விட்டுவிட்டு பின்னால் வருந்துவதில் பய னில்லை. நீ தவறவிடமாட்டாய் என நம்புகிறேன்.

அன்புடன்....
கங்கா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லியானாடோ டாவின்ஸி



லியானாடோ டாவின்ஸி அவர்கள் கி.பி 1452 ஆம் ஆண்டு இத்தாலியின் புளோரன்ஸ் நதிக்கு அருகில் பிறந்தார்.

இவர் பொறியியல் வல்லுநராக, கட்டடக் கலைஞனாக, பாடகனாக, வானிலையாளனாக, கணித வல்லுநராக, தாவரவியல் அறிஞராக, விலங்கியல் நிபுணராக, உடற்றொழிலியல் விற்பன்னராக, சிலை வடிக்கும் சிற்பியாக, பாட்டியற்றும் புலவராகப் பல பாத்திரங்களை ஒரே நேரத்தில் வகித்தவர்.


ஓவியம் இவரின் ஞானக்கடலில் இருந்து வந்த ஒரு சிறுதுளி என்றே கூறலாம்.

கி.பி 1503 இல் ''மோனாலிசா'' என்னும் உலகப் புகழ்பூத்த பெண் ஓவியத்தை வரைந்தவரும் லியானா டோ டாவின்ஸி ஆவார். இவ் ஓவியத்தில் உள்ள மோனாலிசா என்ற பெண்ணின் மென்மையான புன்னகை உலகப் பிரசித்தமானது.

டாவின்ஸியினால் வரையப்பட்ட ''இராப்போசனம்'' என்னும் ஓவியமும் மிகப்பிரபல்யமானது.

ச.பிரியங்கா,
தரம் 06 ஏ, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

## நீள் தலைக் கடலாமைகள்



இவ்வகைக் கடலாமைகள் ஆமை இனம், முதிர்ந்த நிலையில் 1 மீற்றர் நீளமும், ஏறக்குறைய 180 கி.கி.நிறையை உடையதாகவும் இருக்கும். இந்தவகை ஆமைகள் வெப்ப வலயப் பிரதேசங்களிலும் ஓரளவு காணப்படுகின்றன. அத்தோடு இவை இடைவெப்ப வலயப் பிரதேசங்களிலும் ஓரளவு காணப்படுகின்றன. குறிப்பாக மெடியற்றிரேனியன் கடற்கரைப் பிரதேசங்களிலும் காணப்படுகின்றன. லொக்கர் கெட் கடலாமை எனப்படும் இவ்வாமைகள் முக்கியமாக மாமிசப் பட்சினிகளாகவே இருக்கின்றன. கடின வலிய மோலோடு உடையதும் முண்ணான் இல்லா உயிரினமாக உள்ள உயிரினங்களில் இதுவும் ஒன்றாகும். இந்த ஆமை தன் பெயருக்கு ஏற்ப தலையிற் தசைப் பிடிப்புள்ளதாக விளங்குகின்றது. அதன் காரணமாக அது காரணப் பெயர் கொண்டு தடித்த தலை கொண்ட ஆமை என அழைக்கப்படுகின்றது.

வினோ,
யா/ஸ்ரான்லி கல்லூரி.

## காகமும்... அறிவுரையும்



ஒரு மரத்தில் ஒரு காக்கை கூடு கட்டி தன் குஞ்சுகளுடன் வாழ்ந்து வந்தது. அதே மரப் பொந்தில் ஓர் ஆந்தையும் வசித்து வந்தது. ஒரு நாள் நள்ளிரவில் அந்த ஆந்தை காக்கை தூங்கி இருக்கும் வேளையில் வந்து அதை விரட்டி அடித்தது.

மறுநாள் வேறொரு மரத்தில் காக்கை கூடு காட்டியது. அதையும் தெரிந்து கொண்ட ஆந்தை அங்கேயும் சென்று காக்கையை விரட்டியது.


அதனால் வருத்தமடைந்த காக்கை அடுத்த ஊரிலிருந்த தன் தாய் காகத்திடம் இதைப் பற்றிக் கூறியதுடன் இதிலிருந்து தப்ப வழி என்ன? என்றும் கேட்டது.

அப்போது தாய் காகம்... "ஆந்தைக்கு பகலில் கண் தெரியாது; ஆகவே நீ பகலில் சென்று ஆந்தையை விரட்டு" என்றது. அதைக் கேட்ட காகம் அதன் படியே செய்ய ஆந்தை காகத்தை விட்டு ஓடியது. காகத்தின் புத்திசாலித்தனமும் தாயார் சொன்ன அறிவுரையும் காக்கையையும் அதன் குஞ்சுகளையும் காப்பாற்றின.



கபிலன்,
உடுவில் மான்ஸ் ம.வி.

## நேரு மாமா



நேரு மாமா என்னைக் கண்டார்
நெருங்கி வந்து முத்தம் தந்தார்
நேர்மையாக எல்லோரிடமும்
பழகு என்றார் - நாட்டின்
நிலை என்னிடம் கேட்டறிந்தார்.

பாட்டுப்பாட விளைந்தார்
பரிவோடு பின் நாளை
வருவேன் என்றார்
கரும்பாய் மனதில் நிலைத்திட்டார்
கனாவிலிருந்தே நொடியில்
கலைந்திட்டார்...

சார்மி,
யா/இந்து மகளிர் கல்லூரி.

| விடயம் | பெயர் | நாடு |
|---|---|---|
| ★முதல் பெண் பிரதமர் | ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க | இலங்கை |
| ★முதலில் உலகத்தை சுற்றி வந்தவர் | மகலன் | அமெரிக்கா |
| ★முதலில்சந்திரனில் தரையிறங்கியவர். | நீல் ஆம்ஸ்ரோங் | அமெரிக்கா |
| ★முதல் விண்வெளி வீராங்கனை. | வாலண்டினா தெரஸ்கோவா | ரஷ்யா |
| ★முதலாவது விண்வெளிச்சுற்றுலாப்பயணி | டெனி ஸ்றீட்டோ | அமெரிக்கா |
| ★சோதனை குழாய் குழந்தை | லூயி பிரவுன் | இங்கிலாந்து |

வை.அலெக்ஸ்ராம், யா/யூனியன் கல்லூரி.

## விடுகதைகளும் விடைகளும்

1.எனக்கு ஐந்து விரல்கள் உண்டு. ரத்தமும் இல்லை சதையும் இல்லை நான் யார்?
2.வெளிச்சத்தில் தெரிவேன் இருட்டில் மறைவேன் நான் யார்?
3.ஆயிரம் ஆயிரம் முடிச்சுகளும் என்னிடம் உண்டு. ஆயிரம் ஆயிரம் ஓட்டைகளும் என்னிடம் உண்டு. நான் யார்?
4.சான் உயர பூனை வைத்து எல்லாம் சுமக்கும் நான் யார்?

### விடைகள்


01.கையுறை 02.நிழல் 03.வலை 04.அடுப்பு

ர.குவேதினி,
கிளி/பரந்தன் இந்து மகா வித்தியாலயம்.






கே.அனோசன்,
தரம்-6எ,
யா/யூனியன் கல்லூரி.



ம.சஜிவன்,
தரம்-11பி, யா/கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயம்.

ஜெ.டயானந்தன்,
தரம்-8எ, யா/இந்துக் கல்லூரி.





[illegible],
தரம்-6எ,
யா/யூனியன் கல்லூரி.

## விடை தெரியுமா? 135

### உங்களுக்கும் பரிசில்கள்

1. உலகின் மிகப் பெரிய அரண்மனை எங்கு உள்ளது?
2. இலங்கையில் சுனாமி எச்சரிக்கை நிலையம் எங்கு உள்ளது?
3. ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் நாடுகள் எது?
4. தலையில்லாமல் குறிப்பிட்ட காலம் உயிர் வாழும் பிராணி எது?
5. மின் தடையை அளக்கப் பயன்படும் கருவி எது?

### விடைகள் 133

1. வல்லூறு
2. 30
3. வெனிசுலா
4. பின்லாந்து
5. வெள்ளை

### வெற்றி பெற்றோர் விவரம் (134)

★சீ.சத்தியதாஸன், தரம் 6எ, யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க ம.வி.
★சி.நிரோஜன், தரம்- 6வி, யா/நெல்லியடி ம.ம.வித்தியாலயம்.
★ப.யாழினி, தரம்-8கே,யா/புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
★சி.லதாங்கி, தரம்-2, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
★அ.தயாசா, தரம்8வி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ஸ்ரீ.வனோஜா, தரம் 2, சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலை.

**விடை தெரியுமா?**

தெரிந்தால் 03.12.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் 26 ஆவது அகவை நிறைவு சிறப்புமலர் 27.11.2011

## உயர்ந்த இலட்சியப் பாதையில் செல்பவன்!



மக்கள் மனங்கவர்ந்த நாளிதழான ''உதயன்'' இருபத்தாறாம் ஆண்டைப்பூர்த்திசெய்து இருபத்தேழாம் ஆண்டில் காலடி எடுத்து வைப்பதைக்கண்டு உள்ளம் உவகையுறுகின்றது. எத்தனையோ இடையூறுகள் வந்தும் சளைக்காமல் உதயன் உயர்ந்த இலட்சியப் பாதையில் வீறு நடை போடுகின்றான்.

காலை எழுந்தவுடன் உதயனைப்பார்க்காவிட்டால் ஏதோ ஒன்றை இழந்துவிட்டதுபோல் ஒருணர்வு. யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவருகின்ற இப்பத்திரிகையை உருவாக்கி உலவவிடுபவர்களைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. அவர்கள் அத்தனைபேரும் சீரோடும் சிறப்போடும் வாழ வேண்டுமென எல்லாம் வல்ல நல்லைக் கந்தனை உளமாரப் பிரார்த்தித்து அருளாட்சிகளை வழங்குவ தில் பேருவகையடைகின்றோம். இன்றுபோல் என்றும் உயர்ந்த இலட்சிய நோக்கோடு வெளிவந்து மக்கள் பணி செய்யவேண்டுமென்று ஆசி நல்கி வாழ்த்துகின்றோம்.

''என்றும் வேண்டும் இன்ப அன்பு''

ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரதேசிக ஞானசம்பந்த பரமாசார்ய சுவாமிகள்,
*இரண்டாவது குருமஹா சந்நிதானம்,*
*நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனம்.*

## அஞ்சா நெஞ்சமும் தளராத ஊக்கமுமே உதயனின் உயர்ச்சிக்குக் காரணம்



இலங்கையில் வெளிவந்த, வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளில் பத்திரிகா தர்மத்தையும் இலட்சிய வேட்கையையும் கடைப்பிடித்து அதன் காரணமாக பல்வேறு கெடுபிடிகளையும் உயிர் அச்சுறுத்தல்களையும் சந்தித்து, தளராது வெளிவந்து கொண்டிருக்கும் உதயன் பத்திரிகை தனது 26 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுவது குறித்து மகிழ்ச்சியடைகிறேன்.

உதயனின் அஞ்சா நெஞ்சமும் தளரா ஊக்கமுமே தன்னிகரில்லாத தனியிடத்தை உதயன் பெறக் காரணமானதோடு, பல்வேறு வகையான விருதுகளையும் பாராட்டுக்களையும் அடையத் துணை செய்தன.

பிரதேச நிலையிலும், தேசிய ரீதியாகவும், உலக அளவிலும் உதயனின் குரல் தமிழ் மக்களின் சமூக அபிவிருத்திக்கான உந்து சக்தியாக ஒலித்துக் கொண்டே இருக்கின்றது.

சுடச்சுடச் செய்திகளை வழங்குவதுடன் நின்றுவிடாமல், ஆலோசனைகள் அறிவுரைகளுடன் மக்களின் கருத்துக்களை ஆணித்தரமாக அரசியல் அரங்குகளிலும், சமூகத் தளங்களிலும் வழங்கி, தமிழ் இனத்தின் ஒற்றுமையை வலியுறுத்தி, உதயன் ஆற்றும் பணி வரவேற்கத்தக்கது. செம்மொழியாம் தமிழின் சிறப்புக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் வரலாற்றின் தேடல்களுக்கும், உதயன் பத்திரிகை மகத்தான பணியாற்றி வருகின்றது. உள்ளூராட்சி, மாகாண நிர்வாகம், தேச ஆளுகை போன்ற நீதி, நிர்வாகச் சட்டத் துறைகள் சார்ந்த மக்களின் எழுச்சிக்கு உதயனின் பங்களிப்புப் போற்றுதற்குரியது.

இப்பணி என்றும் தொடரவும், மென்மேலும் பாராட்டுக்களும், விருதுகளும் வென்றிடவும் தலைவர் என்ற ரீதியிலும், சபை சார்பாகவும் மனதார வாழ்த்துகிறேன்.

தியாகராசா பிரகாஷ், *தவிசாளர்*
*வலிகாமம் தெற்குப் பிரதேச சபை.*

## குரலற்றோருக்கு குரலாகும் உதயன்



தமிழுக்குப் புகழ் என்றும் பொருள் உண்டு. அந்தப் பொருளுக்கு ஏற்ப பூத்து, மலர்ந்து, புகழ் பெருகி சிகரத்துக்கே சென்று தமிழனுக்குப் பெருமை சேர்த்த உதயனுக்கு எமது வாழ்த்துக்கள்.

26 ஆண்டுகளைப் பூர்த்தி செய்வது என்பது நீண்ட வரலாற்றுப் பணயமாகும். சோதனைகளையும் வேதனைகளையும் தனது பயணத்தின் படிகளாக்கி மக்கள் மனதில் சாதனையின் உயரத்தில் இடம்பிடித்திருக்கும் உதயனுக்கு வாழ்த்துக்கள்.

அரசியல், ஆன்மீகம், இலக்கியம், சமூகம், ஆகிய துறைகளின் மாற்றங்களுக்கு ஈடுகொடுத்துத் தன்னை ஸ்திரப்படுத்திக் கொண்டு இன்று 26 ஆண்டுகளைப் பூர்த்தி செய்திருப்பது உதயனின் துணிவுக்கும், திறனுக்கும், உழைப்புக்கும் கிடைத்துள்ள வெற்றியாகும். சைவ சமயத்துக்கும் எமது குருமார் ஒன்றியத்தின் ஆன்மீகப் பயணத்துக்கும் கைகொடுத்து வரும் உதயனுக்கு மனம் நிறைந்த ஆசீர்வாதங்கள். அனைத்துலகத் தமிழினமும் இன்பமுற உனது சேவை தொடர எல்லாம் வல்ல பார்வதி பர மேஸ்வரர் அருள் வேண்டி எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சிவஸ்ரீ. சபா. வாசுதேவ குருக்கள், *[தலைவர்]*
*சர்வதேச இந்துமதக் குருமார் ஒன்றியம்*

## அவன் தாழ் வணங்கி வாழ்த்துகிறோம்



தமிழ் மக்கள் பெரும்பாலோரால் தினந்தோறும் தவறாமல் வாங்கி வாசிக்கப்படும் நாளிதழ் ''உதயன்''. தனக்கே உரித்தான தனித்துவமான திறமையினால் பல்வேறு சிறப்பம்சங்களை தினந்தோறும் வாசகர்களுக் காகப் படைத்தளிப்பவன் உதயன். மக்கள் சேவையே மகேசன் சேவையென உறுதியுடன் 26 ஆண்டுகளாகப் பணிபுரிபவன் ''உதயன்''.

27.11.2011 ஆம் திகதியன்று தனது 26 ஆவது அகவையைப் பூர்த்தி செய்யும் உதயனுக்கு, எல்லாம் வல்ல ஸ்ரீ வல்லிபுர சக்கர மாயவனின் நல்லாசிகள் கிட்டவும், தொடர்ந்தும் பல்லாண்டுகள் தமிழ் மக்களுக்கு ''உதயன்'' சேவை தொடரவும் வல்லிபுர மாயவனைப் பணிந்து எமது நல்லாசிகளையும், வாழத்துக்களையும் மிகவும் மகிழ்வுடன் கூறிக் கொள்கின்றோம்.

பிரம்மஸ்ரீ ச.க.சுதர்சனக்குரு, *பிரதம குரு,*
*ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் சுவாமி கோயில்.*

## தரணி போற்றும் உதயனே வாழி



உதயன் நாளிதழ் 27 ஆம் வருடத்தில் தடம்பதித்து சாதனை புரிவதையிட்டு உளமகிழ்கின்றேன். மக்கள் சேவையே மகேசன் சேவை என்ற தாரக மந்திரத்தை அடித்தளமாகக் கொண்டு தனது ஊடகப் பணியைத் துணிவுடனும், அர்பணிப்புடனும் ஆற்றிவரும் உதயன் நாளிதழ், யாழ். குடாநாட்டு மக்களுக்காக மட்டுமல்லாது, புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் ஈழத்தமிழ் மக்களுக்கும் தனது சேவையைத் திறம்பட ஆற்றி வருவது பாராட்டுக்குரியது.

உதயன் 27 ஆண்டு ஆண்டுகளென்ன, இன்னமும் பல்லாண்டுகள் தொடர்ந்தும் வெளிவர எல்லாம் வல்ல ஸ்ரீமுத்துமாரி அம்மனை இறைஞ்சி வேண்டிப் பிரார்த்தித்து எனது நல்லாசிகளைத் தெரிவிக்கின்றேன்.

சிவஸ்ரீ. சோமாஸ்கந்த தண்டபாணிக தேசிகர் *[ஜே.பி]*
*இந்து குரு பீடாதிபதி, அகில உலக சைவக் குருமார் சம்மேளனம், பிரதமகுரு, வல்வை ஸ்ரீமுத்துமாரி அம்மன் தேவஸ்தானம்.*

## யாழ்.ஆயரின் ஆசிச் செய்தி



உதயன் பத்திரிகைச் சமூகம் தமது 26ஆம் அகவையை நிறைவு செய்து 27ஆம் அகவையை ஆரம்பிப்பது மகிழ்ச்சிக்குரியது.

யாழ்.குடாநாட்டு மக்கள் கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாகப் பல்வேறு வகையில் துன்பப்படும்போது மக்களின் துன்பங்களை எடுத்துக் கூறும் ஓர் ஊடகமாக உதயன் பத்திரிகை செயற்பட்டு வந்துள்ளது.

உதயன் பத்திரிகை இடர்கள், துன்பங்கள், சவால்கள் மத்தியில் ஊடகப் பணியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயற்படுகின்றமை பாராட்டுக்குரியது.

இன்று எமது குடாநாட்டுச் சமூகம் சமூகச் சீரழிவுக்கு உட்பட்டிருப்பது கலப்படமில்லாத உண்மை. குறிப்பாக, எம் இளையவர்கள் சரியான வழிகளில் வழிநடத்தப்படவில்லை என்பதும் உண்மை. உதயன் பத்திரிகைச் சமூகம் எம் மக்களின் இவ் அவசர தேவையை உணர்ந்து எமது இளைய சமூகத்தைச் சீரிய வழியில் வழிநடத்தும் ஓர் மக்கள் ஊடகமாகத் தொடர்ந்து பணியாற்ற எனது ஆசிகளை வழங்கி நிற்கின்றேன்.

மேதகு இ.தோமஸ் சவுந்தரநாயகம்
*யாழ்.ஆயர்.*

## மென்மேலும் வளர்ச்சியுற அருள் கிட்டட்டும்

கடந்த 26 ஆண்டுகளாக எத்தனையோ துன்பங்களுக்கு மத்தியில் உதயன் பத்திரிகை மக்களுக்குச் செய்தி பரப்பிக் கொண்டிருப்பதையிட்டு அளவில்லாத ஆனந்த மகிழ்ச்சி அடைகின்றோம்.

ஒருவர் ஒரு குறிப்பிட்ட செயலைச் செய்வது அந்தச் செயலைத் தெரிந்திருப்பதிலேயே தங்கியுள்ளது. பலவற்றில் ஒன்றை விரும்பி அதை நாம் தேர்ந்தெடுக்கும் உரிமை தான் சுதந்திரம் எனப்படும்.

எவ்வகையான நற்செயல்களுக்கு எந்தவிதத் தடைகளும் விதிக்கலாகாது. இயற்கையான சுதந்திரம், சிவில், அரசியல், பொருளாதார சுதந்திரம் என்பவற்றின் அடிப்படையிலேயே பலவிதமான எதிர்ப்புக்கள் மத்தியிலும் செய்திகளைச் தரும் பத்திரிகையாக உதயன் பத்திரிகை திகழ்கின்றது.

மேலும் உதயன் பத்திரிகை மென்மேலும் வளர்ச்சியுற்று வாசகர் மத்தியில் வலம் வரவேண்டும்.

இதற்காக எல்லாம் வல்ல மாவிட்டபுரம் ஸ்ரீகந்த சுவாமியார் பூரண திருவருள் பொழிய வேண்டுமென்று பிரார்த்தித்து வாழ்த்தி ஆசீர்வதிக்கின்றேன்.

மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக் குருக்கள்,
*ஆதீன கர்த்தா.*
*மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில்.*

## உதயனின் சேவை தமிழ் மக்களின் இன்றைய தேவை



27.11.11 அன்று தனது 27 ஆவது அகவையில் காலடி வைக்கும் உதயன் எனும் வீரத்தமிழ் இளைஞனுக்கு, ஈழநெஞ்சங்கள் சார்பாக, குறிப்பாக தமிழ் பேசும் முஸ்லீம்கள் சார்பாக அகங்குளிர்ந்த வாழ்த்துக்களை நல்குகின்றேன். இஃது எமது ஆசிச் செய்தியாகவும் அமையப் பெறட்டும்.

புதிய சகாப்தத்தில் காலடி வைத்திருக்கும் ஈழத்தமிழர்களாகிய நாம் கல்வி, கலை, அரசியல், ஆன்மிகம் மற்றும் ஏனைய துறைகளில் அறிவு ஞானமும் தன்னிறைவும் பெற உனது சேவை எங்களுக்குத் தேவை! மும்மதங்களைப் பின்பற்றும் ஈழத்தமிழராகிய எமக்குள் ஒற்றுமையை உருவாக்கி தமிழ் பேசும் நெஞ்சங்களின் தலைவனாக, தவப் புதல்வனாக நீ திகழ நான் எல்லாம் வல்ல இறைவனிடம் வேண்டிக் கொள்கிறேன்.

சைவ, கிறிஸ்தவ சமயங்களைப் பின்பற்றும் தமிழ் நெஞ்சங்களின் பிரச்சினைகளை நீ எவ்வாறு உலகுக்கு அறியத் தந்தாயோ, அவ்வாறு இஸ்லாத்தைப் பின்பற்றும் தமிழ் நெஞ்சங்களாகிய எமது பிரச்சினைகளையும் உலகுக்கு நீ வெளிக் கொணர நாம் என்றும் உன்னுடன் ஒத்துழைப் போம்.

உதயனே உனது சேவை, இந்நூற்றாண்டின் தேவை!
''எல்லாப் புகழும் இறைவன் ஒருவனுக்கே''

மௌலவி .ஏ.எம்.ஏ.அஸீஸ் (காஸிமி),
*தலைவர், உலமாசபை,*
*யாழ்.கிளை.*

## யாழ்ப்பாணத்தின் அடையாளம்



உதயன் பத்திரிகை என்பது வெறுமனே செய்திகளை வெளியிடும் ஓர் ஊடகமன்று. அது யாழ்ப்பாண மக்களின் பண்பாட்டு அடையாளம்.

''பனை மரத்தையும், யாழையும் காணும் போதெல்லாம் எம் மனதில் யாழ்ப்பாணம் நிழல் ஆடுவதைப் போல'' உதயன் பத்திரிகையின் முகப்பை உலகின் எப்பாகத்தில் நின்று பார்த்தாலும் எம் கண்முன் யாழ்ப்பாணமே விரிக்கின்றது. அவ்வளவு தூரம் உதயன் பத்திரிகை யாழ்ப்பாணத்தின் அடையாளங்களில் ஒன்றாகிவிட்டது.

உதயன் பத்திரிகை, பல்வேறு இடர்களை எல்லாம் தாண்டி இன்று 26 ஆண்டுகளை நிறைவு செய்து நிற்பது என்பது ஓர் அளப்பரிய சாதனையே. எமது மக்களின் குரலாக வெளிவரும் உதயன் பத்திரிகை இன்னும் பல்லாண்டுகள் நிறைவான ஊடகப் பணியாற்ற வாழ்த்துகின்றோம்.

த.முகுந்தன், *பிரதேச செயலர், பச்சிலைப்பள்ளி, பளை.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன் 26 ஆவது அகவை நிறைவு சிறப்புமலர் 27.11.2011

தரமான செய்திகளை முந்திக்கொண்டு வழங்கும் உதயனின் பணிதொடர வாழ்த்துக்கள்

**செல்வி நகை அகம்**

(தரம் நாடுவோர் தவறாமல் நாடுமிடம்)



நம்பிக்கையான நாணயமுள்ள நகை வர்த்தகர்கள், நல்ல முறையில் உத்தரவாதத்துடன் நகைகளைச் செய்து கொடுப்பவர்கள்.

1/3, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே 2229441



வாழ்க உதயனின் ஊடகப் பணி!

நவீன அழகிய தங்க ஆபரணங்களை மலிவாகவும் தரமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

**புதிய வினோ நகைமாடம்**

கிளை நிறுவனம்:
மொபைல் பிளாஷா
